









# நடப்பு நிகழ்வுகள்

## ஜனவரி 2020

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.அரசாங்கம், அண்மையில், மத்திய கருவி அடையாள பதிவு தளத்தை (Central Equipment Identify Register Portal) அறிமுகப்படுத்தியது. எந்தத் துறையின்கீழ் இது இயங்குகிறது?**




அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை

**ஆ. தொலைத்தொடர்புத் துறை ☑**

இ. உயிரி-தொழில்நுட்பத் துறை

ஈ. பொதுநிறுவனத்துறை

❖ அலைபேசிகளைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் இந்திய அரசு, மத்திய கருவி அடையாள பதிவு தளத்தைத் தொடங்கியது. இது தடுப்புப்பட்டியலில் உள்ள அலைபேசிகளின் சர்வதேச அலைபேசி அடையாள எண்ணின் (IMEI) தரவுத்தளத்தைக் கொண்டுள்ளது.

**2.தனு யாத்ரா கொண்டாடப்படும் மாநிலம் எது?**



**அ. ஒடிசா ☑**

ஆ. தெலுங்கானா

இ. ஜார்கண்ட்

ஈ. மத்தியப் பிரதேசம்

❖ 11 நாள் நடைபெறும் புகழ்பெற்ற தனு யாத்ரா என்பது, ஆண்டுதோறும் மேற்கு ஒடிசா மாநிலத்தின் பர்கர் நகரத்திலும் அதைச்சுற்றியும் நடத்தப்படுகிற ஒரு திறந்தவெளி நாடக நிகழ்ச்சியாகும். இது கிருஷ்ணர் மற்றும் அவரது மாமா கம்சனின் புராணக்கதையை அடிப்படையாகக்கொண்ட நாடக நிகழ்வாகும். கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பரில், இதற்கு, தேசிய திருவிழா என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

**3.உலகின் மிகவயதான காண்டாமிருகம் என நம்பப்படும் 'Fausta' என்ற பெண் கருப்பு காண்டாமிருகம், சமீபத்தில், தான்சானிய காப்புப்பகுதியில் இறந்தது. கருப்பு காண்டாமிருகங்களின் IUCN நிலை என்ன?**



அ. அழிந்துவிடும் என்ற அச்சுறுநிலையற்றவை

ஆ. அருகிவருபவை

**இ. அச்சுறுத்தலுக்கு உள்ளானவை ☑**

ஈ. அருகும் தருவாயில் உள்ளவை

❖ "கருப்பு மூக்குக்கொம்பன்" எனவும் அழைக்கப்படும் இவ்வினங்கள் 'கருப்பு' என அழைக்கப்பட்டாலும் பழுப்பு மற்றும் சாம்பல் நிறங்களிலேயே உள்ளன. கென்யா, தான்சானியா, நமீபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வே உள்ளிட்ட தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் இவை காணப்படுகின்றன.

❖ தென்மேற்குப் பகுதியில் வாழும் கருப்பு காண்டாமிருகத்தின் நிலை பாதுகாப்பற்றவை (vulnerable) என வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்க (IUCN) நிலையானது, அச்சுறுத்தலுக்கு உள்ளானவை (critically endangered) என்றே உள்ளது.

**4. 2020ஆம் ஆண்டில் வரும் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும் 'No Vehicle Day – வண்டியற்ற நாள்' எனக் கடைப்பிடிக்கவுள்ள மாநிலம் எது?**

அ. கேரளா

ஆ. குஜராத்

இ. பஞ்சாப்

ஈ இராஜஸ்தான் ☑



❖ சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், வாகன மாசுபாட்டைக் குறைப்பதற்கும், இராஜஸ்தான் மாநிலப் போக்குவரத்துத்துறையானது 2020ஆம் ஆண்டில் வரும் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும், "வண்டிகளற்ற நாள்" என அனுசரிக்க முடிவுசெய்துள்ளது. அக்குறிப்பிட்டநாளின்போது, போக்குவரத்துத்துறைசார்ந்த பணியாளர்கள் அனைவரும் பாதசாரிகளாகவோ, மிதிவண்டியில் பயணப்பட்டோ / பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தியோ தங்களது அலுவலகத்தை அடைவார்கள்.

**5.நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முதல் கொடியேற்றியதன் 76ஆவது ஆண்டு நினைவுநாளை நினைவு கூரும் நிகழ்வு நடைபெற்ற இடம் எது?**

அ. காஷ்மீர்

ஆ. ஜம்மு

இ. லடாக்

ஈ. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ☑



❖ நேதாஜி சுபாஷ் சந்திரபோஸால் முதல் கொடியேற்றப்பட்டு 76 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி போர்ட் பிளேரில் விழா ஒன்று நடைபெற்றது. சுபாஷ் மேளா கமிட்டியால் ஸ்வராஜ்தீப் ஈருருளி பேரணி ஏற்பாடுசெய்யப்பட்டது. கலாசார நிகழ்ச்சிகளும் அப்போது நடத்தப்பட்டன.

**6.எந்த மாநிலம் தனது முதல் பனிச்சிறுத்தை கணக்கெடுப்பை நடத்தவுள்ளது?**

அ. உத்தரகண்ட் ☑

ஆ. ஹிமாச்சலபிரதேசம்

இ. ஹரியானா

ஈ. பஞ்சாப்



❖ குளிர்காலம் முடிந்ததும் உத்தரகண்ட் மாநிலம் தனது முதல் பனிச்சிறுத்தை கணக்கெடுப்பு நடத்த உள்ளது. உத்தரகண்ட் மாநிலத்தில் எண்பதுக்கும் மேற்பட்ட பனிச்சிறுத்தைகள் வசித்துவருவதாக நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். இருப்பினும், அதன் எண்ணிக்கை கணக்கெடுப்பு இன்னும் ஒருமுறை கூட அங்கு நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**7.பணியமர்த்துநர்களுக்கும் பணியாளர்களுக்கும் விரைவான தீர்வை வழங்கும், 'சந்துஷ்த்' தளத்தை தொடங்கவுள்ள அமைச்சகம் எது?**

அ. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஆ. நிதி அமைச்சகம்

**இ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

श्रम एवं रोजगार मंत्रालय
GOVERNMENT OF INDIA
MINISTRY OF LABOUR & EMPLOYMENT

❖ தொழிலாளர் சட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்காக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது அடுத்தமாதம், 'Santusht' வலைத்தளத்தை தொடங்கவுள்ளது. முறையான துறையில் பணிபுரிபவர்களுக்கு ஓய்வூதிய நிதியமைப்பு, EPFO மற்றும் சுகாதாரக் காப்பீடு மற்றும் சேவை வழங்குநரான ESIC வழங்கும் சேவைகளையும் இது ஆராயும்.

**8.தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களை உருவாக்குவதற்காக அண்மையில் அமைக்கப்பட்ட பணிக் குழுவிற்கு தலைமைதாங்கவுள்ளவர் யார்?**

அ. அமைச்சரவைச் செயலாளர்

**ஆ. பொருளாதார விவகாரச் செயலாளர் ☑**

இ. வருவாய்ச் செயலாளர்

ஈ. நிதிச் செயலாளர்



❖ மத்திய அரசு, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களுக்காக அடுத்த ஐந்தாண்டுகளில் ₹102.5 இலட்சம் கோடியை செலவிடவுள்ளதாக மத்திய நிதியமைச்சர் அறிவித்துள்ளார். 2019–2020 – 2024–25 வரை தேசிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான செயல் திட்டத்தை உருவாக்குவதற்காக, நிதியமைச்சகம் ஒரு பணிக்குழுவை அமைத்துள்ளது. இதற்கு பொருளாதார விவகாரச் செயலாளர் தலைமைதாங்குவார்.

**9.அண்மையில் 'ஓட்டர்ஸ்' படைப்பிரிவில் சேர்க்கப்பட்ட டார்னியர் விமானம், எந்த வகையைச் சேர்ந்தது?**

அ. உளவு விமானம்

**ஆ. ஒளி பயன்பாட்டு விமானம் ☑**


இ. கண்காணிப்பு விமானம்

ஈ. உத்திமுறை விமானம்



❖ ஒளி பயன்பாட்டு விமானமான டார்னியர், அண்மையில், பாலம் வான்படை நிலையத்தில் நடந்த ஒரு விழாவின்போது எண்.41 'ஓட்டர்ஸ்' படைப்பிரிவில் சேர்க்கப்பட்டது. டார்னியர்–228 விமானம் ஒரு பன்னோக்கு, எரிபொருள் திறன்மிக்க, கரடுமுரடான சூழ்நிலையில் பயணிக்கக்கூடிய, இலகுரக இரட்டைப்பொறிகொண்ட விமானமாகும்.

**10.தில்லியில் உள்ள முகர்பா சௌக்குக்கு கேப்டன் விக்ரம் பத்ராவின் பெயர் சூட்டப்படவுள்ளது. அவர், எந்தப் போரில் உயிரிழந்த இந்திய இராணுவ வீரராவார்?**




அ. 1962 சீன – இந்தியப் போர்

ஆ. 1947 இந்திய – பாகிஸ்தான் போர்

**இ. கார்கில் போர் ☑**

ஈ. வங்கதேச விடுதலைப்போர்

❖ தில்லி அரசின் பெயரிடும் குழு, தில்லி பிரகதி மைதான் மெட்ரோ நிலையத்தின் பெயரை, சுப்ரீம் கோர்ட் மெட்ரோ இரயில்நிலையம் என மாற்றுவதற்குப் பரிந்துரைசெய்துள்ளது. மேலும், கார்கில் போரில் உயிரிழந்த இந்திய இராணுவ வீரர் விக்ரம் பத்ராவின் நினைவாக முகர்பா சௌக், முகர்பா சௌக் மேம்பாலம் ஆகியவற்றுக்கு அவரின் பெயர் சூட்டப்படவுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அணுவுலைகள் & மையங்களுக்கு எதிரான தாக்குதலை தடைசெய்வதற்கான ஒப்பந்தம், 1988ஆம் ஆண்டில் எந்த இருநாடுகளுக்கும் இடையே கையெழுத்தானது?**



அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் சோவியத் ரஷ்யா


ஆ. சோவியத் ரஷ்யா மற்றும் சீனா

**இ. இந்தியா மற்றும் பாகிஸ்தான் ☑**

ஈ. இந்தியா மற்றும் சோவியத் ரஷ்யா

❖ ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.1 அன்று, இந்தியாவும் பாகிஸ்தானும் அணுவாற்றல் நிறுவல்கள் மற்றும் வசதிகளுக்கு எதிரான தாக்குதலை தடைசெய்வதற்காக 1988ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி தங்களின் அணுவாற்றல் நிறுவல்களின் பட்டியலை பரிமாறிக்கொள்கின்றன. இந்த ஒப்பந்தமானது, இருநாடுகளிலும் உள்ள அணுவாற்றல் நிலையங்களை ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்வதிலிருந்து தடைசெய்கிறது.

**2. 2022இல் செயல்படுத்தப்படவுள்ள ககன்யான் திட்டத்துக்காக, இரஷ்யாவில் மேற்கொள்ளப்படவுள்ள பயிற்சிக்கு, இந்தியாவின் எந்த அமைப்பைச் சேர்ந்த நான்கு இந்தியர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்?**



அ. இந்திய விண்வெளி ஆய்வுமையம்

**ஆ. இந்திய வான்படை ☑**

இ. மார்கோஸ்

ஈ. இந்திய கடற்படை

❖ மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் திட்டமான ககன்யான் திட்டத்துக்காக, அண்மையில், இந்திய விமானப்படையைச்சேர்ந்த 4 ஆண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள், இரஷ்யாவில் விண்வெளி வீரர்களுக்கான பயிற்சியை மேற்கொள்வார்கள்.

❖ 'ககன்யான்' என்பது முழுமையான தன்னாட்சிகொண்ட 3.7 டன் எடையுள்ள விண்கலமாகும். இது, மூன்று பேர் சுற்றுப்பாதைக்குச் சென்று புவிக்கு திரும்பக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் குறைந்தபட்சம் 7 நாட்கள் வரை சுற்றுப்பாதையில் இருக்கும்.

**3.காலநிலை நெருக்கடியைச்சமாளிப்பதற்கு புதிய தீர்வுகளைக் கொண்டுவருவோரை ஊக்குவிக்கும் நோக்கில் "எர்த்ஷாட் பரிசு" என்றவொன்றை அறிமுகப்படுத்தவுள்ளவர் யார்?**



**அ. கேம்பிரிட்ஜின் கோமகன் ☑**

ஆ. இரண்டாம் எலிசபெத் இராணி

இ. சசக்ஸின் கோமகன்

ஈ. இளவரசர் வேல்ஸ்

- கேம்பிரிட்ஜின் கோமகனான (Duke of Cambridge) இளவரசர் வில்லியம், 'Earthshot' எனப்படும் சுற்றுச் சூழல் பரிசை அறிமுகப்படுத்தவுள்ளார். 2021 முதல் அதற்கடுத்துவரும் 10 ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் 5 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பல மில்லியன் பவுண்டுகள் மதிப்பிலான விருது வழங்கப்படும். எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உலகின் மிகப்பெரிய சிக்கலான காலநிலை நெருக்கடியைக் கையாளுவதற்கு குறைந்தது 50 தீர்வுகளையாவது பெறுவதே இதன் நோக்கமாகும்.

**4.அண்மையில் உருவாக்கப்பட்ட சைன்யா கர்த்தா விபாக்கின் தலைவர் யார்?**

அ. பிரதமர்

ஆ. பாதுகாப்பு அமைச்சர்

இ. நிதியமைச்சர்

**ஈ. பாதுகாப்புப்படைத்தலைவர் ☑**



- 'சைன்யா கர்த்தா விபாக்' என்றழைக்கப்படும் புதிய இராணுவ விவகாரத்துறையானது பாதுகாப்புப் படைத்தலைவரால் தலைமைதாங்கப்படும். ஏற்கனவேயுள்ள பாதுகாப்புத் துறை, பாதுகாப்பு உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் மேம்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சகத்தின் மற்ற நான்கு துறைகளோடு தற்போது இந்தத் துறை கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது.

**5.அண்மையில், பவழப்பாறைகளுக்கு தீங்குவிளைவிக்கும் சூரியவொளி காப்புப் பூச்சை (Sun–Screen) தடைசெய்த நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

ஆ. நியூசிலாந்து

**இ. பலாவு ☑**

ஈ. நௌரு



- பவழப்பாறைகளுக்கு தீங்குவிளைவிக்கும் சூரியவொளி காப்புப் பூச்சை, பலாவு தடைசெய்துள்ளது. பெரும்பாலான சூரியவொளி காப்புப்பூச்சுகளில் காணப்படும் வேதிப்பொருட்கள் பவழப்பாறைகளுக்கு தீங்கு விளைவிப்பவையாக உள்ளன என்று அறிவியல் சான்றுகள் பகர்கின்றன. எனவே, புத்தாண்டு நாளிலிருந்து, பலாவு நாட்டில் இறக்குமதி செய்யப்படும் / விற்கப்படும் எந்தவொரு பவழப்பாறைகளுக்கு தீங்குவிளைவிக்கும் சூரியவொளி காப்புப் பூச்சுகளும் பறிமுதல் செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல் அதன் உரிமையாளருக்கு அபராதமும் விதிக்கப்படும்.

**6. Daesh'க்கு எதிரான சர்வதேச கூட்டணியில் ஐக்கிய அமெரிக்க நாடுகள் வகித்த பங்கை, ஐக்கிய அரபு அமீரகம், அண்மையில் பாராட்டியது. Daesh'இன் வேறுபெயர் என்ன?**

அ. அல் கொய்தா

ஆ. ஹெஸ்பொல்லா

**இ. ISIS ☑**

ஈ. ஹௌதிக்கள்



❖ பிராந்தியத்தில் தனது நலன்களையும் படைகளையும் பாதுகாப்பதற்காக ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) தனது ஆதரவை வெளிப்படுத்தியதோடு, Daesh (ISIS)'க்கு எதிரான சர்வதேச கூட்டணியில் அமெரிக்காவின் பங்கையும் பாராட்டியது. 'Daesh' என்ற சொல் அல்–தவ்லா அல்–இசுலாமியா அல்–ஈராக் அல்–ஷாம் (இசுலாமிய அரசு – ஈராக்) என்ற அரபு சொற்றொடரின் சுருக்கமாகும்.

**7. 2020 புத்தாண்டு மற்றும் புதிய தசாப்தத்தின் தொடக்கத்தைக் கொண்டாடிய உலகின் முதல் பெரிய நகரம் எது?**



அ. சிட்னி

**ஆ. ஆக்லாந்து ☑**

இ. கிறிஸ்ட்சர்ச்

ஈ. வெலிங்டன்

❖ 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தைக் கொண்டாடும் உலகின் முதல் பெரிய நகரமாக நியூசிலாந்தின் ஆக்லாந்து மாறியுள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தைத் தொடர்ந்து ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியா ஆகியவை 2020ஆம் ஆண்டை வரவேற்றன. காட்டுத்தீ பாதிப்பு இருந்தபோதிலும் ஆஸ்திரேலியாவின் சிட்னியில், வாணவேடிக்கை நிகழ்வுடன் புத்தாண்டு தொடங்கியது.

**8.கிருஷி கர்மான் விருதின்மூலம் விவசாயத்தின் எந்த அம்சத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது?**



அ. விநியோகம்

ஆ. விற்பனை

**இ. உற்பத்தி ☑**

ஈ. நீர் மேலாண்மை

❖ ஜன.2, 3 ஆகிய தேதிகளில் கர்நாடகாவுக்கு பிரதமர் மோடி விஜயம் செய்யவுள்ளார். முந்தைய பயிரிடு பருவங்களில், பல்வேறு பிரிவுகளில் நல்ல விவசாய உற்பத்தியை பதிவுசெய்த 21 மாநிலங்களுக்கு அவர் கிருஷி கர்மான் விருதை அப்போது வழங்குவார். 21 மாநிலங்களுள், தமிழ்நாடும் ஒன்றென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**9.அண்மையில் உருவாக்கப்பட்ட அகில பாரதீய குஜராத்தி சமாஜ் சங்கலன் சமிதியின் நோக்கம் என்ன?**

அ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் நாடுகடந்த இந்தியர்களை சேர்க்க

**ஆ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் குஜராத்தில் வசிக்காதோரை சேர்க்க ☑**

இ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் இந்திய வம்சாவளியினரைச் சேர்க்க

ஈ. மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் குஜராத்திற்கு வெளியேயுள்ள பிற இந்தியர்களை சேர்க்க

❖ முதலமைச்சரை தலைமைப் புரவலராகவும், குஜராத்துக்கு வெளியே வாழும் குஜராத்திகளுக்கான அமைச்சகத்தின் அமைச்சரை தலைவராகவும் கொண்டுள்ள அகில பாரதீய குஜராத்தி சமாஜ் சங்கலன் சமிதி, மாநிலத்திற்கு வெளியே வாழும் குஜராத்திகளை மாநிலத்தின் வளர்ச்சி செயல்பாட்டில் சேர்க்க

நோக்கம் கொண்டுள்ளது. குஜராத்தில் ஒருமுறையும், பிற மாநிலத்தில் ஒருமுறையும் என ஆண்டுக்கு இருமுறை இந்தச் சமிதி கூடும்.

**10.டோனி வைட்டனின் பெயரால் அழைக்கப்பெறும் *Landouria tonywhitteni* என்பது என்ன?**

**அ. நத்தை ☑**

ஆ. வெட்டுக்கிளி

இ. பாம்பு

ஈ. வண்டு



❖ டோனி வைட்டன் ஒரு பிரிட்டிஷ் சுற்றுச்சூழல் பாதுகாவலராவார்; அவர், சைக்கிள் விபத்து காரணமாக இறப்பதற்கு முன்பு ஆசியாவின் பல்லுயிர் தன்மையை ஆவணப்படுத்தினார். அவர் மரணித்த பிறகு அவரது பெயரில் ஒரு பரிசு நிறுவப்பட்டது. அண்மையில், அந்தப்பரிசை வென்றவர்களுள் ஒருவர், இந்தோனேசியாவில் அவரின் பெயரை ஒரு நத்தை இனத்துக்குச் சூட்டினார். இந்த வகை நத்தை இனங்கள் சுண்ணாம்புக் கற்கள் நிறைந்த இடங்களில் வாழ்கின்றன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் அதிக விளைச்சலை பெற்ற தமிழ்நாட்டுக்கு "சிறந்த வேளாண் தொழிலாளர்" விருதை பிரதமர் மோடி வழங்கினார். தமிழ்நாட்டுக்கு ஐந்தாவது முறையாக இந்த விருது அளிக்கப்படுகிறது. 2017–18ஆம் ஆண்டில் ஹெக்டேருக்கு 2,729 கிலோ உற்பத்தித்திறனுடன் 10.382 இலட்சம் டன் எண்ணெய் வித்துகளை தமிழ்நாடு உற்பத்திசெய்திருந்தது. மேலும், எண்ணெய் வித்து உற்பத்தியில் அதிக மகசூலை தந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு விவசாயிகளுக்கும் "வளர்ச்சிசார் விவசாயிகள்" விருது அளிக்கப்பட்டது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.ஜனவரி 2, 2020 அன்று, எந்தச் சீக்கிய குருவின் பிறந்தநாள் 'பிரகாஷ் பர்வ்' எனக்கொண்டாடப்பட்டது?**

அ. குரு ஹர்கிரிஷன் சாகிப்

ஆ. குரு ஹர் ராய்

**இ. குரு கோபிந்த் சிங் ☑**

ஈ. குரு தேஜ் பகதூர்



❖ பத்தாவது சீக்கிய குருவான குரு கோபிந்த் சிங்கின் பிறந்தநாள் 2020 ஜன.2 அன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஒரு சீக்கிய குருவின் பிறந்தநாள் "பிரகாஷ் பர்வ்" என்றும் அழைக்கப்படுகிறது.

❖ பாரம்பரிய சீக்கிய நாட்காட்டியின்படி (நானாக்ஷாஹி), குரு கோபிந்த் சிங்கின் பிறந்தநாள் இந்த ஆண்டு ஜன.2 (கிரிகோரியன் நாட்காட்டியின்படி அவர், 1666 ஜன.5 அன்று பிறந்தபோதிலும்) அன்று வருகிறது. 9ஆவது குருவும் குரு கோபிந்த் சிங்கின் தந்தையுமான குரு தேஜ் பகதூர் கொல்லப்பட்டதை அடுத்து, குரு கோபிந்த் சிங் தனது ஒன்பதாவது வயதில் பத்தாவது சீக்கிய குருவாக நியமிக்கப்பட்டார்.

**2. 2019-2020 நிதியாண்டின் முதல் பாதியில், இந்தியாவில், அதிக அந்நிய நேரடி முதலீட்டை (FDI) செய்துள்ள நாடு எது?**

அ. ஐக்கிய அரபு அமீரகம்

ஆ. சுவிச்சர்லாந்து

**இ. சிங்கப்பூர் ☑**

ஈ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்



❖ அண்மையில் வெளியிடப்பட்ட அரசாங்க தரவுகளின்படி, 2019-2020 நிதியாண்டின் முதல் பாதியில், $8 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடுகளுடன் (Foreign Direct Investment) இந்தியாவில் அதிகமான முதலீடுகளை மேற்கொண்ட நாடாக சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து, மொரிசியஸ் நாட்டிலிருந்து $6.36 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடுகள் இந்தியாவுக்குள் வந்துள்ளன.

❖ சிங்கப்பூர் மற்றும் மொரிசியசைத் தொடர்ந்து அமெரிக்கா, நெதர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன. நிலக்கரி சுரங்க மற்றும் ஒப்பந்த உற்பத்தியில் அந்நிய நேரடி முதலீடு வரம்புகள் சமீபத்தில் அரசாங்கத்தால் தளர்த்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

**3. SSLV'க்காக ISRO தனது இரண்டாவது ஏவுதளத்தை தமிழ்நாட்டில் அமைக்கவுள்ளது. SSLV என்பது எதன் சுருக்கமாகும்?**

அ. Space Satellite Launch Vehicle

ஆ. Speed Satellite Launch Vehicle

இ. Small Satellite Launch Vehicle ☑



ஈ. Solar Satellite Launch Vehicle

❖ இந்திய விண்வெளி ஆய்வு மையம் தனது இரண்டாவது ஏவுதளத்தை தென் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைக்கவுள்ளது. ஏவுதள மையத்தை நிர்மாணிப்பதற்கு கிட்டத்தட்ட 2300 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு வழங்கவுள்ளது.

❖ தொடக்கத்தில் சிறியரக ஏவுகலங்கள் (Small Satellite Launch Vehicle – SSLV) இங்கிருந்து விண்ணுக்கு செலுத்தப்படும். எதிர்வரும் காலத்தில் இந்த ஏவுதளத்தின் பணிகள் விரிவாக்கப்படலாம். இச்சிறியரக ஏவுகலங்கள் 500 கிலோ வரையிலான எடையை விண்ணுக்குச் சுமந்துசெல்ல பயன்படுத்தப்படும். 2020ஆம் ஆண்டின் முதல்பாதியில் இந்த ஏவுதளம் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4. ISRO அறிவிப்பின்படி, புதிய சந்திரயான்–3 திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு என்ன?**

**அ. ₹600 கோடி ☑**



ஆ. ₹500 கோடி

இ. ₹400 கோடி

ஈ. ₹300 கோடி

❖ சந்திரயான்–3 திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்துக்கான மதிப்பிடப்பட்ட செலவு ₹600 கோடிக்கு மேல் இருக்கும் என ISRO தலைவர் K சிவன் அறிவித்துள்ளார். அவரது அறிக்கையின்படி, இத்திட்டத்தைச் செயல்படுத்த 16 மாதங்கள் தேவைப்படும். எனவே, சந்திரயான்–3 திட்டமானது இந்த ஆண்டின் இறுதியிலோ அல்லது எதிர்வரும் 2021ஆம் ஆண்டின் தொடக்கத்திலோ செயல்படுத்தப்படும்.

**5. 2020ஆம் ஆண்டின் முதல் செயற்கைக்கோளாக 2020 ஜன.17 அன்று விண்ணில் ஏவப்படவுள்ள செயற்கைக்கோள் எது?**

**அ. GSAT – 30 ☑**



ஆ. GSAT – 29

இ. GSAT – 17

ஈ. GSAT – 11

❖ Ariane–5ECA ஏவுகணையின் மூலம் வரும் ஜன.17 அன்று பிரெஞ்சு கயானாவில் உள்ள கௌரௌ விண்வெளி மையத்திலிருந்து கனரக தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT 30ஐ இந்தியா ஏவவுள்ளதாக ISRO தலைவர் K சிவன் அறிவித்துள்ளார். இது, 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் செயற்கைக்கோளாகும். அரசாங்கம் மற்றும் தனியார் சேவைவழங்குநர்களுக்கு தகவல்தொடர்பு இணைப்புகளை வழங்கும் திறனை இது அதிகரிக்கும்.

**6.அண்மையில், இரயில்வே வாரியத்தின் தலைவராக மறுநியமனம் செய்யப்பட்டவர் யார்?**

**அ. வினோத் குமார் யாதவ் ☑**

ஆ. ராஜேஷ் அகர்வால்

இ. பூர்ணேந்து சேகர் மிஸ்ரா

ஈ. விஷ்வேஷ் சௌபே



❖ இரயில்வே வாரியத்தலைவராக உள்ள, வினோத் குமார் யாதவின் பதவிக்காலம், 2019 டிசம்பர்.31ஆம் தேதியுடன் முடிவடைந்தது. அவருடைய பதவிக்காலம், மேலும் ஓராண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இரயில்வேயில் பல்வேறு நிர்வாக சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இரயில்வே வாரியத்தில், தலைமைச் செயல் அதிகாரி பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

**7. நல்ல வேளாண் உற்பத்திக்காக மாநிலங்களுக்கு வழங்கப்படும் விருதின் பெயர் என்ன?**

அ. கிருஷி சம்மன்

ஆ. கிருஷி சம்ரிதி

**இ. கிருஷி கர்மான் ☑**

ஈ. கிருஷி கீர்த்தி



❖ கர்நாடகாவில் நடைபெற்ற ஒரு விழாவின்போது கிருஷி கர்மான் விருதுகளை 21 மாநிலங்களுக்கு பிரதமர் வழங்கினார். 'கிருஷி கர்மான் – வேளாண் தொழிலாளர்' விருது என்பது உணவுதானிய உற்பத்தியில் மாநிலங்களின் முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக நிறுவப்பட்டது. அதிகபட்ச மொத்த உணவுதானிய உற்பத்தி மற்றும் அதிகபட்ச தனிநபர் உணவுதானிய உற்பத்தியின் அடிப்படையில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

**8.107ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை நடத்தவுள்ள நகரம் எது?**

அ. புது தில்லி

ஆ. லக்னோ

இ. கொல்கத்தா

**ஈ. பெங்களூரு ☑**




❖ கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில், ஜன.3 முதல் 7 வரை நடக்கும் 107ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார். "Science and Technology: Rural Development – அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்: கிராமப்புற வளர்ச்சி" என்பது ஐந்துநாள் நடைபெறும் இந்நிகழ்வின் கருப்பொருளாகும்.

❖ பெண்கள் அறிவியல் மாநாடு, குழந்தைகள் அறிவியல் மாநாடு, அறிவியல் தொடர்பாளர்கள் சந்திப்பு மற்றும் உழவர் அறிவியல் மாநாடு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் இந்த மாநாடு நடத்தவுள்ளது.

**9.அண்மையில், இசை அகாடமியின் புகழ்பெற்ற 'சங்கீத கலாநிதி' விருதைப் பெற்றவர் யார்?**



அ. S சௌமியா ☑

ஆ. சுதா ரகுநாதன்

இ. பாம்பே ஜெயஸ்ரீ

ஈ. அருணா சாய்ராம்

❖ இசை அகாடமியால் நிறுவப்பட்ட 'சங்கீத கலாநிதி' விருதுக்கு முன்னணி கர்நாடக இசை பாடகி S சௌமியா தேர்வுசெய்யப்பட்டு அண்மையில் இவ்விருதைப்பெற்றார். தனது இசை வாழ்வில் பல்வேறு விருதுகள் மற்றும் பட்டங்களைப்பெற்றவரான S சௌமியா, இசை அகாடமியால் நடத்தப்படும் மெட்ராஸ் நவீன கர்நாடக இசைப் பள்ளியின் கௌரவ ஆசிரியையாக உள்ளார். அவர், தமிழ்நாடு இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழக கல்விக்குழுமத்தின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

**10.இந்தூரைத் தொடர்ந்து, 2020ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுவச் சர்வேக்ஷன் லீக்கில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் (முதல் காலாண்டில்) பிடித்துள்ள நகரங்கள் எவை?**

அ. அகமதாபாத் மற்றும் ஜெய்ப்பூர்

ஆ. குருகிராம் மற்றும் பெங்களூரு

இ. புனே மற்றும் புவனேஸ்வர்

ஈ. போபால் மற்றும் சூரத் ☑

SWACHH SURVEKSHAN 2020

❖ இந்தியாவின் தூய்மையான நகரங்கள் குறித்த சமீபத்திய பட்டியலை மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அரசு வெளியிட்டுள்ளார். இதில், பத்து இலட்சத்துக்கும் மேல் மக்கள்தொகைகொண்ட நகரங்களின் பிரிவின்கீழ், இந்தூர் முதல் & இரண்டாவது காலாண்டுகளில் முதலிடத்தில் உள்ளது.

❖ மத்தியபிரதேச மாநிலத்தின் புகழ்பெற்ற நகரமான இந்தூர் முந்தைய ஆண்டின் பட்டியலிலும் முதலிடம் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. முதல் காலாண்டில் போபாலும் சூரத்தும், இரண்டாவது காலாண்டில் இராஜ்கோட்டும் நவி மும்பையும் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தூய்மைக்கான சர்வேயில், குறைந்த மக்கள்தொகைகொண்ட நகரங்கள் பிரிவில் தென்மண்டலத்தில் தமிழ்நாட்டில் உள்ள மேலத்திருப்பந்துருத்தி, டி.கல்லுப்பட்டி, கங்குவார்பட்டி ஆகியவை தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.
  - அதேபோன்று, 25,000 முதல் 50,000 வரை மக்கள்தொகை கொண்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் முதலாவது காலாண்டுக்கான தூய்மை சர்வேயில் தமிழ்நாட்டின் சின்னமனூர் முதலிடமும், 2ஆவது காலாண்டுக்கான சர்வேயில் தமிழ்நாட்டின் திருவதிபுரம் மூன்றாமிடமும் பெற்றுள்ளது.
  - 50,000 முதல் 1 இலட்சம் மக்கள்தொகைகொண்ட நகர்ப்புற பகுதிகளில் முதலாவது காலாண்டு தூய்மைசர்வேயில் தமிழ்நாட்டின் நாமக்கல் முதலிடமும், திருவள்ளூர் மூன்றாமிடமும், 2ஆவது காலாண்டு சர்வேயில் நாமக்கல் மூன்றாமிடம் பெற்றுள்ளது.
  - அதேபோன்று, பாசறை வாரியப் பகுதிகளில் முதலாவது காலாண்டு தூய்மை சர்வேயில் தமிழ்நாட்டின் பரங்கிமலை பாசறை வாரியம் (cantonment) முதலிடம் பெற்றுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், எந்த அமைப்பின் 5 இளம் அறிவியலாளர்கள் ஆய்வகங்களை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்?**

அ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு, ISRO

**ஆ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, DRDO ☑**

இ. பாபா அணு ஆராய்ச்சி மையம், BARC

ஈ. அணுசக்தித் துறை, DAE

❖ சமீபத்தில், கர்நாடக மாநிலம் பெங்களூருவிலிருந்து பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்புக்காக DRDO இளம் அறிவியலாளர்கள் ஆய்வகங்கள் என்ற ஐந்து புதிய பாதுகாப்பு ஆய்வகங்களை திறந்து வைத்தார். பெங்களூரு, மும்பை, சென்னை, ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா ஆகிய ஐந்து இந்திய நகரங்களிலிருந்து இந்த ஆய்வகங்கள் இயங்கும். நம் நாட்டிற்கான புதிய & புதுமையான பாதுகாப்பு தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் இந்த ஆய்வகங்கள் தங்களது கவனத்தைச் செலுத்தும்.

**2.சமீபத்தில், 2020ஆம் ஆண்டை செயற்கை நுண்ணறிவு ஆண்டாக அறிவித்து செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சிக்காக தொழில்நுட்ப நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட மாநிலம் எது?**

அ. ஆந்திரபிரதேசம்

**ஆ. தெலுங்கானா ☑**

இ. ஒடிசா

ஈ. அஸ்ஸாம்

❖ அண்மையில், தெலுங்கானா மாநில அரசு 2020ஆம் ஆண்டை செயற்கை நுண்ணறிவு (AI) ஆண்டாக அறிவிக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வில், மாநிலத்தில், செயற்கை நுண்ணறிவு (AI) ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக பல தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

❖ இந்த ஒப்பந்தங்களின்படி, பயன்பாட்டு செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மையம் மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டுப் பூங்கா விரைவில் தெலுங்கானா மாநிலத்தில் அமைக்கப்படும்.

**3.வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, 2019ஆம் ஆண்டில் இந்தியாவில் இறந்த புலிகளின் எண்ணிக்கை எவ்வளவு?**

**அ. 95 ☑**

ஆ. 100

இ. 105

ஈ. 110



❖ வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு 2019ஆம் ஆண்டில், இந்தியாவில் இறந்த புலிகளின் மொத்த எண்ணிக்கை நூறுக்கும் குறைவாக உள்ளது.

❖ கடந்த 2019ஆம் ஆண்டில், இந்தியாவில், மொத்தம் 95 புலிகள் இறந்துள்ளன. அவற்றில் 84 புலிகள் இயற்கையாகவும் 11 புலிகள் பல்வேறு காரணங்களாலும் இறந்துள்ளன. கடந்த 2018ஆம் ஆண்டில், இறந்த புலிகளின் எண்ணிக்கை மொத்தம் நூறாகவும், 2017ஆம் ஆண்டில் 115 ஆகவும் இருந்தது.

**4.அண்மையில் காலமான டேவிட் ஸ்டெர்ன், எந்தப் பிரபலமான விளையாட்டுக் கூட்டமைப்பின் ஆணையாளராக இருந்தார்?**



அ. பார்முலா 1, F1

**ஆ. தேசிய கூடைப்பந்து சங்கம், NBA ☑**

இ. மேஜர் லீக் பேஸ்பால், MLB

ஈ. தேசிய ஹாக்கி கூட்டமைப்பு, NHL

❖ கூடைப்பந்து உலகில் பிரபலமான நபரான டேவிட் ஸ்டெர்ன் சமீபத்தில் காலமானார். அவர் 1984 முதல் 2014 வரை தேசிய கூடைப்பந்து சங்கத்தின் ஆணையாளராக பணியாற்றினார். சர்வதேச அரங்கில் தேசிய கூடைப்பந்து சங்கத்தின் (NBA) நோக்கத்தை விரிவுபடுத்துவதற்கும் அதை புகழுடையதாகவும் வெற்றிகரமாகவும் மாற்றுவதில் அவர் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தார். பெண்கள் தேசிய கூடைப்பந்து சங்கம் அவரது தலைமையில் நிறுவப்பட்டதாகும்.

**5.ஓய்வுபெறுவதாக அண்மையில் அறிவித்த சுனிதா லக்ரா, எந்த விளையாட்டைச் சார்ந்த பிரபல இந்திய வீராங்கனையாவார்?**



அ. டென்னிஸ்

ஆ. பூப்பந்து

**இ. ஹாக்கி ☑**

ஈ. மட்டைப்பந்து

❖ இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் தலைவியும், அணியின் தடுப்பாளருமான சுனிதா லக்ரா, சமீபத்தில், முழங்கால் காயம் காரணமாக சர்வதேச ஹாக்கியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். 2018 ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையில், இந்தியா, அவரது தலைமையின்கீழ் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. 2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற இந்திய அணியின் ஓர் அங்கமாகவும் அவர் இருந்தார். டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியவில்லை என்றபோதிலும், சுனிதா, முழங்கால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு உள்நாட்டு ஹாக்கிப் போட்டிகளில் விளையாடுவார் எனக்கூறப்படுகிறது.

**6. 2020 ஜனவரி.2 முதல் வாடிக்கையாளரின் வீடுகளுக்கே சென்று மணலை வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ள மாநிலம் எது?**

அ. ஒடிசா

ஆ. மகாராஷ்டிரா

**இ. ஆந்திரபிரதேசம் ☑**

ஈ. கேரளா



❖ வாடிக்கையாளரின் வீடுகளுக்கே சென்று மணலை வழங்குவதாக ஆந்திர பிரதேச மாநில அரசு அண்மையில் அறிவித்துள்ளது. கிருஷ்ணா மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக தொடங்கப்படும் இந்தத் திட்டம், விரைவில் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். ஆந்திர பிரதேச மாநில கனிம மேம்பாட்டுக்கழகம், இந்த மணல் விநியோகத் திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனமாக இருக்கும்.

❖ ஆந்திர பிரதேச மாநிலம் அண்மையில் தனது புதிய மணல் கொள்கையை, கடந்த 2019 செப்டம்பரில் அறிமுகப்படுத்தியது. மேலும், சட்டத்துக்குப்புறம்பான மணல் வர்த்தகத்தைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளையும் அம்மாநில அரசு எடுத்துவருகிறது.

**7.அண்மையில் எந்த நாட்டின் அதிபராக உமரோ சிசோகோ எம்பலோ தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. காம்பியா

ஆ. செனகல்

**இ. கினியா – பிஸ்ஸாவ் ☑**

ஈ. கினியா



❖ கினியா–பிசாவின் முன்னாள் பிரதமரும் இராணுவத் தலைவருமான உமரோ சிசோகோ எம்பலோ, சமீபத்தில், அந்நாட்டின் அதிபர் தேர்தலின் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றார். முன்னதாக நடந்த முதல் சுற்றுத்தேர்தலில் அந்நாட்டின் தற்போதைய அதிபரான ஜோஸ் மரியோ வாஸ் வெற்றிபெறத் தவறினார். உமரோ சிசோகோ எம்பலோ, ஜோஸ் மரியோ வாஸின் தலைமையில் 2016–2018 வரை பிரதமராக பணியாற்றினார். கினியா–பிசாவு என்பது மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாடாகும். இது, 1974ஆம் ஆண்டில், போர்ச்சுகலிடமிருந்து விடுதலை பெற்றது.

**8.அண்மையில், யாருக்கு, 'லோகமான்ய திலகர் தேசிய பத்திரிகை விருது' வழங்கப்பட்டது?**

அ. ராவிஷ் குமார்

ஆ. அர்னாப் கோஸ்வாமி

இ. சேகர் குப்தா

**ஈ. சஞ்சய் குப்தா ☑**



❖ முன்னணி ஹிந்தி நாளிதழான 'ஜக்ரன்' தலைமை ஆசிரியரான சஞ்சய் குப்தாவுக்கு, அண்மையில், 'லோக்மான்ய திலகர் தேசிய பத்திரிகை விருது' வழங்கப்பட்டது. பத்திரிகைத்துறையில் தனிநபர்கள் ஆற்றும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் நோக்கில், புனேவைச் சேர்ந்த கேசரி–மராத்தா அறக்கட்டளை

இந்த விருதை நிறுவியது. பிரபல விடுதலைப்போராட்ட வீரர் லோக்மான்ய திலகரால் தொடங்கப்பட்ட 'கேசரி' நாளிதழின் தொடக்கநாளை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின்போது அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

**9.அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட, இந்திய இரயில்வேயின் புதிய ஒருங்கிணைந்த உதவிமைய எண் (integrated helpline number) என்ன?**

அ. 139 ☑

ஆ. 138

இ. 156

ஈ. 123

❖ இரயில் பயணிகளுக்கான உதவிமைய எண் (helpline) '139' என ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. எனினும் இரயில்வே பாதுகாப்புப் படைக்கான அவசர உதவி அழைப்பு தொலைபேசி எண் '182' எனத் தொடரும் என்றும் இந்திய இரயில்வே அறிவித்துள்ளது. '139' என்னும் உதவி எண்ணில் பயணிகள் அழைத்தால், 12 மொழிகளில் IVRS மொழியில் தங்களுக்குத் தேவையான உதவிகளைக் கேட்கலாம். அலைபேசி மட்டுமல்லாது, எவ்விதமான தொலைபேசியில் இருந்தும் இந்த உதவி எண்ணை அழைத்து பயணிகள் உதவி கோரலாம்.

**10.பிரதமர்–கிசான் திட்டத்தின்கீழ், தகுதியான விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் நிதி உதவி எவ்வளவு?**

அ. ₹6,000 ☑

ஆ. ₹5,000

இ. ₹10,000

ஈ. ₹8,000



❖ பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித்திட்டத்தின் மூன்றாவது தவணை, கர்நாடகாவின் தும்குருவில் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கிவைக்கப்பட்டது. இதன்மூலம் கிட்டத்தட்ட ஆறு கோடி பயனாளிகள் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தகுதிவாய்ந்த விவசாயிகளுக்கு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ₹2,000 வீதம் ஆண்டுக்கு ₹6,000 நிதியுதவி வழங்குவதற்காக பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித்திட்டம் கடந்த 2019 பிப்ரவரி மாதம் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.

## நடப்பு நிகழ்வுகள்

### 1.அமெரிக்க வான்வழித்தாக்குதலில் கொல்லப்பட்ட காசிம் சுலைமானி (Qassim Soleimani), எந்த நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்தார்?

அ. ஈராக்

**ஆ. ஈரான் ☑**

இ. இஸ்ரேல்

ஈ. சிரியா



❖ ஈரானின் சக்திவாய்ந்த இராணுவத்தளபதியான ஜெனரல் காசிம் சுலைமானி, அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார். பாக்தாத் வானூர்தி நிலையம் அருகே ஈரான் இராணுவ வீரர்கள் பயணித்த வாகனங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்த அமெரிக்க அதிபர் உத்தரவிட்டதாக கூறப்படுகிறது. மற்றொரு தளபதியும் சுலைமானியின் ஆலோசகருமான அபு மஹ்தி அல் முஹந்திசும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார். காசிம் சுலைமானி, இசுலாமிய புரட்சிகர காவல்படையின் குட்ஸ் படையின் தளபதியாக இருந்தார்.

### 2.மானவ் தாக்கர், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவராவார்?

அ. பூப்பந்து

ஆ. டென்னிஸ்

**இ. டேபிள் டென்னிஸ் ☑**

ஈ. ஸ்குவாஷ்




❖ டேபிள் டென்னிஸ் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர் மற்றும் வீராங்கனைங்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு (ITTF) வெளியிட்டது. இதில் 21 வயதுக்குட்பட்ட ஆடவர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் இந்தியாவின் மனவ் தாக்கர், முதலிடத்தை பிடித்துள்ளார். தவிர, 21 வயதுக்குட்பட்டோர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் முதலிடம் பிடித்த நான்காவது இந்திய வீரராகவும் அவரானார்.

### 3.உலக பிரைலி நாள் கொண்டாடப்படும் தேதி எது?

அ. ஜனவரி 2

ஆ. ஜனவரி 3

**இ. ஜனவரி 4 ☑**

ஈ. ஜனவரி 5




❖ பார்வையிழந்தோருக்காக 'பிரைலி – Braille' முறையை கண்டறிந்த பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த பார்வையிழந்த அறிவியலாளர் லூயி பிரைலியின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜன.4 அன்று உலக பிரைலி நாள் கொண்டாடப்படுகிறது. 1809ஆம் ஆண்டு ஜன.4 அன்று வடக்குப் பிரான்சில் உள்ள கூப்விரேவில் லூயி பிரைலி பிறந்தார்.

- அவரது மூன்றாம் வயதில், எதிர்பாராத விதமாக அவர் தனது இரு கண்களையும் இழந்தார். இதன் விளைவாக, பார்வையற்றோர் தடவிப்பார்த்துப் படிப்பதற்கேற்ற 'பிரைலி – Braille' முறையை அவர் கண்டறிந்தார். இந்த முறையில் 1–6 புடைப்புப்புள்ளிகளையும், துளைகளையும் கொண்டு எழுதிய எழுத்துக்களை விரல்களை வைத்துத் தடவுவதன் மூலம் பார்வையற்றோர் புரிந்துகொள்வர். உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி (WHO), 36 மில்லியன் மக்கள் பார்வையற்றும், 216 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான பார்வைக்குறைபாடும் உடையவர்களாக உள்ளனர்.

**4.ரைசினா உரையாடல் என்பது எந்த அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்திர பல–தரப்பு மாநாடாகும்?**




அ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ. வெளியுறவு அமைச்சகம் ☑**

இ. நிதி அமைச்சகம்

ஈ. பெருநிறுவன விவகார அமைச்சகம்

- 'ரைசினா உரையாடல்' என்பது மத்திய வெளியுறவு அமைச்சகத்தால் முன்னணி மதியுரையகமான அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளையுடன் இணைந்து, கடந்த 2016ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்படுகிற ஒரு மாநாடு ஆகும். பன்னாட்டுச்சமூகம் எதிர்கொள்ளும் சவால்களைப்பற்றி விவாதிப்ப –தற்காக, அனைத்து துறைசார்ந்த பல்வேறு தலைவர்களை இந்த மாநாடு ஒருங்கிணைக்கிறது.
- 'Navigating the Alpha Century' என்பது ஜன.14–16 வரை புது தில்லியில் நடைபெறவுள்ள இந்த ஆண்டு (2020) மாநாட்டுக்கான கருப்பொருளாகும். இந்த மாநாட்டின் முக்கிய பேச்சாளராக இருப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஆஸ்திரேலிய பிரதமர், அண்மையில் அந்நாட்டில் ஏற்பட்ட கடுமையான காட்டுத்தீ விபத்தின் காரணமாக தனது வருகையை இரத்து செய்தார்.

**5. பாடோலா சேலைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, காதி மற்றும் கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையத்தின் முதல் பட்டு பதப்படுத்தும் தொழிற்சாலை எந்த மாநிலத்தில் அமைக்கப்படவுள்ளது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. குஜராத் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. மத்தியபிரதேசம்

- காதி & கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையமானது (KVIC) குஜராத் மாநிலத்தின் சுரேந்திரநகர் மாவட்டத்தில், தனது முதல் பட்டு பதப்படுத்தும் தொழிற்சாலையை திறந்துவைத்தது. படோலா என்பது குஜராத்தின் வணிகக்குறியுடைய சேலை வகையாகும். மிகவுயர்ந்த விலையைக்கொண்டிருப்பதால் இது ஓர் அரச உடையாக கருதப்படுகிறது. குஜராத்தில் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இல்லாததே இதன் அதிக விலைக்குக் காரணமாகும்.

❖ சேலை நெசவு செய்யத் தேவையான பட்டுநூல் பொதுவாக பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகிறது. KVIC அமைத்துள்ள இந்தப் புதிய ஆலை, பட்டு நூலின் விலையை குறைத்து படோலா சேலைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6.எந்த மாநிலத்தின் போக்குவரத்துத்துறை, அண்மையில், பெண்களுக்காக 'தாமினி' என்ற உதவிமைய எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ. ஒடிசா

ஆ. மகாராஷ்டிரா

**இ. உத்தரபிரதேசம் ☑**

ஈ. கேரளா




❖ சாலைப்போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில், உத்தரபிரதேச மாநில சாலைப்போக்குவரத்துக் கழகம் (UPSRTC) பெண்களுக்காக 'தாமினி–Damini' என்ற பிரத்தேயகமான உதவிமைய எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள '81142 – 77777' என்ற எண், அழைப்பு மற்றும் வாட்ஸ்அப் சேவை என இரண்டையும் கொண்டிருக்கும்.

❖ நாள்தோறும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும் இந்த உதவிமைய எண்ணை, UPSRTCஇன் தலைமையகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் பெண் அதிகாரிகள் கையாளுவார்கள். மத்திய அரசின் 'நிர்பயா திட்ட'த்தின் ஒருபகுதியாக இது தொடங்கப்பட்டுள்ளது.

**7.பவழப்பாறைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு தீங்குவிளைவிக்கும் நச்சுத்தன்மைமிக்க சூரியவொளி காப்புப்பூச்சுகளை தடைசெய்துள்ள முதல் நாடு எது?**

**அ. பலாவு ☑**

ஆ. பிலிப்பைன்ஸ்

இ. தைவான்

ஈ. பப்புவா நியூ கினி



❖ மேற்கு பசிபிக் பெருங்கடலில் உள்ள ஒரு சிறிய தீவு நாடான பலாவு, பவழப்பாறைகள் மற்றும் பிற நீர்வாழ் உயிரினங்களை பாதிக்கும் வேதிகள் அடங்கிய சூரியவொளி காப்புப்பூச்சுகளுக்கு (sunscreen) தடைவிதித்துள்ளது. UNESCO'இன் உலக பாரம்பரிய தளமாக விளங்கும் அதன் ராக் தீவுகளில் உள்ள தெற்கு கடற்கரைக்காயல்களை பாதுகாப்பதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ஆக்ஸிபென்சோன் உள்ளிட்ட நச்சுவேதிகள்கொண்ட சூரியவொளி காப்புப்பூச்சுகளை அந்நாட்டில் பயன்படுத்தவோ விற்கவோ இனி அனுமதிக்கப்படாது.

**8.நடப்பாண்டின் (2020) இந்திய காவலர் ஜூடோ கிளஸ்டர் சாம்பியன்ஷிப்பை வழங்கும் இந்திய நகரம் எது?**

அ. கௌகாத்தி ஆ. கட்டாக்

**இ. புது தில்லி ☑** ஈ. கோவா



- அகில இந்திய காவலர் ஜூடோ கிளஸ்டர் சாம்பியன்ஷிப்பின் நான்காவது பதிப்பை, புது தில்லியில், மத்திய சேமக்காவல்படை நடத்துகிறது. இந்நிகழ்வு 2020 ஜன.4 முதல் 7 வரை நடைபெறும். நாடு முழுவதுமிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இந்தப்போட்டியில் பங்கேற்கின்றனர். இந்நிகழ்வை உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் தொடங்கிவைத்தார். சாம்பியன்ஷிப்பின் முந்தைய பதிப்பை ஒடிசா மாநில காவல்துறை ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**9.தேசிய பேரிடர் மீட்புப்படை அகாடமி நிறுவப்படவுள்ள நகரம் எது?**

அ. முசோரி

ஆ. டேராடூன்

**இ. நாக்பூர் ☑**

ஈ. ஹைதராபாத்

- மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவால், அண்மையில், தேசிய பேரிடர் மீட்புப்படை அகாடமிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. நாக்பூரைச் சேர்ந்த தேசிய தீயணைப்புக் கல்லூரியின் வளாகத்தையும் அவர் அப்போது திறந்துவைத்தார். இந்த அகாடமி, பேரிடர்களை உருவக –ப்படுத்துவதற்கும், பல்வேறு மீட்பு நடவடிக்கைகளில் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்குமான அதிநவீன உட்கட்டமைப்பைக்கொண்டிருக்கும். பேரிடர் மீட்பு தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான அர்ப்பணிப்பு ஆற்றலாக விளங்கும் தேசிய பேரிடர் மீட்புப்படை, 2006ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

**10.அண்மையில் காலமான ரத்னா ஓஜா, எந்த மாநிலத்தைச் சேர்ந்த நாடகக்கலைஞரும் ஆர்வலருமாக இருந்தார்?**



அ. ஒடிசா

ஆ. மேகாலயா

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. மேற்கு வங்கம்

- மூத்த நாடகக்கலைஞரும் அஸ்ஸாமைச் சேர்ந்த சமூக ஆர்வலருமான ரத்னா ஓஜா கௌகாத்தியில் காலமானார். மாநிலத்தின் நாடக இயக்கத்தை புதுப்பிப்பதில் அவர் ஒரு கருவியாகப் பங்குவகித்தார். குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரானது உட்பட நாட்டின் பல சமூகம்சார்ந்த பிரச்சனைகளில் ஆர்ப்பாட்டங்களில் அவர் தீவிரமாக பங்கேற்று உரையாற்றியுள்ளார். நாடகக்கலைக்கு அவராற்றிய பெரும் பங்களிப்புக்காக, அஸ்ஸாம் மாநில அரசால் அவருக்கு 'நடாசூர்யா விருது' வழங்கப்பட்டது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. DRDO'இல், ஏரோநாட்டிகல் சிஸ்டம்ஸின் தலைமை இயக்குநராக உள்ள இந்தியாவின் 'ஏவுகணை பெண்மணி' யார்?**

அ. Dr.டெஸ்ஸி தாமஸ் ☑

ஆ. ரிது கரிதால்

இ. முத்தையா வனிதா

ஈ. அனுராதா T K



❖ பெங்களூரில் நடைபெற்ற பெண்கள் அறிவியல் மாநாட்டின் முதன்மை விருந்தினராக, புகழ்பெற்ற இந்திய அறிவியலாளரும், ஏரோநாட்டிகல் சிஸ்டம்ஸின் தலைமை இயக்குநருமான Dr.டெஸ்ஸி தாமஸ் கலந்துகொண்டார். இது, தற்போது நடைபெற்று வரும் 107ஆவது இந்திய அறிவியல் மாநாட்டின் ஒரு பகுதியாகும். இந்தியாவின் அக்னி–IV ஏவுகணை திட்டத்தின் இயக்குநராக அவர் பணியாற்றியதன் மூலம், இந்தியாவில், ஓர் ஏவுகணைத் திட்டத்திற்கு தலைமைதாங்கிய முதல் பெண் அறிவியலாளராக Dr.டெஸ்ஸி தாமஸ் ஆனார்.

**2.நங்கனா சாகிப் குருத்வாரா அமைந்துள்ள நாடு எது?**

அ. இந்தியா

ஆ. பாகிஸ்தான் ☑

இ. நேபாளம்

ஈ. பூடான்



❖ பாகிஸ்தானில் லாகூர் அருகே நங்கனா சாகிப் நகரத்தில் அமைந்துள்ள நங்கனா சாகிப் குருத்வாரா, மிகவும் புகழ்மிக்க ஒரு குருத்வாரா ஆகும். முதல் சீக்கிய குரு பிறந்து சீக்கிய மதத்தைப் போதித்ததாக நம்பப்படுகிற இவ்விடத்தில் இந்தக் குருத்வாரா கட்டப்பட்டுள்ளது. இது, ஜனம் அஸ்தான் குருத்வாரா என்றும் அழைக்கப்படுகிறது. அண்மையில் இந்தக் குருத்வாராவில் நடந்த கடுமையான தாக்குதல் சம்பவத்தின் காரணமாக இது அண்மைச்செய்திகளில் இடம்பெறுகிறது.

**3.சமீபத்தில், அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்த பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

அ. இர்பான் பதான் ☑

ஆ. யூசுப் பதான்

இ. புவனேஷ் குமார்

ஈ. R அஸ்வின்




❖ அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் இர்பான் பதான் அறிவித்துள்ளார். பத்தொன்பது வயதில் இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்று, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 2003ஆம் ஆண்டில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இர்பான் பதான்

அறிமுகமானார். 16 ஆண்டுகால தொழிற்முறை கிரிக்கெட் வாழ்வில், டெஸ்ட் போட்டியின் முதல் ஓவரில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்தது உட்பட பல சாதனைகளை அவர் படைத்தார். 2007ஆம் ஆண்டு T20 உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியின் ஒருபகுதியாகவும் இர்பான் பதான் இருந்தார்.

**4.கீழ்க்கண்டவற்றுள், அண்மையில், ஆஸ்திரேலியாவில் பல உயிர்கள் பலியாகவும் பேரழிவுக்கும் காரணமாக இருந்தது எது?**

அ. பெருவெள்ளம்



ஆ. சூறாவளி

**இ. காட்டுத்தீ ☑**

ஈ. ஆழிப்பேரலை

❖ அண்மையில் கடுமையான காட்டுத்தீ பாதிப்பை ஆஸ்திரேலியா கண்டது. இதன் காரணமாக கிட்டத்தட்ட 25 பேர் இறந்துள்ளனர். மேலும், பல்வேறு மக்கள் தங்களின் வீடுகளை இழந்துள்ளனர். நியூ சௌத் வேல்ஸ், விக்டோரியா கடற்கரையையொட்டிய பகுதிகளில் காட்டுத்தீ தொடர்ந்து பரவி வருகிறது. காட்டுத்தீயின் தீவிரத்தால் பல மில்லியன் விலங்குகளும் இறந்துள்ளதாக கூறப்படுகிறது. புவி வெப்பமடைதலே இக்காட்டுத்தீக்கு காரணம் என அறிவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**5.நன்னீர் ஆமைகளுக்கான நாட்டின் முதல் மறுவாழ்வு மையம் அமையவுள்ள மாநிலம் எது?**

அ. மத்தியபிரதேசம்



**ஆ. பீகார் ☑**

இ. சத்தீஸ்கர்

ஈ. ஒடிசா

❖ பீகார் மாநிலம் பாகல்பூர் வனப்பகுதியில், நன்னீர் ஆமைகளுக்கான இந்தியாவின் முதல் மறுவாழ்வு மையம் அமையவுள்ளது. விரைவில் திறக்கப்படவுள்ள இந்த மையத்தில் ஒரே நேரத்தில் 500 நன்னீர் ஆமைகள் வரை பராமரிக்க இயலும். கங்கையாற்றின் அருகே அமைந்துள்ள இவ்வனப்பகுதி, நன்னீர் ஆமைகளுக்கு சரியான இனப்பெருக்கம் செய்யும் இடமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

❖ கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு, துன்புறுத்தப்படும் நன்னீர் ஆமைகள், இந்த மறுவாழ்வு மையத்தின் குழுவினரால் மீட்கப்பட்டு அவைகளுக்கு சரியான சிகிச்சை அளிக்கப்படும்.

**6.சூரிய பூங்காக்களை நிறுவுவதற்காக இந்தியாவிடமிருந்து $75 மில்லியன் டாலர் கடன் பெற்றுள்ள நாடு எது?**

அ. அர்ஜென்டீனா



ஆ. சிலி

**இ. கியூபா ☑**

ஈ. பிரேசில்

- ❖ சூரிய பூங்காக்களை நிறுவுவதற்கு நிதியளிப்பதற்காக இந்தியா தனது எக்ஸிம் வங்கி மூலம் கியூபா நாட்டுக்கு $75 மில்லியன் டாலர் கடனை வழங்கியுள்ளது. இந்திய ஏற்றுமதி–இறக்குமதி வங்கி (EXIM) மற்றும் கியூப அரசாங்கத்தின் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனமான பாங்கோ எக்ஸ்டீரியர் டி கியூபா இடையே கடந்த ஆண்டு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

- ❖ இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், கிட்டத்தட்ட ₹500 கோடி நிதியை எக்ஸிம் வங்கி வழங்குகிறது. இந்தக் கடனுதவிமூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் 75 மெகாவாட் (MW) திறன்மிக்க சூரிய பூங்காக்கள் கியூபாவில் நிறுவப்படும்.

**7. FASTag'களை விற்பனை செய்வதற்காக அண்மையில் எந்த வங்கியுடன் பொது சேவை மையம் (Common Service Centre) கூட்டிணைந்துள்ளது?**

அ. ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி **ஆ. Paytm பேமெண்ட்ஸ் வங்கி ☑**

இ. பாரத ஸ்டேட் வங்கி ஈ. ஈக்விடாஸ் வங்கி

- ❖ FASTag எனப்படும் டிஜிட்டல் சுங்கச்சாவடி கட்டணச் சீட்டை விற்பனை செய்வதற்காக பொது சேவை மையமானது அண்மையில் Paytm பேமென்ட்ஸ் வங்கியுடனான (PPBL) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. PPBL FASTag'களை விற்பதற்காக, பொது சேவை மையம் அதன் தளத்தை அவ்வங்கியுடன் ஒருங்கிணைக்கும். கடந்த ஆண்டு (2019) டிசம்பர் முதல் அனைத்து வாகனங்களிலும் டிஜிட்டல் சுங்கச்சாவடி கட்டணச் சீட்டுகள் ஒட்டப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- ❖ பொது சேவை மையங்கள் அதன் கிராமப்புற அளவிலான நிறுவனங்கள் மூலம் FASTag'களை விற்று வருகின்றன. இதற்கு முன்னர், FASTag'களை விற்பனை செய்வதற்காக பாரத ஸ்டேட் வங்கி (SBI), ஈக்விடாஸ் வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவற்றுடன் பொது சேவை மையம் கூட்டிணைந்தது.

**8.ஏழைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சையை வழங்கும் திட்டமான, 'ஆரோக்கியஸ்ரீ திட்டம்' எந்த மாநிலத்தின் முதன்மைத் திட்டமாகும்?**

அ. தமிழ்நாடு

**ஆ. ஆந்திரபிரதேசம் ☑**


இ. கேரளா

ஈ. தெலுங்கானா

- ❖ 'ஆரோக்கியஸ்ரீ திட்டம்' என்பது ஆந்திரபிரதேச மாநிலத்தின் முதன்மைத்திட்டமாகும். ஏழைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சையை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். Dr. YSR ஆரோக்கியஸ்ரீ திட்டம் என்று பெயரிடப்பட்ட இத்திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு ₹5 இலட்சம் வரை வருமான வரம்புடைய குடும்பத்தினர் பயன்பெறுவர்.

- ❖ இத்திட்டத்தின்கீழ், பொதுமக்களுக்கு QR குறியீடுகளுடன் கூடிய அட்டைகள் வழங்கப்படும். அதனை, ரூபாய் ஆயிரத்துக்கு மேல் சிகிச்சை செலவு வரும்போது பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். இத் திட்டத்தின் கீழ், பல மீச்சிறப்பு மருத்துவமனைகள் சேர்க்கப்படவுள்ளன. மேலும், பல்வேறு மருந்துகள் மாநில அரசால் நடத்தப்பெறும் மருத்துவமனைகளில் கிடைக்கப்பெறும்.

**9.கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த திரைப்படம் – நாடகம்' விருதை வென்ற படம் எது?**




அ. ஒன்ஸ் அபான் எ டைம் ஹாலிவுட்

**ஆ. 1917 ☑**

இ. பாராசைட்

ஈ. மிஸ்ஸிங் லிங்க்

❖ '1917' என்ற தலைப்பில் வெளியான திரைப்படம், அண்மையில் அறிவிக்கப்பட்ட கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த திரைப்படம்–நாடகம்' விருதைப்பெற்றது. 2019 டிசம்பரில் வெளியிடப்பட்ட இந்தத்திரைப்படத்தை சாம் மென்டிஸ் இணைந்து எழுதி இயக்கியுள்ளார். அவருக்கு 'சிறந்த இயக்குநர்' விருது வழங்கப்பட்டுள்ளது. 1917ஆம் ஆண்டில் நடந்த முதலாம் உலகப்போரையும், இரண்டு பிரிட்டிஷ் வீரர்களையும் அடிப்படையாகக்கொண்டது இந்தப்படம். ஜார்ஜ் மெக்கே மற்றும் டீன்–சார்லஸ் சாப்மேன் ஆகியோர் இப்படத்தின் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

**10.கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த நடிகர்' விருதை வென்ற பிரபல நடிகர் யார்?**



அ. ஜார்ஜ் மெக்கே

ஆ. டீன் – சார்லஸ் சாப்மேன்

**இ. ஹாக்கின் பீனிக்ஸ் ☑**

ஈ. பிராட் பிட்

❖ கோல்டன் குளோப் விருதுகள் 2020இல் 'சிறந்த நடிகர்' விருதை அமெரிக்க நடிகர் ஹாக்கின் பீனிக்ஸ் வென்றுள்ளார். 'ஜோக்கர்' திரைப்படத்தில் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியமைக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. நான்கு பிரிவுகளின்கீழ் பரிந்துரைக்கப்பட்ட 'ஜோக்கர்' திரைப்படம், 'சிறந்த நடிகர் (நாடகம்)' மற்றும் 'சிறந்த அசல் இசை' ஆகிய இரு பிரிவுகளின்கீழ் விருதுகளை வென்றது. டோட் பிலிப்ஸ் இயக்கிய பரபரப்பு நிறைந்த ஓர் உளவியல் திரைப்படந்தான் 'ஜோக்கர்'. கடந்த அக்டோபரில் வெளியிடப்பட்ட இந்தத் திரைப்படம் உலகளவில் வசூல் சாதனை புரிந்தது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்த பங்களிப்பாளர்களுக்கு தேசிய வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தேசிய வடிவமைப்பு விருதுகள் வழங்கப்பட்டன. இதில் விருதுபெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் :– பெண் அறிவியலாளர்களுக்கான 'சுமன் சர்மா' விருது, DRDOஇன் வளங்கள் – மேலாண்மை பொது இயக்குநர் அறிவியலாளர் சித்ரா இராஜகோபாலுக்கு வழங்கப்பட்டது. பொது இயக்குநர் பதவிவகிக்கும் முதல் தமிழ்ப்பெண் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

- சுற்றுச்சூழல் பொறியியலுக்கான வடிவமைப்பு விருது சி.அனந்தராமகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டது. இவர் தஞ்சாவூரிலுள்ள இந்திய உணவு பதப்படுத்தல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.சமீபத்தில், அனைத்து நாட்டு மக்களுக்கும் பல்–நுழைவு சுற்றுலா விசாவை அறிவித்த மத்திய கிழக்கு நாடு எது?**

அ. சிங்கப்பூர்

ஆ. பிரான்ஸ்

**இ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**

ஈ. ஸ்பெயின்



- ஐக்கிய அரபு அமீரகத்துக்கு பலமுறை வந்து செல்வதற்கான நுழைவு இசைவு முறையை அந்த நாடு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நுழைவு இசைவைப்பயன்படுத்தி, அனைத்து நாட்டவரும் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் அந்நாட்டுக்கு வந்துசெல்லலாம்.
- சுற்றுலா விசாவிற்கான திருத்தத்திற்கு ஐக்கிய அரபு அமீரக அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது. பன்னாட்டு மக்களின் விருப்பமான சுற்றுலாத்தலமாக ஐக்கிய அரபு அமீரகம் இருப்பதால், ஆண்டொன்றுக்கு சுமார் 20 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகளை அது ஈர்க்கிறது.


**2.சமீபத்தில் ஒரு புதிய வாழத்தகுந்த புறக்கோளைக் கண்டுபிடித்துள்ள டிரான்சிடிங் எக்ஸோபிளானட் சர்வே சேட்டிலைட் (TESS), எந்த விண்வெளி முகமைக்கு சொந்தமானதாகும்?**

அ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO)

**ஆ. தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (NASA) ☑**

இ. ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA)

ஈ. சீனா தேசிய விண்வெளி நிர்வாகம் (CNSA)



- சூரிய குடும்பத்துக்கு வெளியில் உள்ள கோள்களை கண்டுபிடிப்பதற்காக, 'TESS' எனப்பெயரிடப்பட்ட செயற்கைக்கோளை கடந்த 2018ஆம் ஆண்டில் NASA விண்ணுக்கு அனுப்பியது. இந்நிலையில், அண்மையில் ஒரு புதிய வாழத்தகுந்த புறக்கோளை தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகத்துக்குச் சொந்தமான Transiting Exoplanet Survey Satellite (TESS) கண்டுபிடித்துள்ளது.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புறக்கோளுக்கு, 'TOI 700 d' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது, பூமியின் தோராயமான அளவைக்கொண்டுள்ளது. பூமியிலிருந்து 101.5 ஒளியாண்டுகள் தொலைவில் இது உள்ளதாக NASA அறிவியலாளர்கள் அறிவித்துள்ளனர்.

**3.ஒற்றைக்கொம்பு காண்டாமிருகக் குட்டி ஒன்று சமீபத்தில் மானஸ் தேசியப்பூங்காவில் பிறந்தது. இந்தத் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. அருணாச்சல பிரதேசம் **ஆ. அஸ்ஸாம் ☑**

இ. சிக்கிம் ஈ. ஹிமாச்சலபிரதேசம்



- ❖ மானஸ் தேசியப்பூங்கா UNESCOஇன் உலக பாரம்பரிய தளமாகும்; மேலும், இது அஸ்ஸாம் மாநிலத்தில் அமைந்துள்ள ஓர் உயிர்க்கோளக் காப்பகமாகும். அண்மையில் இந்தத் தேசியப்பூங்காவில் வாழும் R3A என்ற பெயருடைய ஓர் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் குட்டியொன்றை ஈன்றது.
- ❖ அதே பூங்காவில் வாழ்ந்துவரும் மூத்த காண்டாமிருகமான 'லாய்ஸ்ரி'க்கு, கடந்த 2013ஆம் ஆண்டில் 'R3A' பிறந்தது. ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் அல்லது இந்திய காண்டாமிருகமானது அழிவின் விளிம்பிலிருக்கும் ஓர் உயிரினமாகும். மேலும், IUCNஇன் சிவப்புப்பட்டியலில் 'பாதிக்கப்படக்கூடியது' என்னும் நிலையில் அது பட்டியலிடப்பட்டுள்ளது. தற்போது, 42 காண்டாமிருகங்கள் மானஸ் தேசியப் பூங்காவில் உள்ளன.

**4.அண்மையில் ஓய்வுபெறுவதாக அறிவித்த டேனியல் டி ரோஸி, எந்த நாட்டைச் சேர்ந்த கால்பந்து வீரர் ஆவார்?**

அ. பிரேசில்

**ஆ. இத்தாலி ☑**

இ. ஜெர்மனி

ஈ. பிரான்ஸ்




- ❖ இத்தாலி அணியின் கால்பந்து வீரரான டேனியல் டி ரோஸி, அண்மையில், தொழிற்முறை கால்பந்தில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். ரோமா கால்பந்து சங்கத்தைச் சேர்ந்த டேனியல் டி ரோஸி, Serie A லீக் போட்டிகளில் கிட்டத்தட்ட பதினெட்டு ஆண்டுகள் விளையாடியுள்ளார். 2006ஆம் ஆண்டு FIFA உலகக்கோப்பையை வென்ற இத்தாலி அணியின் ஒருபகுதியாகவும் அவர் இருந்துள்ளார்.

**5.மின்சாரத்தில் இயங்கும் வான்வழி வாடகையுந்தினை (electric air–taxi) உருவாக்குவதற்காக எந்தச் சவாரி–பகிர்வு நிறுவனத்துடன் ஹூண்டாய் கூட்டுசேர்ந்துள்ளது?**

அ. திதி (Didi)

**ஆ. ஊபர் (Uber) ☑**

இ. லிப்ட் (Lyft)

ஈ. கிராப் (Grab)




- ❖ தானுந்து நிறுவனமான ஹூண்டாய், அண்மையில், நுகர்வோர் மின்னணுப் பொருட்கள் கண்காட்சி –2020இல் ஊபருடன் இணைந்து உருவாக்கப்பட்ட மின்சாரத்தில் இயங்கும் வான்வழி வாடகை உந்தினை காட்சிப்படுத்தியது.
- ❖ இவ்விரு நிறுவனங்களின் கூட்டணியின்படி, ஹூண்டாய் நிறுவனம் வண்டிகளை உருவாக்கி அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் மற்றும் ஊபர் நிறுவனம் அவற்றுக்கான ஆதரவு சேவை, சாலைப் போக்குவரத்து இணைப்பு மற்றும் வாடிக்கையாளர் இடைமுகத்தை வழங்கும். 2023ஆம் ஆண்டுக்குள், நகர்ப்புறங்களில், வணிக நோக்கிலான வான்வழிப் வாடகையுந்துச்சேவைகளை ஊபர் நிறுவனம் தொடங்கவுள்ளது.

**6.தீவிர இந்திரதனுஷ் 2.0 இயக்கம் அண்மையில் தொடங்கியது. இத்திட்டம் எதனுடன் தொடர்புடையது?**

அ. வங்கிகள் இணைப்பு

**ஆ. அனைவருக்கும் தடுப்பூசி ☑**

இ. பாதுகாப்பு கொள்முதல்

ஈ. விண்வெளித் திட்டம்



❖ 'இந்திரதனுஷ் திட்டம்' என்பது 2014ஆம் ஆண்டில் மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஒரு அனைவருக்குமான தடுப்பூசி திட்டமாகும். தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் 2.0 கடந்த 2019 டிசம்பர் முதல் எதிர்வரும் 2020 மார்ச் வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

❖ இந்திரதனுஷ் திட்டத்தின்கீழ், தடுப்பூசி போடப்படாத (அ) பகுதியளவு தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு தடுப்பூசி போடப்படும். இத்திட்டத்திற்கான இலக்கு ஆண்டாக 2020 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்த நிகழ்நேர தரவுகளை பதிவுசெய்வதற்காக அமைச்சகத்தால் IMI 2.0 வலைத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**7.ஹேஸ்டிங்ஸ் சர்வதேச செஸ் போட்டியில் பட்டம் வென்ற இந்திய கிராண்ட்மாஸ்டர் யார்?**

அ. பெண்டியாலா ஹரிகிருஷ்ணா

ஆ. சசிகிரண் கிருஷ்ணன்

**இ. P மகேஷ் சந்திரன் ☑**

ஈ. அபிஜித் குப்தா



❖ 95ஆவது ஹேஸ்டிங்ஸ் சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் கிராண்ட் மாஸ்டரான P மகேஷ் சந்திரன் (36) சாம்பியன் பட்டம் வென்றார். 9 சுற்றுகளின் முடிவில் 7.5 புள்ளிகளை அவர் பெற்றார். தீப் சென்குப்தா 13ஆவது இடமும், மற்றொரு இந்திய வீரரான ஸ்வயம் மிஸ்ரா 14ஆவது இடமும் பிடித்தனர். இருவரும் தலா 6 புள்ளிகள் பெற்றனர்.

**8.தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் நலச்சங்கத்திற்கு நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ள பொதுத்துறை வங்கி எது?**

அ. பாரத ஸ்டேட் வங்கி

ஆ. கனரா வங்கி

**இ. இந்தியன் வங்கி ☑**

ஈ. பேங்க் ஆப் இந்தியா

❖ தமிழ்நாட்டைச்சேர்ந்த முன்னணி பொதுத்துறை வங்கியான இந்தியன் வங்கி, அண்மையில், தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் நலச்சங்கத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின்மூலம், சங்கத்தின் உறுப்பினர்கள் தொழில்தொடங்குவதற்கான நிதியுதவி மற்றும் பயிற்சியை இந்தியன் வங்கி அளிக்கும்.

- தொழில்முனைவோருக்கு சலுகை முறையில் கடன் வசதிகளும் வழங்கப்படும். தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் நலச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு இந்தியன் வங்கி சமுதாயத்தின் 'இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் (INDSETI – Indian Bank Self–Employment Training Institutes) மூலம் பயிற்சியளிக்கப்படும்.

**9.சிறு நிதி வங்கியாக மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட முதல் நகர்ப்புற கூட்டுறவு வங்கி எது?**

அ. பாரத் கூட்டுறவு வங்கி

**ஆ. சிவாலிக் மெர்கண்டைல் கூட்டுறவு வங்கி ☑**

இ. பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கி

ஈ. பம்பாய் மெர்கண்டைல் கூட்டுறவு வங்கி

- சிவாலிக் மெர்கண்டைல் கூட்டுறவு வங்கியை சிறு நிதி வங்கியாக (Small Finance Bank) மாற்றுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில், 'கொள்கை அளவிலான' ஒப்புதலை வழங்கியுள்ளது. நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை சிறு நிதி வங்கிகளாக தன்விருப்பத்தோடு மாற்றுவது குறித்து கடந்த 2018 செப்டம்பரில் ரிசர்வ் வங்கி அறிவித்த பின்னர், இதுபோன்று அனுமதி வழங்கப்பட்ட முதல் நகர்ப்புற கூட்டுறவு வங்கி இதுவாகும்.

- கொள்கை ரீதியாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பதினெட்டு மாதங்களுக்குள் இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி, குறைந்தபட்ச நிகர மதிப்பு மற்றும் மறையிடர் விகிதத்துக்கான மூலதனம் போன்ற ஒரு சிறு நிதி வங்கிக்கான தேவைகளை அக்குறிப்பிட்ட வங்கி பூர்த்திசெய்யவேண்டும்.

**10. 'ஜல்–ஜீவன்–ஹரியாலி திட்டம்' என்பது எந்த மாநிலத்தின் முதன்மை காலநிலை மாற்ற திட்டமாகும்?**

அ. ஒடிசா

ஆ. சத்தீஸ்கர்

இ. ஆந்திரபிரதேசம்

**ஈ. பீகார் ☑**

- 'ஜல்–ஜீவன்–ஹரியாலி திட்டம்' என்ற காலநிலை மாற்ற திட்டத்தை பீகார் முதலமைச்சர் அண்மையில் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும், காலநிலை மாற்றம் & நீர் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்படும். 'ஜல்–ஜீவன்–ஹரியாலி' திட்டத்தின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'ஜக்ருதா சம்மேளன்' நிகழ்ச்சியில், முதலமைச்சர் நிதிஷ்குமார் ₹700 கோடிக்கும் அதிக மதிப்புள்ள திட்டங்களைத்தொடங்கினார்.

- காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக மாநிலம் முழுவதும் 'மனிதச்சங்கிலி' இயக்கத்தை ஏற்பாடு செய்யவும் அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. BCCIஇன் 'C K நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

அ. கபில் தேவ்

**ஆ. K ஸ்ரீகாந்த் ☑**

இ. சுனில் கவாஸ்கர்

ஈ. திலீப் வெங்சர்க்கார்



❖ இந்திய தேசிய கிரிக்கெட் வாரியமான BCCI'ஆல் வழங்கப்பெறும் மதிப்புமிக்க 'C K நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது'க்கு முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாட்டைச்சேர்ந்த பிரபல கிரிக்கெட் வீரரான இவர், 1981 முதல் 1992 வரை இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்தார். இவ்விருதை இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவி அஞ்சும் சோப்ரா வழங்கவிருக்கிறார். 2020 ஜன.12ஆம் தேதி மும்பையில் நடைபெறவிருக்கும் BCCI ஆண்டுவிழாவின்போது இந்த விருது வழங்கப்படும்.

**2. IRDAIஆல் தொடங்கப்பட்ட கட்டாய நிலையான தனிநபர் சுகாதார காப்பீட்டுக் கொள்கையின் பெயர் என்ன?**

அ. ஆரோக்கிய ரக்ஷா

ஆ. ஆரோக்கிய சுரக்ஷா

**இ. ஆரோக்கிய சஞ்சீவனி ☑**

ஈ. ஆரோக்கிய சம்ரிதி




❖ 'ஆரோக்கிய சஞ்சீவனி' என்ற பெயரில் அடிப்படை காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த, இந்திய காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) வலியுறுத்தியுள்ளது. இந்தத்திட்டத்தில், காப்பீட்டு நிறுவனங்கள் 'ஆரோக்கிய சஞ்சீவனி' என்ற பெயருடன் தங்கள் காப்பீட்டு நிறுவனப்பெயரைச்சேர்த்து காப்பீட்டை செயல்படுத்தவேண்டும். 2020 ஏப்.1 முதல் கிடைக்கப்பெறவுள்ள இது, காப்பீட்டாளர்களின் குறைந்தபட்ச சுகாதாரத்தேவைகளை உள்ளடக்கும்.

❖ ஓராண்டுக்கு குறைந்தபட்சம் ₹1 இலட்சம் – ₹5 இலட்சம் வரை காப்பீடு இருக்க வேண்டும். அதற்கேற்ப காப்பீட்டுத்தொகையை நிர்ணயிக்கலாம். குறைந்தபட்சம் 18 – 65 வயது வரை உள்ளவர்கள் இந்தக் காப்பீட்டில் சேரலாம்.

**3.நிர்வாகப்பணிகளுக்கு டிஜிட்டல் ஊடகத்தைப் பயன்படுத்துவதன்மூலம் தாளைச்சேமிக்கும் திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. ஒடிசா ஆ. கேரளா

**இ. மேற்கு வங்கம் ☑** ஈ. தெலுங்கானா



❖ மேற்கு வங்க மாநில அரசானது தாளைச்சேமிக்கும் நோக்கில் சுற்றுச்சூழலுக்குகந்த ஒரு திட்டத்தை தொடங்கியுள்ளது. பெரும்பாலான நிர்வாகப்பணிகளுக்கு டிஜிட்டல் ஊடகத்தைப் பயன்படுத்தவும் அது முடிவுசெய்துள்ளது. தலைமைச்செயலகத்தில் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் இம்முறையானது, இனி, மாநிலத்தின் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

❖ நிர்வாக நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் தாட்களை மறுசுழற்சி செய்வதற்கும், அவற்றை எழுது அட்டைகளாக மாற்றி அவற்றை மீண்டும் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தச் செயல்முறையானது மாநிலத்தின் தலைமைச்செயலகத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

**4. 2022ஆம் ஆண்டின் காமன்வெல்த் போட்டிகளை நடத்தவுள்ள நகரம் எது?**

அ. லண்டன்

ஆ. புது தில்லி

**இ. பர்மிங்காம் ☑**

ஈ. கோல்ட் கோஸ்ட்

BIRMINGHAM 2022 commonwealth games

❖ 2022ஆம் ஆண்டின் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரத்தில் நடத்தப்படவுள்ளன. இது, காமன்வெல்த் உறுப்பினர்களுக்கான சர்வதேச விளையாட்டு நிகழ்வாகும். இந்நிகழ்வை மூன்றாவது முறையாக இங்கிலாந்து நடத்துகிறது. மதிப்புமிக்க இந்நிகழ்வானது 2020 ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 7 வரை நடைபெறவுள்ளது.

❖ அண்மையில், இந்திய காமன்வெல்த் விளையாட்டுக் கூட்டமைப்பானது (CGI) 2022இல் இந்தியாவில் காமன்வெல்த் துப்பாக்கிச்சுடு மற்றும் வில்வித்தைப் போட்டியை நடத்தும் திட்டத்தை சமர்ப்பித்தது. ஆனால், முன்மொழியப்பட்ட துப்பாக்கிச்சுடு போட்டியில் வெல்லும் பதக்கங்கள், இறுதிப்பட்டியலில் சேர்க்கப்படுமா எனக் கூட்டமைப்பு இன்னும் அறிவிக்கவில்லை.

**5. சமீபத்தில், மிகப்பெரிய வரிசை (Very Large Array) ஆய்வகத்தைப் பயன்படுத்தி பெரும் கருந்துளைகள் கொண்ட குள்ள விண்மீன் திரள்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர். இந்த ஆய்வகம், எங்கு அமைந்துள்ளது?**

அ. ஜப்பான்

ஆ. சீனா

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. ரஷ்யா



❖ அண்மையில் 'ஆஸ்ட்ரோபிசிகல் ஜர்னலில்' வெளியான ஆய்வின்படி, சில குள்ள விண்மீன் திரள்களில் 13 பெரும் கருந்துளைகளை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த விண்மீன் திரள்கள் பூமியிலிருந்து பல ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளன. இதில் சில விண்மீன்களில், கருந் துளைகள் அதன் மையத்தில் இல்லாமல் உள்ளன. கருந்துளைகள்கொண்ட விண்மீன்களின் உயர் – தெளிவுத்திறன் படங்கள் மிகப்பெரிய வரிசை ஆய்வகத்தைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டுள்ளன.

❖ இது ஒரு வானொலி தொலைநோக்கி ஆய்வகமாகும்; இது, அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோவில் அமைந்துள்ளது. தேசிய வானொலி வானியல் ஆய்வகத்தால் இந்த ஆய்வகம் அமைக்கப்பட்டது.

**6.புவேர்ட்டோ ரிக்கோவில் அண்மையில் ஒரு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. புவேர்ட்டோ ரிக்கோவின் தலைநகரம் எது?**



அ. சாண்டோ டொமிங்கோ

**ஆ. சான் வான் ☑**

இ. கிங்ஸ்டன்

ஈ. ஹவானா

❖ பயங்கரமான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டதை அடுத்து புவேர்ட்டோ ரிக்கோ அரசாங்கம் சமீபத்தில் ஓர் அவசரநிலையை அறிவித்தது. கடந்த நூறாண்டுகளில் கண்டிராத அளவில் 6.4 ரிக்டர் அளவிலான மிக வலுவான மற்றும் மிகவும் அழிவுகரமான நிலநடுக்கம் அங்கு ஏற்பட்டுள்ளது. புவேர்ட்டோ ரிக்கோ என்பது கரீபியன் கடலில் அமைந்துள்ள ஒரு தீவுக்கூட்டமாகும். இது அமெரிக்காவின் இணைக்கப்படாத பிரதேசங்களுள் ஒன்றாகும். நாட்டின் மிகப்பெரிய நகரமாகவும் தலைநகராகவும் சான் வான் உள்ளது.

**7.அண்மையில், இந்தியாவின் எந்த நகரத்தில், 'தேசிய வர்த்தகர்கள் மாநாடு' நடைபெற்றது?**




அ. மும்பை

ஆ. லக்னோ

**இ. புது தில்லி ☑**

ஈ. வாரணாசி

❖ தேசிய வர்த்தகர்கள் மாநாட்டை, அண்மையில், புது தில்லியில், பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார். 3 நாள் நடைபெறும் இந்த நிகழ்வை, அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு (CAIT) ஏற்பாடு செய்திருந்தது. வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை இந்த மாநாடு எடுத்துக் காட்டுகிறது. மாநாட்டின் 2ஆவது நாளில், மத்திய நிதியமைச்சர் கலந்துகொண்டு வர்த்தகர்களிடையே உரையாற்றினார். பண்டங்கள் மற்றும் சேவை வரி (GST) மேலும் எளிமைப்படுத்தப்படும் என்று அவர் அப்போது உறுதியளித்தார்.

**8.இந்திய ரிசர்வ் வங்கி, சமீபத்தில், எந்த வகை வங்கிகளின் 'மேற்பார்வை நடவடிக்கை கட்டமைப்பை' திருத்தியுள்ளது?**



அ. பொதுத்துறை வங்கிகள்

ஆ. தனியார் துறை வங்கிகள்

இ. வெளிநாட்டு வங்கிகள்

**ஈ. நகர கூட்டுறவு வங்கிகள் ☑**

❖ இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில், நகர கூட்டுறவு வங்கிகளுக்கான பல்வேறு நிபந்தனைகளை வெளியிட்டது. ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு நகர

கூட்டுறவு வங்கியானது மேற்பார்வை நடவடிக்கை கட்டமைப்பில் வைக்கப்படும். இதில் நிகர NPA 6 சதவீதத்தைவிட அதிகமாகவும், CRR விகிதம் 9 சதவீதத்துக்கு குறைவாகவும் இருக்கும் நகர கூட்டுறவு வங்கிகளும் அடங்கும்.

❖ நிதியழுத்தத்தைப்பொறுத்து, நகர கூட்டுறவு வங்கிகளின் கடன் அதிகாரங்களும் குறைக்கப்படலாம். பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கி ஊழலின் பின்னணியில் இந்திய ரிசர்வ் வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்தப் புதிய விதிமுறைகள், நகர கூட்டுறவு வங்கிகளின் மோசமான சொத்துக்களுக்கு விரைவான தீர்வினை வழங்கும்.


**9.இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) ஏவவிருக்கும் புதிய ரிலே செயற்கைக்கோள் தொடரின் பெயர் என்ன?**

அ. Indian Relay Navigation Satellite System (IRNSS)

ஆ. Indian Data Relay Satellite System (IDRSS) ☑

இ. Indian Relay Satellite System (IRSS)

ஈ. Indian Relay Tracking System (IRTS)



❖ இந்தியன் டேட்டா ரிலே சேட்டிலைட் சிஸ்டம் (IDRSS) என்றழைக்கப்படும் உள்நாட்டு ரிலே செயற்கைக்கோள் தொடரானது விரைவில் ஏவப்படும் என இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (ISRO) தலைவர் K சிவன் அண்மையில் அறிவித்தார். IDRSS என்பது ரிலே செயற்கைக்கோள்களின் தொகுப்பாகும், இது இந்திய செயற்கைக்கோள்களை தொடர்ந்து கண்காணிக்கும் மற்றும் அவற்றுடன் தகவல்களை பரிமாறிக்கொள்ளும்.

❖ முன்மொழியப்பட்ட இரண்டு செயற்கைக்கோள்களில் முதலாவது ககன்யான் திட்டத்துக்கு முன்னதாக 2020ஆம் ஆண்டு இறுதிக்குள் ஏவப்படும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள், புதிய ரிலே செயற்கைக்கோள் தொடர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படலாம்.

**10. எந்த அமைப்பினால், 'உழவர் புத்தாக்க நிதியம்' அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது?**

அ. உலக உணவு திட்டம்

ஆ. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

இ. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

ஈ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ☑

❖ 'உழவர் புத்தாக்க நிதியமானது' அடுத்த நிதியாண்டுக்குள் அமைக்கப்படும் என இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) தலைமை இயக்குநர், அண்மையில், அறிவித்தார். தேசிய அறிவியல் மாநாட்டின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது உழவர் அறிவியல் மாநாட்டின்போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. புது தில்லியில் ஒரு புத்தாக்க மையம் நிறுவப்படும் என அவர் அறிவித்தார்.

❖ இது, உழவர்களின் ஆராய்ச்சிக்கு உதவும் மற்றும் உழவர்களின் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும். தற்சமயம், வேளாண்மை அறிவியல் மையங்களே உழவர்களின் கண்டுபிடிப்புகளை பதிவுசெய்து வருகின்றன.

# நடப்பு நிகழ்வுகள்

**1.சமீபத்தில், இந்தியாவின் பல்வேறு நீதிமன்றங்களைப் பாதுகாப்பதற்காக எப்படையை பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்குமாறு இந்திய உச்சநீதிமன்றம் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது?**

அ. மத்திய சேமக்காவல் படை (CRPF)

**ஆ. மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை (CSIF) ☑**

இ. தேசிய பாதுகாப்புப் படை (NSG)

ஈ. இந்திய இராணுவம்

❖ உள்ளூர் காவல்படைகளிடமிருந்து நீதிமன்றங்களை பாதுகாக்கும் பணியை ஏற்றுக்கொண்டு இந்தியாவின் பல்வேறு நீதிமன்றங்களை பாதுகாப்பதற்காக மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படையை (CSIF) பயன்படுத்தப்படுவது குறித்து பரிசீலிக்குமாறு உச்சநீதிமன்றம் அண்மையில் மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

**2. 2020 ஜனவரி 9 அன்று, ஹர் கோவிந்த் கொரானாவின் பிறந்தநாள் அனுசரிக்கப்பட்டது. அவர் எந்த ஆண்டில் உடலியலுக்கான நோபல் பரிசை வென்றார்?**



அ. 1965

**ஆ. 1968 ☑**

இ. 1972

ஈ. 1979

❖ செல்லின் மரபணுக்குறியீட்டைக் எடுத்துச்செல்வதோடு அவற்றின் புரதங்களின் தொகுப்பைக் கட்டுப்ப–டுத்தும் நியூக்ளிக் அமிலங்களில், நியூக்ளியோடைட்களின் வரிசையைக்காட்டும் ஆராய்ச்சியை மேற்–கொண்டதற்காக, ஹர் கோவிந்த் கொரானா, 1968ஆம் ஆண்டின் உடலியல் / மருத்துவத்திற்கான நோபல் பரிசை மார்ஷல் W நிரன்பெர்க் மற்றும் ராபர்ட் W ஹோலி ஆகியோருடன் பகிர்ந்துகொண்டார். 1972ஆம் ஆண்டில், முதல் செயற்கை மரபணுவையும் அவர் உருவாக்கினார்.

**3.அஷ்வானி லோகானி தலைமையிலான வானூர்தி நிறுவனம் எது?**

அ. இண்டிகோ

ஆ. ஸ்பைஸ்ஜெட்

**இ. ஏர் இந்தியா ☑**

ஈ. விஸ்தாரா

❖ தற்போது, அஷ்வானி லோகானி ஏர் இந்தியாவுக்கு தலைமைதாங்குகிறார். 1932ஆம் ஆண்டில் டி ஹவில்லேண்ட் புஸ் மோத் மோனோபிளேன் என்ற ஒற்றைப்பொறி எந்திரத்துடன் இந்த நிறுவனம் செயல்படத்தொடங்கியது. கடந்த அக்டோபரில், A320 விமானத்தில் டாக்ஸிபோட்டைப்பயன்படுத்திய உலகின் முதல் வானூர்தி நிறுவனமாகவும் இது அமைந்தது.

❖ அண்மையில், புது தில்லியில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்கு விற்கும் நடவடிக்கை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு, ஏர் இந்தியா பங்குகளை விற்கும் பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கூட்டத்தில், ஏர் இந்தியா விமான சேவை நிறுவனத்தின் தற்போதைய ₹60,000 கோடி கடனை 'சிறப்புத் தேவைக்கான வாகன' கணக்கில் சேர்க்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**4. 2019–20ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, இந்தியாவின் திட்டமிடப்பட்ட வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 5% ☑




ஆ. 5.5%

இ. 6%

ஈ. 6.5%

❖ 2020 ஜனவரி முதல் வாரத்தில், 2019–20ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளை அரசு வெளியிட்டுள்ளது. அதில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (GDP) ஐந்து சதவீதமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு கணிப்பில் இது ஏழு சதவீதம் எனக் கணிக்கப்பட்டிருந்தது. முந்தைய நிதியாண்டில் இது 6.8% எனக் கணிக்கப்பட்டிருந்தது.

**5.இந்தியாவின் காலநிலை குறித்த இந்திய வானிலை ஆய்வுமையத்தின் (IMD) அறிக்கையின்படி, இந்தியாவின் மேற்குக் கடற்கரையில், அரபிக்கடலில், 1902ஆம் ஆண்டுக்குப்பிறகு 400 சதவீதம் அதிக சூறாவளிகள் உருவாகியுள்ளன. 2019ஆம் ஆண்டில் அரபிக்கடலைத் தாக்கிய 5 sசூறாவளிகள் எவை?**

அ. வாயு, பபுக், கியார், புல்புல் மற்றும் பவன்




ஆ. வாயு, பபுக், கியார், புல்புல் மற்றும் பானி

இ. பபுக், வாயு, கியார், புல்புல் மற்றும் பானி

ஈ. வாயு, ஹிக்கா, கியார், மகா மற்றும் பவன் ☑

❖ இந்தியாவின் காலநிலைகுறித்த இந்திய வானிலை ஆய்வுமையத்தின் 2019 ஆண்டறிக்கையின்படி, அரபிக்கடலில் சாதரணமாக ஏற்படும் புயல்களின் எண்ணிக்கையைவிட 400% அதிகமாக 2019ஆம் ஆண்டில் புயல்கள் ஏற்பட்டுள்ளன. எட்டில் சுமார் ஐந்து சூறாவளிகள் (வாயு, ஹிக்கா, கியார், மகா மற்றும் பவன்) அரபிக்கடலை பாதித்துள்ளன.

❖ இந்தியாவின் மேற்குக்கடற்கரையில் கடல் பொதுவாக ஆண்டுதோறும் ஒரேயொரு சூறாவளியை மட்டுமே சந்திக்கும். (இந்தியாவில் பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் மொத்தம் ஐந்து புயல்கள் ஏற்படும்) கடந்த ஆண்டில் மட்டும் வங்காள விரிகுடாவை (பொதுவாக இந்தியாவில் சூறாவளி அதிகம் தாக்கும் கடற்கரை) மூன்று புயல்கள் (பபுக், பானி, புல்புல்) தாக்கியுள்ளன.

**6.தேர்தல் ஆணையம், சமீபத்தில், 2020 பிப்.8ஆம் தேதியை தில்லி சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் தேதியாக அறிவித்தது. தில்லி சட்டமன்றத்தில் உள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை எவ்வளவு?**

அ. 65

ஆ. 67

**இ. 70 ☑**

ஈ. 72



❖ 2020 பிப்.8ஆம் தேதி நடைபெறவுள்ள தில்லி சட்டமன்றத்தேர்தலில் சுமார் 1.46 கோடி வாக்காளர்கள் (80.55 இலட்சம் ஆண்கள் + 66.35 இலட்சம் பெண்கள்) வாக்களிக்கவுள்ளனர். தேர்தல் முடிவுகள் 2020 பிப்.11ஆம் தேதியன்று அறிவிக்கப்படும். தில்லி சட்டமன்றத்தில் 70 இடங்கள் உள்ளன. கடந்த தேர்தலில் 67 இடங்களை வென்றதன்மூலம் ஆம் ஆத்மி ஆட்சியமைத்தது குறிப்பிடத்தக்கது.

**7.வடகிழக்கு இயற்கைவாயு குழாய் கட்டமைப்பானது 5 இந்திய மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டுமுயற்சியால் செயல்படுத்தப்படவுள்ளது. இந்தக் கூட்டு நிறுவனத்தின் பெயர் என்ன?**

அ. வடகிழக்கு எரிவாயு கட்டமைப்புக் கழகம் (NEGGC)

ஆ. இந்தியன் எரிவாயு கட்டமைப்பு நிறுவனம் (IGGC)

**இ. இந்திரதனுஷ் எரிவாயு கட்டமைப்பு நிறுவனம் (IGGL) ☑**

ஈ. பாரத் எரிவாயு கட்டமைப்பு நிறுவனம் (BL)

IGGL

❖ வடகிழக்கு இயற்கை எரிவாயு குழாய் கட்டமைப்புத் திட்டமானது இந்திரதனுஷ் எரிவாயு கட்டமைப்பு நிறுவனத்தின், 5 கூட்டு நிறுவனத்தால் (GAIL, IOCL, ONGC, OIL மற்றும் NRL) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான குழாய் பாதை மொத்த நீளம் 1,656 கி.மீ., திட்டச்செலவினம் சுமார் ₹9,265 கோடி (கட்டுமானத்தின்போது வட்டி உட்பட).

❖ திட்டத்தின்படி வடகிழக்கு மண்டலத்திலுள்ள அருணாச்சலபிரதேசம், அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, மிசோராம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா ஆகிய எட்டு மாநிலங்களில் இயற்கை எரிவாயு குழாய் பாதை கட்டமைப்பு உருவாக்கப்படும்.

**8.அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட கனிமச்சட்டங்கள் (திருத்தம்) அரசாணை, 2020 ஆனது எந்த கனிம / இயற்கை வளத்துக்கான இறுதிப்பயன்பாட்டு அளவுகோல்களை நீக்கியுள்ளது?**

**அ. நிலக்கரி ☑**

ஆ. வாயு நீரேற்றிகள்

இ. இயற்கை எரிவாயு

ஈ. கச்சா எண்ணெய்



❖ ஜன.8 அன்று, மத்திய அமைச்சரவை, கனிமச்சட்டங்கள் (திருத்தம்) அரசாணை, 2020ஐ அங்கீகரிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அரசாணை, சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் (மேம்பாடு & ஒழுங்குமுறை) சட்டம், 1957 மற்றும் நிலக்கரிச்சுரங்கங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 2015 ஆகியவற்றை திருத்தும்.

- தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் முந்தைய ஒப்புதலின் தேவையையும் இது நீக்கிவிடும். அரசின் கூற்றுப்படி, இது, திட்டங்களை செயல்படுத்துதல், வணிகத்தை எளிதாக்குவது, நடைமுறைகளை எளிதாக்குவது மற்றும் தாதுக்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும்.

**9. 2009ஆம் ஆண்டிலிருந்து மலேசியா மாஸ்டர்ஸ் பூப்பந்து போட்டியில் இந்தியா எத்தனைமுறை வென்றுள்ளது?**

அ. இரண்டு

**ஆ. மூன்று ☑**

இ. ஐந்து

ஈ. பத்து

3

- 2009ஆம் ஆண்டில் தொடங்கியதிலிருந்து மலேசியா மாஸ்டர்ஸ் பூப்பந்து போட்டியில், இந்தியா, மூன்று முறை வென்றுள்ளது. P V சிந்து 2013 & 2016ஆம் ஆண்டுகளிலும், சாய்னா நேவால் 2017ஆம் ஆண்டிலும் வென்றார். இந்த ஆண்டு, B சாய் பிரனீத் ஏற்கனவே நாக்–அவுட் செய்யப்பட்டுள்ளார்.

**10.சமீபத்தில், பிற நாடுகளுடனான குற்றவியல் விஷயங்களில் பரஸ்பர சட்ட உதவிக்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களை இந்திய அரசு வெளியிட்டுள்ளது. தற்போது (ஜனவரி, 2020) இந்தியாவில், எத்தனை நாடுகளுடனான பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தங்கள் உள்ளன?**



அ. 32

ஆ. 40

**இ. 42 ☑**

ஈ. 48

- இந்தியா 42 நாடுகளுடன் பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தங்களைக்கொண்டுள்ளது மற்றும் குற்றவியல் விஷயங்களில் ஒத்துழைப்புக்காக பல்வேறு பன்னாட்டுத் தீர்மானங்களில் கையெழுத்திட்டுள்ளது. உள்துறை அமைச்சகம் இதற்கென நியமிக்கப்பட்ட மத்திய அரசின் அதிகார மையமாகும். அண்மையில் திருத்தப்பட்ட இந்த வழிகாட்டுதல்கள், பல்வேறு சட்டம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஒருங்கிணைத்துள்ளன. மேலும், ஆவணங்களை பன்னாட்டுத் தேவைகளுக்கு இணங்க வைப்பதை அது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக கோரிக்கை கிடைத்த பத்து நாட்களுக்குள் வெளிநாட்டு அதிகாரிகளுக்கு ஆவணங்களை வழங்குவதற்கான ஏற்பாடும் உள்ளது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாடு முழுவதும் வரும் ஜன.19ஆம் தேதி நடைபெறவுள்ள இளம்பிள்ளைவாத நோய் (போலியோ) முகாம்கள்மூலம் மொத்தம் 72 இலட்சம் குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப் –பட்டுள்ளது. கடந்த 16 ஆண்டுகளாக போலியோ அற்றதாக தமிழ்நாடு உள்ளது.

- கீழடி ஆய்வறிக்கையை தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம், ஹிந்தி உள்ளிட்ட 24 மொழிகளில் நூலாகத் தமிழ்நாட்டின் தொல்லியல் துறை வெளியிட்டுள்ளது.




- எள் சாகுபடியில் அதிக மகசூல் ஈட்டிய நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி பாப்பாத்தி (61), பாரதப்பிரதமரிடம் 'முன்னோடி விவசாயி' எனும் பாராட்டுச்சான்றிதழ் பெற்று சாதனை படைத்துள்ளார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. LGBT சமூகத்திற்காக பிரத்யேக மாநில அளவிலான நீதிமன்றத்தை நடத்த முடிவுசெய்துள்ள மாநிலம் எது?**



அ. தெலுங்கானா

ஆ. மகாராஷ்டிரா

**இ. கேரளா ☑**

ஈ. குஜராத்

❖ Lesbian, Gay, Bi–sexual, Transgender (LGBT) சமூகத்திற்காக மாநில அளவிலான நீதிமன்றத்தை நடத்துவதாக கேரள மாநில இளையோர் ஆணையம் அறிவித்துள்ளது. இந்நிகழ்ச்சி அம்மாநிலத்தின் தலைநகரமான திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ளது.

❖ திருநங்கைகள் தங்களின் குறைகளை வெளிக்கொணர ஊக்குவிப்பதும், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதுமே இந்நீதிமன்றத்தின் முக்கிய நோக்கமாகும். கடந்த 2015ஆம் ஆண்டில், கேரள மாநில அரசு ஒரு 'திருநங்கைக் கொள்கை'யை அறிமுகப்படுத்தியது. மேலும், இது, மாநில சமூக நீதித்துறையின்கீழ் இயங்கும் ஒரு பிரத்யேக 'திருநங்கைப்பிரிவையும்' கொண்டுள்ளது.

**2. வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள தாய்மார்கள் தங்களின் குழந்தைகளை படிக்கவைப்பதற்காக "அம்மா வோடி" என்னும் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?**



அ. தெலுங்கானா

**ஆ. ஆந்திரபிரதேசம் ☑**

இ. கேரளா

ஈ. குஜராத்

❖ ஆந்திரபிரதேச மாநில முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி, 'ஜெகனண்ணா அம்மா வோடி' என்ற திட்டத்தை தொடங்கிவைத்துள்ளார். இத்திட்டத்தின்படி, குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் 43 லட்சம் தாய்மார்களுக்கு ஆண்டுதோறும் ₹15,000 வழங்கப்படும். இதற்காக நடப்பாண்டில் ₹6318 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் வரையில் இந்தப் பணம், ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தில் தாய்மார்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

**3. 2020 மார்ச்சில் நடைபெறவுள்ள 'மிலன்' என்னும் பன்னாட்டு கடற்படைப்பயிற்சியை நடத்தவுள்ள நகரம் எது?**



அ. கோவா

**ஆ. விசாகப்பட்டினம் ☑**

இ. கொச்சின்

ஈ. மும்பை

- 'மிலன்' என்பது பலதரப்பட்ட கடற்படைப்பயிற்சியாகும். இது, எதிர்வரும் 2020 மார்ச் மாதத்தில், விசாகப்பட்டினத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு, முன்னர், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் நடத்த திட்டமிடப்பட்டது; பின்னர், பல நாடுகளைச் சேர்ந்த கடற்படைகள் இந்த நிகழ்வில் பங்கேற்பதால் விசாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டது. கிட்டத்தட்ட 30 நாடுகளின் கடற்படைகள் இந்த நிகழ்வில் பங்கேற்பதை உறுதிப்படுத்தியுள்ளன.
- "Synergy Across the Seas" என்பது இந்தப் பன்னாட்டுக் கடற்படைப் பயிற்சியின் கருப்பொருளாகும். கடற்படையினருக்கு தொழிற்முறை கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும், உலகெங்கும் உள்ள கடற்படைகளின் சிறந்த நடைமுறைகளை அறியவும் இந்நிகழ்வு உதவும்.

**4. AI அடிப்படையிலான முக அங்கீகார தொழில்நுட்பம், அண்மையில், மன்மத் மற்றும் பூசாவல் இரயில் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ளன. இவ்விரு இரயில் நிலையங்களும் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. மத்தியபிரதேசம்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கர்நாடகா

ஈ. குஜராத்

- இந்திய இரயில்வே ஆனது மகாராஷ்டிராவின் மன்மத் மற்றும் பூசாவல் மற்றும் கர்நாடக மாநிலத்தின் பெங்களூரு இரயில் நிலையத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான முக அங்கீகார தொழில்நுட்பத்தை நிறுவியுள்ளது. இரயில்வே அமைச்சகத்தின்கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனம், வீடியோ கண்காணிப்பு அமைப்பை முக அங்கீகாரம் மற்றும் வீடியோ பகுப்பாய்வுகளுடன் வழங்கும் திட்டத்தை இரயில்டெல் மேற்கொள்கிறது.
- இந்த முக அங்கீகார முறையின் வெளியீட்டை இரயில்வே பாதுகாப்புப்படை (RPF) தனது தற்போதைய குற்றவியல் தரவுத்தளத்துடன் இணைக்கும். இதன்மூலம், இரயில் நிலையங்களில் குற்றவாளிகளை அடையாளங்காண்பதும் எளிதாகிவிடும்.

**5. உலகின் மிகவுயர்ந்த இரயில்பாலம் கட்டப்படவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**




அ. ஹிமாச்சலபிரதேசம்

ஆ. உத்தரகண்ட்

இ. சிக்கிம்

**ஈ. ஜம்மு – காஷ்மீர் ☑**

- காஷ்மீர் பள்ளத்தாக்கை இந்திய இரயில்வே வலையமைப்புடன் இணைக்கும் முக்கிய உதம்பூர் – ஸ்ரீநகர் – பாரமுல்லா இரயில் இணைப்புத் திட்டத்தின் ஒருபகுதியாக, பக்கல் மற்றும் கௌரியை இணைக்கும் வகையில் ஒரு புதிய இரயில் பாலம் கட்டப்படவுள்ளது.
- ஜம்மு – காஷ்மீரின் புதிதாக உருவாக்கப்பட்ட யூனியன் பிரதேசத்தில் கட்டப்படவுள்ள இந்த இரயில் பாலம் உலகின் மிகவுயர்ந்த இரயில் பாலமாக இருக்கும். 2021 டிசம்பர் மாதத்துக்குள் இந்தத் திட்டம் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

❖ திட்டமிடப்பட்டுள்ள இப்பாலம் 1.315 கி.மீ நீளங்கொண்டதாக இருக்கும். ஆற்றுப்படுகையிலிருந்து 359 மீட்டர் உயரத்தில் இது கட்டப்படும். தற்போது, வரை உலகின் மிகவுயர்ந்த இரயில் பாலமாக சீனாவின் பீபன் ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள சுய்பாய் இரயில் பாலம் உள்ளது.

**6. உலக ஹிந்தி நாள், கொண்டாடப்படும் தேதி எது?**

அ. ஜனவரி 8

ஆ. ஜனவரி 9

हिंदी

**இ. ஜனவரி 10 ☑**

ஈ. ஜனவரி 11

❖ விஸ்வ ஹிந்தி திவாஸ் அல்லது உலக ஹிந்தி நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 10 அன்று கொண்டாடப்படுகிறது. 1975ஆம் ஆண்டு ஜன.10–12 வரை நாக்பூரில் நடைபெற்ற முதலாவது உலக ஹிந்தி மாநாட்டை நினைவுகூரும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது. இம்முதலாவது ஹிந்தி மாநாட்டை அப்போதைய இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி தொடங்கிவைத்தார்.

❖ முதலாவது உலக ஹிந்தி நாள் 2006 ஜன.10 அன்று அனுசரிக்கப்பட்டது. இந்நாள் உலகம் முழுவதும் ஹிந்தியை கொண்டுசெல்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. ஹிந்திமொழி பேசாத பிறமொழிவழி தேசிய இனத்தினரின் எதிர்ப்பையும் மீறி, ஹிந்திய அரசு ஹிந்தி மொழியை அலுவல் மொழியாக, 1949 செப்டம்பர் 14 அன்று ஏற்றுக்கொண்டது.

**7. 'முப்பவரப்பு வெங்கைய நாயுடு சிறப்பு தேசிய விருது'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. K சிவன்



**ஆ. M S சுவாமிநாதன் ☑**

இ. அசிம் H பிரேம்ஜி

ஈ. டூட்டி சந்த்

❖ 'பசுமைப்புரட்சி'யின் தந்தை Dr. M S சுவாமிநாதன், 'முப்பவரப்பு வெங்கைய நாயுடு சிறப்பு தேசிய விருது' பெற்றவராக தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இவ்விருதை ஹைதராபாத்தை தளமாகக்கொண்ட முப்பவரப்பு அறக்கட்டளை நிறுவியுள்ளது. பிரபல வேளாண் விஞ்ஞானியும் தாவர மரபியலாளருமான M S சுவாமி நாதன் அவர்கள் விவசாயத்துறையில் ஆற்றிய பங்களிப்புகளுக்காக இவ்விருதைப் பெற்றார்.

❖ இந்த விருது, ஹைதராபாத்தில் நடைபெற்ற முப்பவரப்பு அறக்கட்டளையின் 10ஆவது ஆண்டுவிழாவின் போது இந்திய குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா வழங்கினார்.

**8. நரிவால் மந்தாரையை (Foxtail Orchid) கொண்டிருக்கும் இலச்சினையை தனது சட்டமன்றத்தின் புதிய இலச்சினையாக அண்மையில் ஏற்றுக்கொண்ட மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம் ஆ. ஹிமாச்சலபிரதேசம்

**இ. அருணாச்சலபிரதேசம் ☑** ஈ. மிசோரம்

❖ அருணாச்சலபிரதேச மாநிலம் தனது சட்டமன்றத்திற்கு புதிய இலச்சினையை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தப் புதிய இலச்சினை (logo), மாநிலத்தின் தனித்துவமான அடையாளத்தையும் கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற அவைத்தலைவர் PD சோனா, இப்புதிய இலச்சினையின் படங்களை அவை உறுப்பினர்களிடையே காண்பித்தார். இப்புதிய இலச்சினையில், தேசியச்சின்னமும் அருணாச்சலபிரதேச மாநிலத்தின் மாநில மலரான, நரிவால் மந்தாரையும் உள்ளது.

**9.எந்த மாநிலத்தில் உள்ள ஆயுர்வேத பல்கலைக்கழகத்தின் நிறுவனங்கள், "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள்" என்ற தகுதியைப்பெறவுள்ளன?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. குஜராத் ☑**

ஈ. சிக்கிம்




❖ ஜாம்நகரில் உள்ள குஜராத் ஆயுர்வேத பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத கல்வி நிறுவனங்கள் தொகுப்புக்கு, "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்விநிறுவனங்கள்" என்னும் தகுதியை வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கான மசோதா வரவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

❖ இந்தியாவில் பொது சுகாதார சவால்களை எதிர்கொள்ள ஆயுஷ் முறைகளின் பங்களிப்பு அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு "தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது" என்னும் தகுதியை வழங்குவது பொதுநலத்தில் ஆயுர்வேதத்தின் பங்களிப்பை அதிகப்படுத்த உதவும். ஆயுர்வேத முறைகளின் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் அணுகுமுறைகளால் குறைந்த செலவில் உடல்நலம் கிடைக்கும். இதனால் ஆயுர்வேதத்தை வலுப்படுத்துவது, அரசின் செலவினத்தையும் குறைக்கும்.

**10.உலக வங்கியால் மதிப்பிடப்பட்டபடி, 2020–21ஆம் நிதியாண்டுக்கான (FY20) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 6 %

**ஆ. 5.8 % ☑**

இ. 2 %

ஈ. 1.5 %




❖ உலக வங்கி, அண்மையில் தனது "ஜனவரி 2020 உலகளாவிய பொருளாதார வாய்ப்பு அறிக்கை'யை வெளியிட்டது. அதில், நடப்பு நிதியாண்டில் (2019–20) நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக இருந்தாலும், வரும் நிதியாண்டில் (2020–21) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.8% ஆக உயரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கி சாராத நிதி நிறுவனங்களின் மந்தநிலையே இதற்குக்காரணமாக அமைந்துவிட்டது என உலக வங்கி தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5% ஆக இருக்கும் என மத்திய அரசு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருவையாற்றில் ஸ்ரீதியாகராஜர் 173ஆவது ஆராதனை விழா தொடங்கியது.
- தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சென்னை–அந்தமான் தீவுகளுக்கு இடையே ₹1,224 கோடியில் சுமார் 2,250 கிலோ மீ., தொலைவுக்கு கடலுக்கடியில் கண்ணாடியிழை கம்பி வடம் பதிப்பதற்கான திட்டப்பணியை மத்திய தொலைத்தொடர்பு & தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் சென்னையில் தொடக்கிவைத்தார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த இந்திய அரசியல் தலைவரின் வாழ்க்கைகுறித்த, 'கர்மயோதா கிரந்த்' என்ற நூலை அண்மையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார்?**

அ. அடல் பிகாரி வாஜ்பாய்

**ஆ. நரேந்திர மோடி ☑**

இ. L K அத்வானி

ஈ. அருண் ஜெட்லி



❖ உள்துறை அமைச்சர் அமித் ஷா, அண்மையில், 'கர்மயோதா கிரந்த்' என்ற நூலை வெளியிட்டார். இந்தியாவின் தற்போதைய பிரதமரான மோடியின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டது இந்த நூல். நூல்வெளியீட்டு நிகழ்வின்போது, நரேந்திர மோடியின் தலைமைப்பண்புகளை சிறப்பித்து அமித் ஷா உரையாற்றினார். 2014ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் பதினான்காவது பிரதமராக இருந்து வருகிறார் மோடி. அதற்கு முன்னர், அவர், 2001 முதல் குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தார்.

**2. 'பூர்வோதயா' எனப்படும் கிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான திட்டத்தைத் தொடங்கவுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

ஆ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

இ. வட கிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகம்

**ஈ. எஃகு அமைச்சகம் ☑**



❖ "பூர்வோதயா – ஒருங்கிணைந்த எஃகு மையத்தின்மூலம் கிழக்குப் பிராந்தியத்தின் விரைவான வளர்ச்சி" என்ற திட்டத்தை மத்திய எஃகு அமைச்சகம் தொடங்கவுள்ளது. எஃகு மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சரான தர்மேந்திர பிரதான் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைப்பார்.

❖ இந்தியாவின் கிழக்கு மாநிலங்களான ஒடிசா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மேற்கு வங்கம் மற்றும் வடக்கு ஆந்திரபிரதேசம் ஆகியவை பெருமளவு எஃகு இருப்புக்களைக் கொண்டிருந்த போதிலும் வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் உள்ளன. இந்த ஒருங்கிணைந்த எஃகு மையமானது கிழக்குப் பிராந்தியத்தில் ஓர் ஒருங்கிணைந்த சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.


**3.மத்திய விளையாட்டு அமைச்சகமானது இலக்னோவில் 23ஆவது தேசிய இளையோர் விழாவை ஏற்பாடு செய்யவுள்ளது. எந்தப் பிரபலமான ஆளுமையின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இது கொண்டாடப்படவுள்ளது?**

அ. A P J அப்துல் கலாம்

**ஆ. சுவாமி விவேகானந்தர் ☑**

இ. B R அம்பேத்கர்

ஈ. பகத் சிங்



- ❖ இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகமானது 23ஆவது தேசிய இளையோர் விழாவை உத்தரபிரதேச மாநில அரசுடன் இணைந்து இலக்னோவில் ஜன.12 முதல் 16 வரை நடத்த உள்ளது. கொல்கத்தாவைச் சேர்ந்த பிரபல துறவியான சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

- ❖ சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளான ஜன.12 தேசிய இளையோர் நாளாகவும், அந்நாளிலிருந்து அதற்கடுத்து வரும் ஒருவாரகாலம் தேசிய இளையோர் வாரமாகவும் கொண்டாடப்படுகிறது. இதன் போது, இளையோருக்கென பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன; மேலும், தேசிய இளையோர் விருதுகளும் அப்போது வழங்கப்படுகின்றன.

**4. இந்திய எரிசக்திக் கொள்கைகளின் முதல் விரிவான ஆய்வு, அண்மையில், எந்தச்சர்வதேச அமைப்பால் வெளியிடப்பட்டது?**

அ. உலக எரிசக்திக் கழகம்

**ஆ. பன்னாட்டு எரிசக்தி முகமை ☑**

இ. பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு

ஈ. பன்னாட்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம்

- ❖ பன்னாட்டு எரிசக்தி முகமையானது (IEA) அண்மையில் இந்திய மதியுரையகமான NITI ஆயோக்குடன் இணைந்து இந்தியாவின் எரிசக்திக் கொள்கைகளின் முதல் விரிவான மதிப்பாய்வை வெளியிட்டது. புது தில்லியில் உள்ள NITI ஆயோக் தலைமையகத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. பாரிஸை தளமாகக்கொண்ட பன்னாட்டு எரிசக்தி முகமையின் சங்க உறுப்பினராக கடந்த 2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியா சேர்க்கப்பட்டபிறகு வெளியிடப்படும் முதல் மதிப்பாய்வாகும் இது.

- ❖ இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் வளர்ச்சியை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. நாட்டின் மொத்த நிறுவப்பட்ட திறனில் கிட்டத்தட்ட 23% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்ததாகும்.

**5. கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு உரை–நூல்களைத் தயாரிக்கவுள்ளதாக சமீபத்தில் அறிவித்துள்ள மாநில அரசு எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. உத்தரபிரதேசம் ☑**

இ. கேரளா

ஈ. மத்தியபிரதேசம்

- ❖ கற்றல் குறைபாடுகளுடைய குழந்தைகளுக்காக சிறப்பு உரை–நூல்கள் தயாரிக்கப்படும் என உத்தர பிரதேச மாநில அரசு அண்மையில் அறிவித்தது. டவுன் நோய்க்குறி, கவனப்பற்றாக்குறை கோளாறு, ஆட்டிசம் மற்றும் டிஸ்லெக்ஸியா போன்ற குறைபாடுகள் காரணமாக அறிவுசார் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் அரசு நடத்தும் தொடக்க மற்றும் இடைநிலைப்பள்ளிகளில் சேர்க்கப்படுவார்கள்.

- ❖ ஆங்கிலம், ஹிந்தி, கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கான பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**6.பேச்சுரிமை மற்றும் இணையம் மூலம் ஒரு வணிகத்தைத் தொடங்குவதற்கான உரிமை ஆகியவை இந்திய அரசியலமைப்பின் எந்தப் பிரிவின்கீழ் வருகின்றன?**



அ. பிரிவு 17

ஆ. பிரிவு 18

**இ. பிரிவு 19 ☑**

ஈ. பிரிவு 20

- ❖ அரசியலமைப்புப் பிரிவு 19 (1) (a) – பேச்சு மற்றும் கருத்துச் சுதந்தரத்திற்கான உரிமையை அளிக்கிறது. அதேநேரத்தில், அதன் துணைப்பிரிவு (g) – எந்தவொரு தொழிலையும் பழகுவதற்கான அல்லது எந்தவொரு தொழில், வர்த்தகம் / வணிகத்தையும் மேற்கொள்வதற்கான உரிமையை வழங்குகிறது.
- ❖ 19 (1) (a) மற்றும் 19 (1) (g) பிரிவுகளின்கீழ் பேச்சு மற்றும் கருத்துச்சுதந்தரம் மற்றும் இணையம் மூலம் ஒரு வணிகத்தை மேற்கொள்வதற்கான உரிமை ஆகியவை இந்திய அரசியலமைப்பின் பாதுகாப்பைப் பெறுகின்றன என அண்மையில் இந்திய உச்சநீதிமன்றம் அறிவித்தது. ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் இணையத்திற்கு விதிக்கப்பட்ட 5 மாத தடையின் பின்னணியில் இத்தீர்ப்பு வந்துள்ளது.

**7. 'நிதியியல் உள்ளடக்கத்திற்கான தேசிய உத்தி – National Strategy for Financial Inclusion' என்ற அறிக்கை, அண்மையில் எந்த அமைப்பால் வெளியிடப்பட்டது?**

**அ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

ஆ. இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்

இ. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

ஈ. இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம்

- ❖ இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில், 'நிதியியல் உள்ளடக்கத்திற்கான தேசிய உத்தி' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. முறையான வங்கிகளுடன் இணைந்து கொடுப்பனவு வங்கிகள், சிறு நிதி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் நியாயவிலைக்கடைகள் போன்ற வங்கிசாரா அலகுகளும் டிஜிட்டல் வங்கியியலைப் பழகிக்கொள்ளவேண்டும் என இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.
- ❖ 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அனைத்து கிராமங்கள் மற்றும் மலையகப்பகுதிகளிலும் விற்பனை நிலையங்களை அதிகரிக்குமாறு ரிசர்வ் வங்கி (RBI) பிற வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்குள் பொதுக்கடன் பதிவேட்டை (Public Credit Registry) முழுமையாக செயல்பட வைக்கவும் இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

**8.தேசிய குற்றப்பதிவு பணியகத்தின் அண்மைய அறிக்கையின்படி, பெண்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ள இடம் எது?**

**அ. உத்தரபிரதேசம் ☑** ஆ. மேற்கு வங்கம்

இ. ஜார்க்கண்ட் ஈ. பீகார்



❖ கடந்த 2018ஆம் ஆண்டுக்கான 'இந்தியாவில் குற்றங்கள்' புள்ளிவிவரங்களின் பதிப்பை தேசிய குற்றப் பதிவு பணியகம் (NCRB) வெளியிட்டது. அறிக்கையின்படி, 59445 குற்றப்பதிவுகளுடன் பெண்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ள இடமாக உத்தரபிரதேசம் உள்ளது. இந்த ஆண்டில், அதிக எண்ணிக்கையிலான பாலியல் வன்புணர்வு வழக்குகள் மத்தியபிரதேச மாநிலத்திலும், மேற்கு வங்க மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான அமிலத்தாக்குதல் வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

❖ கடந்த 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த 2018ஆம் ஆண்டில், இந்தியாவில், குற்றங்கள் 1.3% அதிகரித்துள்ளன என அவ்வறிக்கை கூறியுள்ளது. பெண்களுக்கு எதிரான ஒட்டுமொத்த குற்றங்களின் எண்ணிக்கையும் கடந்த மூன்றாண்டுகளில் படிப்படியாக அதிகரித்துள்ளது.

**9.அண்மையில் ஓமனின் புதிய ஆட்சியாளர் / சுல்தான் என அறிவிக்கப்பட்டவர் யார்?**



அ. காசிம் சுலைமானி

ஆ. கபூஸ் பின் சையத் அல் சையத்

**இ. ஹைதம் பின் தாரிக் ☑**

ஈ. மஜூப் ஸ்வேரி

❖ ஓமனின் ஆட்சியாளரும், மத்திய கிழக்கு நாடுகளில் நீண்டகாலம் பணியாற்றிய ஆட்சியாளர்களுள் ஒருவருமான சுல்தான் கபூஸ் பின் சையத் அல் சையத் சமீபத்தில் காலமானார். அவர் நீண்டகாலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் கடந்தமாதம் பெல்ஜியத்தில் மருத்துவ சிகிச்சை பெற்றுவந்தார்.

❖ அவரது மறைவுக்குப்பின், ஓமனின் முன்னாள் கலாசார அமைச்சர் ஹைதம் பின் தாரிக், ஓமனின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார். ஓமன் அரசியலமைப்புப்படி, சுல்தான் பதவி காலியான 3 நாட்களுக்குள் அவற்றை நிரப்புவது கட்டாயமாகும்.

**10. 'பருப்பு வகைகள் குறித்த கூட்டம் (The Pulses Conclave) – 2020' என்ற பெயரில் ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் பன்னாட்டு பருப்பு மாநாடு நடைபெறவுள்ள மாநிலம் எது?**




அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. கர்நாடகா

**ஈ. மகாராஷ்டிரா ☑**

❖ இந்தியாவின் பருப்பு வகைகள் மற்றும் தானியங்கள் தொழிற்துறை மற்றும் வர்த்தகத்தின் தலைமை அமைப்பான இந்திய பருப்பு வகைகள் மற்றும் தானியங்கள் சங்கமானது 'The Pulses Conclave' என அழைக்கப்படும் பன்னாட்டு பருப்பு மாநாட்டின் ஐந்தாவது பதிப்பை பிப்.12–14 வரை புனேவில் உள்ள லோனாவாலாவில் நடத்தவுள்ளது.

❖ இச்சங்கம் மும்பையில் அமைந்துள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பருப்புவகைகளை உற்பத்திசெய்யும் நாட்டைச் சேர்ந்தோருக்கு, இத்துறைசார்ந்த வணிக வாய்ப்புகளை ஆராய்வதற்கு இம்மாநாடு உதவும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2020ஆம் ஆண்டின், "உலக எதிர்கால எரிசக்தி" உச்சிமாநாட்டை நடத்துகின்ற நகரம் எது?**

அ. அபுதாபி ☑

ஆ. ரியாத்

இ. துபாய்

ஈ. சார்ஜா

❖ "உலக எதிர்கால எரிசக்தி உச்சிமாநாடு" அண்மையில் அபுதாபியில் தொடங்கி நடைபெற்றுவருகிறது. இந்த உச்சிமாநாடு, மத்திய கிழக்குப்பிராந்தியத்தின் எதிர்கால எரிசக்தி மற்றும் நிலைத்தன்மை குறித்த மிகப்பெரிய நிகழ்வாகும். இந்நிகழ்வு, ஆண்டுதோறும், அபுதாபியில் உள்ள தேசிய கண்காட்சி மையத்தில் நடைபெறுகிறது. "Rethinking Global Consumption, Production & Investment – உலகளாவிய நுகர்வு உற்பத்தி & முதலீடு ஆகியவற்றை மறுபரிசீலனை செய்தல்" என்பது நடப்பாண்டில் (2020) நடைபெறுகின்ற இந்த மாநாட்டுக்கான கருப்பொருளாகும்.

❖ நான்கு நாள் நடைபெறுகின்ற இந்த நிகழ்வில், உலகம் முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான பங்கேற்பாளர்கள் மற்றும் கண்காட்சியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனுடன் காலநிலை கண்டுபிடிப்பு பரிமாற்றம் மற்றும் எதிர்கால நிலைத்தன்மை உச்சிமாநாடு ஆகியவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**2. மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி, சமீபத்தில் கோவாவிலிருந்து 'யஷஸ்வினி' என்ற நலத்திட்டத்தை தொடங்கிவைத்தார். இத்திட்டம் எதனை நோக்கமாகக் கொண்டுள்ளது?**

அ. சிறார்களுக்கு தடுப்பூசி போடுதல்

ஆ. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு உதவுதல் ☑

இ. கடற்கரைகளை தூய்மைப்படுத்துதல்

ஈ. பள்ளிகளுக்கு உதவுதல்



❖ மத்திய பெண்கள் & குழந்தைகள் மேம்பாடு மற்றும் ஜவுளித்துறை அமைச்சரான ஸ்மிருதி இரானி, சமீபத்தில், கோவாவிலிருந்து 'யஷஸ்வினி' என்ற திட்டத்தை தொடங்கிவைத்தார். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ₹5 இலட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள இத் திட்டம் ஒரு பெண்கள் மேம்பாட்டுத் திட்டமாகும்.

❖ நிபுணர்களிடமிருந்து வழிகாட்டுதல்களைப் பெறவும் இந்தத் திட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உதவும். இந்த நிகழ்ச்சியின்போது, ஸ்வஸ்திய சகி திட்டம் மற்றும் நடமாடும் மார்பகப் புற்றுநோய் பரிசோதனை திட்டம் ஆகியவற்றையும் அமைச்சர் தொடங்கிவைத்தார். கோவாவில் உள்ள அனைத்து மகளிர்க்கும் மார்பகப்புற்றுநோய் பரிசோதனையை மேற்கொள்வதற்கு, அங்கன்வாடி பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**3. உழவர்கள் தங்கள் கரும்புப்பயிரை வெட்டுக்கிளிகளிடமிருந்து பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பரப்புரையைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

ஆ. இராஜஸ்தான்

**இ. உத்தரபிரதேசம் ☑**

ஈ. பீகார்



❖ உத்தரபிரதேச மாநில அரசின் கரும்பு மேம்பாட்டுத்துறையானது, உழவர்கள் தங்களின் கரும்புப் பயிர்களை வெட்டுக்கிளிகளிடமிருந்து பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பரப்புரையை அண்மையில் தொடங்கியது. 2019 டிசம்பர் இறுதியில், குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் பயிரிடப்பட்டிருந்த 2500 ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்களை வெட்டுக்கிளிகள் சேதப்படுத்தின.

❖ வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கு பல்லாயிரம் லிட்டர் பூச்சிக்கொல்லிகளை இவ்விரு மாநில அரசுகளும் பயன்படுத்தின. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவியாக குஜராத் மாநில அரசு சமீபத்தில் ஹெக்டேர் ஒன்றுக்கு ₹18,500 ரூபாயை நிவாரணத்தொகையாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**4. 'சிறந்த திரைப்படம், சிறந்த பார்வையாளர்கள் மற்றும் சிறந்த சமூகம்' என்ற கருப்பொருளைக்கொண்ட ஒரு சர்வதேச திரைப்பட விழா, அண்மையில் எந்த நகரத்தில் தொடங்கியது?**

அ. டோக்கியோ

ஆ. துபாய்

**இ. டாக்கா ☑**

ஈ. கொழும்பு




❖ புகழ்பெற்ற டாக்கா சர்வதேச திரைப்பட விழாவின் பதினெட்டாவது பதிப்பு, சமீபத்தில், வங்கதேசத்தின் தலைநகரான டாக்காவில் தொடங்கியது. "சிறந்த திரைப்படம், சிறந்த பார்வையாளர்கள் மற்றும் சிறந்த சமூகம்" என்ற கருப்பொருளுடன் 2020 ஜனவரி 11 முதல் 19 வரை இந்த விழா நடத்தப்படுகிறது.

❖ டாக்காவின் பல்வேறு இடங்களில் நடைபெறவிருக்கும் எட்டு நாள் நீடிக்கும் இந்த விழாவின்போது, 74 நாடுகளைச்சேர்ந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்படவுள்ளன. திரைப்படவிழாவின் போது "சினிமாவில் பெண்கள்" என்ற கருப்பொருளின்கீழ் மாநாடு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

**5. இவ்வாண்டு (2020) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள, 'பரிக்ஷா பே சர்ச்சா' என்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் திட்டத்தில் பங்கேற்கவுள்ளவர் யார்?**

அ. வெங்கையா

**ஆ. நரேந்திர மோடி ☑**

இ. ரமேஷ் போக்ரியால் நிஷாங்க்

ஈ. K சிவன்



❖ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, இவ்வாண்டு (2020) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள, 'பரிக்ஷா பே சர்ச்சா' என்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் திட்டத்தில் பங்கேற்கவுள்ளார். இந்நிகழ்வு, ஜனவரி 20 அன்று புது தில்லியில் உள்ள டால்கடோரா மைதானத்தில் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சகம், அண்மையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடமிருந்து இந்நிகழ்வு குறித்த பரிந்துரைகள் மற்றும் கேள்விகளைக்கேட்டது.

❖ நிகழ்வின் மூன்றாவது பதிப்பான இதில், பிரதமர் ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சந்தித்து தேர்வு பயத்தை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து உரையாற்றுவார்.

**6. அண்மையில், "மூங்கில்–ஓர் அதிசய புல்" என்பது பற்றிய பயிலரங்கம் மற்றும் கண்காட்சி நடைபெற்ற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. அஸ்ஸாம்

ஆ. மேகாலயா

**இ. ஜம்மு – காஷ்மீர் ☑**

ஈ. அருணாச்சலபிரதேசம்



❖ ஜம்மு–காஷ்மீரின் யூனியன் பிரதேசத்தில், "மூங்கில்–ஓர் அதிசய புல்" என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிலரங்கம் மற்றும் கண்காட்சி அண்மையில் நடத்தப்பட்டது. வடகிழக்குப் பிராந்தியத்தின் அடியொற்றி ஜம்மு–காஷ்மீரில் மூங்கில் தொழிற்துறையின் வளர்ச்சியை இப்பயிலரங்கம் மையப்படுத்தியிருந்தது.

❖ இந்நிகழ்ச்சியை வடகிழக்குப் பகுதி வளர்ச்சி அமைச்சகமும் ஜம்மு–காஷ்மீர் அரசாங்கமும் இணைந்து இதனை நடத்தியுள்ளன. இப்பயிலரங்கின்போது, வடகிழக்கு கவுன்சிலின் திட்ட ஆலோசகர், மூங்கில் தொழிற்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு பரிந்துரைகளைப் பகிர்ந்துகொண்டார். இப் பயிலரங்கத்தை மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் திறந்துவைத்தார்.

**7.எந்த மாநிலத்தில், இந்திய குழந்தை மருத்துவ அகாடமியால், 'ஒவ்வொரு குழந்தைக்கும் காசநோயற்ற காற்று – TB free Air for Every Child' என்னும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?**

அ. பீகார்

ஆ. மத்தியபிரதேசம்

இ. கர்நாடகா

**ஈ. கேரளா ☑**



❖ இந்திய குழந்தை மருத்துவ அகாடமியால் கேரள மாநிலத்தில், 'ஒவ்வொரு குழந்தைக்கும் காசநோய் இல்லாத காற்று' என்னும் திட்டத்தைத் தொடங்கியது. 2500 குழந்தை மருத்துவ நிபுணர்களுக்கு காசநோய் சிகிச்சை நெறிமுறை குறித்து இந்திய குழந்தை மருத்துவ அகாடமி பயிற்சியளிக்கவுள்ளது. மேலும், சிகிச்சைக்கு ஒரு சீரான மற்றும் தரப்படுத்தப்பட்ட நடைமுறையை அவர்கள் கையாள்வார்கள்.

❖ இலக்கு ஆண்டான 2025ஆம் ஆண்டுக்கு முன்னதாக, அம்மாநிலத்தின் அனைத்துக் குழந்தைகளும் காசநோயிலிருந்து விடுபடுவதை இந்தத்திட்டம் உறுதிசெய்யும். அவர்கள் பள்ளிகளிலும் பரப்புரைகளை

நடத்துவுள்ளதோடு, ஊட்டச்சத்துக்குறைபாடு, பெரியவர்கள் புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் மோசமான விளைவுகள் பற்றியும் விளக்குவார்கள்.

**8.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "Shopper" என்றால் என்ன?**

அ. மின்னணு-வணிக வலைத்தளம்



**ஆ. தீம்பொருள் ☑**

இ. எந்திர மனிதன்

ஈ. பொருட்கள் வாங்குவதற்கான மின்-வாகனம்

- முன்னனி கணினி தீநிரல் எதிர்ப்பு நிறுவனமான காஸ்பர்ஸ்கை, ஷாப்பர் என்னும் 'Trojan' வகை கணினி தீம்பொருளால் (Malware) 14 சதவீதத்துக்கும் அதிகமான இந்தியர்களின் திறன்பேசிகள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

- திறன்பேசி உரிமையாளரின் அனுமதியின்றி அவருக்குத் தெரியாமலே இத்தீம்பொருள் நிறுவப்படும் இந்தத் தீம்பொருள், திறன்பேசி உரிமையாளரின் பெயரால் பல செயலிகளுக்கு கருத்துரை எழுதுவது, விளம்பரங்களைக் காட்டுவது பிற செயலிகளை நிறுவுவது என பல்வேறு பணிகளை மறைமுகமாக செய்கிறது. இந்தத் தீம்பொருளால் பாதிக்கப்பட்டுள்ள பயனர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இரஷ்யாவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

**9.ஜனவரி மாதம் வடவிந்தியாவில் கொண்டாடப்படும் மகர சங்கராந்தியுடன் கீழ்க்காணும் இந்தியாவின் எந்தப் பண்டிகை ஒத்துப்போகவில்லை?**

அ. தைப்பொங்கல்



**ஆ. விஷு ☑**

இ. மகர சங்கராந்தி

ஈ. மாக் பிஹு

- 'லோரி' என்பது வட இந்தியாவில் கொண்டாடப்படும் ஒரு திருவிழாவாகும். குறிப்பாக பஞ்சாபில் 'மகர சங்கராந்தி'க்கு முன்னதாக இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. குளிர்காலம் நிறைவடைவதையும், அந்தப் பகுதியில் கோடைகாலம் தொடங்குவதையும் குறிக்கும் வகையில் இது உள்ளது. பாரம்பரிய நாட்காட்டியின்படி, இந்த ஆண்டு (2020) 'லோரி' திருவிழா ஜன.13 அன்று வருகிறது. இது முக்கியமாக பஞ்சாப், ஹரியானா மற்றும் தில்லியில் கொண்டாடப்படுகிறது.

- இந்தத் திருவிழா மகாராஷ்டிரா, கோவா, ஆந்திரபிரதேசம், மேற்கு வங்கம் (பௌஷ் சங்கராந்தி என்றும் அழைக்கப்படுகிறது), கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் 'மகர சங்கராந்தி' என்று கொண்டாடப்படுகிறது. மத்திய இந்தியாவில் 'சுகரத்' என்றும், அஸ்ஸாம் மாநிலத்தில் 'மாக் பிஹு' என்றும் புவியெங்கும் பரவி பார்போற்ற வாழும் தமிழர்களால் 'தைப்பொங்கல்' திருவிழாகவும் இது கொண்டாடப்படுகிறது. வைசாகியுடன் இணைந்து விஷு கொண்டாடப்படுகிறது.

**10. SEBIஇன் அறிவுறுத்தல்களின்படி, எந்தக் காலக்கெடுவுக்குள் 500 முன்னணி நிறுவனங்களின் தலைவர் (Chairman) மற்றும் மேலாண்மை இயக்குநர் (Managing Director (MD)) பதவிகளைப் பிரித்து, இருவேறு நபர்களால் அது நிர்வகிக்கப்பட வேண்டும்?**

அ. 2020 ஏப்ரல் 1

ஆ. 2021 ஏப்ரல் 1

**இ. 2022 ஏப்ரல் 1 ☑**

ஈ. 2023 ஏப்ரல் 1



- பங்குச்சந்தை ஒழுங்காற்றுநரான SEBIஇன் அண்மைய அறிவிப்பின்படி, சந்தை மூலதனமயமாக்கலின் மூலம் பட்டியலிடப்பட்ட 500 முன்னணி நிறுவனங்களின் தலைவர் & மேலாண்மை இயக்குநரின் பதவிகளைப் பிரித்து, இருவேறு நபர்களை நியமிக்கப்பதற்கான காலக்கெடு 2022 ஏப்ரல் வரை (அதாவது இன்னும் ஈராண்டுகளுக்கு) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
- முன்னதாக, 2020 ஏப்ரலுக்குள் இதனைச் செய்து முடிக்க அந்நிறுவனங்கள் கட்டாயப்படுத்தப்பட்டன. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பதவிகளைப் பிரிக்கும் திட்டம், முதன்முதலில், உதய் கோட்டக் தலைமையிலான கார்ப்பரேட் கவர்னன்ஸில் மேற்கொள்ளப்பட்டது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தென்னிந்திய நூல் விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெறும் 43ஆவது சென்னை புத்தகக்கண்காட்சியை முதலமைச்சர் கே. பழனிச்சாமி தொடக்கிவைத்தார்.
  - புத்தகக் கண்காட்சியின் தொடக்கவிழாவின்போது வழங்கப்பட்ட விருதுகள்:–
    - சிறந்த பதிப்பாளருக்கான பதிப்புச் செம்மல் க.கணபதி விருது – அரு.லெட்சுமணன்.
    - சிறந்த நூல் விற்பனையாளருக்கான பதிப்பகச்செம்மல் ச.மெய்யப்பன் விருது – R.அருணாச்சலம்.
    - சிறந்த தமிழறிஞருக்கான பாரி செல்லப்பனார் விருது – பொற்கோ.
    - சிறந்த சிறுவர் அறிவியல் நூலுக்கான நெல்லை சு.முத்து விருது – N S சிதம்பரம்.
    - தென்னிந்திய நூல் விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சிறந்த பதிப்பாளருக்கான விருது – இராம லெட்சுமணன்.
    - சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான குழந்தை கவிஞர் அழ. வள்ளியப்பா விருது – செ.சுகுமாரன்.
    - சிறந்த பெண் எழுத்தாளருக்கான முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் விருது – இரமணிசந்திரன்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின், 'SCOஇன் 8 அதிசயங்கள்' பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய நினைவுச்சின்னம் எது?**



அ. தாஜ் மஹால்

**ஆ. ஒற்றுமையின் சிலை ☑**


இ. தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் திருக்கோவில்

ஈ. அஜந்தா குகைகள்

❖ குஜராத்தின் அண்மையில் கட்டப்பட்ட, 'ஒற்றுமை சிலை' என்னும் நினைவுச்சின்னம், அண்மையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பால் (SCO) வெளியிடப்பட்ட, 'SCOஇன் எட்டு அதிசயங்கள்' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இது உலகின் மிகவுயரமான சிலையாகும். இந்திய விடுதலைப் போராட்ட வீரர் சர்தார் வல்லபாய் படேலுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இது கட்டப்பட்டது.

❖ குஜராத்தின் கெவாடியா காலனியில் 182 மீ., உயரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள இச்சிலையை, கடந்த 2018 அக்டோபரில் இந்தியப்பிரதமர் திறந்துவைத்தார். சர்தார் சரோவர் அணைக்கு நேரெதிரே நர்மதா ஆற்றில் இந்தச் சிலை கட்டப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், இரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய எட்டு உறுப்புநாடுகளை SCO கொண்டுள்ளது.

**2.அண்மையில், மத்திய சேமக்காவல்படையின் புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. இராஜீவ் இராய் பட்நாகர்

**ஆ. AP மகேஸ்வரி ☑**

இ. விஜய் குமார்

ஈ. அரவிந்த்குமார்

❖ மத்திய அமைச்சரவை நியமனக்குழுவால் மத்திய சேமக்காவல்படையின் (CRPF) புதிய தலைமை இயக்குநராக AP மகேஸ்வரி IPS நியமிக்கப்பட்டுள்ளார். CRPFஇன் முந்தைய தலைமை இயக்குநரான இராஜீவ் இராய் பட்நாகர் கடந்த மாதம் ஓய்வுபெற்றார். ITBPஇன் தலைமை இயக்குநராக இருந்த SS தேஸ்வாலுக்கு CRPFஇல் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

❖ தற்போது, மத்திய உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளராக (உள்நாட்டு பாதுகாப்பு) உள்ள AP மகேஸ்வரி IPS (உத்தரபிரதேசம்: 1984), 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 வரை புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**3.இந்திய சந்தையில் தனது இருப்பை விரிவுபடுத்துவதற்காக 'EbixCash'உடன் அண்மையில் இணைந்த பிரபலமான பன்னாட்டுப் பணப் பரிமாற்ற நிறுவனம் எது?**

அ. பேபால்

**ஆ. மனிகிராம் ☑**

இ. வெஸ்டர்ன் யூனியன்

ஈ. டிரான்ஸ்பர் வைஸ்

MoneyGram.

❖ பன்னாட்டுப் பணப் பரிமாற்ற நிறுவனமான மனிகிராம் (MoneyGram) மற்றும் மென்பொருள் மற்றும் மின்னணு வணிகச் சேவைகளின் முன்னணி பன்னாட்டு வழங்குநரான EbixCash ஆகியவை இந்தியாவில் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக, அண்மையில் ஒப்பந்தமொன்றில் கையெழு–த்திட்டன. இதன்மூலம், EbixCash, இந்தியாவில், மனிகிராமின் பிரத்யேக பங்காளியாக இருக்கும்.

❖ Ebix குழுமத்தின் பல்–விநியோக நிலையங்கள் மூலம் கிராமப்புறங்களில் கூடுதல் நுகர்வோரை மனிகிராமால் சென்றடைய முடியும். மேலும், EbixCashஇன் வாடிக்கையாளர்கள், மனிகிராம் தளத்தை பல்வேறு நாடுகளில் பணப்பரிமாற்ற சேவைகளுக்கும் பயன்படுத்த இயலும்.

**4.செயலிழந்த விமானத்தை மீட்கும் கருவியைப்பெறவுள்ள முதல் இந்திய வானூர்தி நிலையம் எது?**

அ. சத்ரபதி சிவாஜி பன்னாட்டு வானூர்தி நிலையம், மும்பை

ஆ. இந்திராகாந்தி பன்னாட்டு வானூர்தி நிலையம், புது தில்லி

**இ. கெம்பகவுடா பன்னாட்டு வானூர்தி நிலையம், பெங்களூரு ☑**

ஈ. பன்னாட்டு வானூர்தி நிலையம், கொச்சின்



❖ செயலிழந்த வானூர்திகளை மீட்டெடுக்கும் திறனைக்கொண்ட இந்தியாவின் முதல் வானூர்தி நிலையமாக பெங்களூருவின் கெம்பகவுடா பன்னாட்டு வானூர்தி நிலையம் மாறியுள்ளது. சமீபத்தில், பெங்களூரு பன்னாட்டு விமான நிலையத்திற்கான செயலிழந்த வானூர்திகளை மீட்கும் கருவிகளை (**D**isabled **A**ircraft **R**ecovery **E**quipment – **DARE**) தயாரித்து, பணியில் ஈடுபடுத்துவதற்காக பெங்களூர் பன்னாட்டு விமான நிலைய நிறுவனம் (BIAL), முன்னணி விமான உபகரணங்கள் தயாரிப்பாளரான KUNZ GmbH உடன் கூட்டிணைந்தது. இதன்மூலம், KUNZ GmbH BIAL உடன் இணைந்து செயலிழந்த வானூர்தி மீட்புப் பயிற்சிக்கான மையத்தை BIAL நிறுவும்.

**5. 5 இந்திய மாநிலங்களைச்சேர்ந்த 15 தொழில்நுட்ப துளிர் நிறுவனங்களுக்கு வழிகாட்டுதலை வழங்க உள்ளதாக அண்மையில் அறிவித்த நிறுவனம் எது?**

அ. கூகிள்

**ஆ. மைக்ரோசாப்ட் ☑**

இ. அமேசான்

ஈ. பிளிப்கார்ட்




❖ குஜராத், மகாராஷ்டிரா, இராஜஸ்தான், கேரளா மற்றும் தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங்களிலிருந்து 54 தொழில்நுட்ப துளிர் நிறுவனங்களைத் தேர்வுசெய்துள்ளதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் சமீபத்தில் அறிவித்தது. இந்தத் துளிர் நிறுவனங்கள், 'Emerge–X' போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

❖ தேர்ந்தெடுக்கப்பட்ட 54 நிறுவனங்களில், ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் முதல் மூன்று இடத்தில் உள்ள 15 துளிர்நிறுவனங்களுக்கு மைக்ரோசாப்ட் வழிகாட்டுதல்களை வழங்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட துளிர் நிறுவனங்கள் அனைத்தும், 'Highway to a Hundred Unicorns' எனப்படும் மாநிலங்களில் துளிர் நிறுவன சூழலமைப்பை வலுப்படுத்தும் மைக்ரோசாப்ட் முயற்சியின் ஒருபகுதியாகும்.

**6.இந்தியா முழுவதும் 'ஆயுதப்படை படைவீரர்கள் நாள்' கொண்டாடப்பட்ட தேதி எது?**

அ. ஜனவரி 10

ஆ. ஜனவரி 12

**இ. ஜனவரி 14 ☑**

ஈ. ஜனவரி 13



- முதல் இந்திய இராணுவத் தளபதி KM கரியப்பாவின் ஓய்வுதேதியை நினைவுகூரும் வகையில், 2017இல் நிறுவப்பட்டதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 14 அன்று 'ஆயுதப்படை படைவீரர்கள் நாள்' கொண்டாடப்பட்டு வருகிறது. 1949 முதல் 1953 வரை இந்திய இராணுவத்தின் தளபதியாக KM கரியப்பா பணியாற்றினார்.
- இந்திய இராணுவத்தின் தற்போதைய தலைமைத் தளபதியான MM நரவனே, இராணுவ நாளை அனுசரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, 1965 மற்றும் 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போர்களில் போராடிய அதிகாரிகளுக்கு சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவித்தார்.

**7.மலேசிய மாஸ்டர்ஸ் 2020 பட்டத்தை வென்ற பாட்மிண்டன் வீரர் யார்?**

அ. விக்டர் ஆக்செல்சன்

**ஆ. கென்டோ மோமோட்டா ☑**

இ. சாய் பிரனீத்

ஈ. கிடாம்பி ஸ்ரீகாந்த்




- மலேசியா மாஸ்டர்ஸ் 2020 போட்டியின் இறுதியாட்டத்தில் ஜப்பானைச் சேர்ந்த உலகின் No:1 பாட்மிண்டன் வீரரான கென்டோ மோமோட்டா முன்னாள் உலக சாம்பியனான விக்டர் ஆக்செல்சனை வீழ்த்தி பட்டத்தை வென்றார். கென்டோ மோமோட்டா, 2019ஆம் ஆண்டில் 11 முக்கியப் பட்டங்களை வென்றுள்ளார். இது ஒரு பாட்மிண்டன் வீரரால் ஓராண்டில் பெறப்பட்ட மிக அதிகமான பட்டங்களாகும்.
- 2019 BWF உலக சுற்றுப்பயண இறுதிப்போட்டிகளில் வென்ற அவர், BWF "ஆண்டின் சிறந்த வீரர்" என்பதற்கான விருதையும் பெற்றார். வரவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக்கில், கென்டோ, ஜப்பானை பிரதிநிதித்துவப்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனப் பூப்பந்து வீராங்கனை சென் யூ ஃபீ, பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

**8.அண்மையில், இந்திய ரிசர்வ் வங்கியின் நான்காவது துணை ஆளுநராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. U K சின்ஹா

ஆ. அஜய் தியாகி

**இ. மைக்கேல் பத்ரா ☑**

ஈ. கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியம்



- இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாக இயக்குநரான மைக்கேல் தேவபிரதா பத்ராவை அதன் நான்காவது துணை ஆளுநராக அரசு நியமித்துள்ளது. ரிசர்வ் வங்கியில் தற்போது மூன்று துணை ஆளுநர்கள் (NS விஸ்வநாதன், BP கனுங்கோ மற்றும் MK ஜெயின்) உள்ளனர்.
- முன்னாள் துணை ஆளுநர் வைரல் ஆச்சார்யா, தனிப்பட்ட காரணங்களைக்கூறி, கடந்த 2019 ஜூலை மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார். ஆச்சார்யா பதவி விலகிய ஆறு மாதங்களுக்குப்பிறகு அந்தப்பதவிக்கு மைக்கேல் பத்ரா நியமிக்கப்படுகிறார். மைக்கேல் பத்ரா, ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக நியமிக்கப்படுவதிலிருந்து அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு பணியாற்றுவார்.

**9.இந்தியக் குடியரசின் துணைத்தலைவர், நெல்லூரில், எந்த இந்திய மொழியின் ஆய்வுகளுக்காக ஒரு சிறப்பு மையத்தை திறந்துவைக்கவுள்ளார்?**

அ. தமிழ்

ஆ. தெலுங்கு ☑

இ. கன்னடம்

ஈ. மலையாளம்

- இந்தியக் குடியரசின் துணைத்தலைவரான M வெங்கையா, நெல்லூரில், செம்மொழித் தெலுங்கில் ஆய்வுகள் புரிவதற்கான சிறப்பு மையத்தைத் திறந்துவைக்கவுள்ளார். மைசூருவில் அமைந்துள்ள, மத்திய இந்திய மொழிகள் நிறுவனத்தில் அமைந்துள்ள செம்மொழித்தெலுங்குக்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் சிறப்பு மையத்தை, ஏதேனும் ஒரு தெலுங்கு மாநிலத்திற்கு மாற்றுமாறு வெங்கையா மத்திய அரசுக்கு பரிந்துரைத்திருந்தார். அது இப்போது ஆந்திரத்தின் நெல்லூருக்கு மாற்றப்பட்டுள்ளது.
- தெலுங்கு மொழி எழுத்துக்களின் பரிணாமம், எண்ணிமமயமாக்கல் மற்றும் செம்மொழித்தெலுங்கு இலக்கியங்களை வெளியிடுதல் குறித்து இந்த மையம் ஆராய்ச்சி மேற்கொள்கிறது.

**10.ISROஇன் தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT–30, எந்த ஏவுகணையின்மூலம் விண்ணில் ஏவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது?**

அ. PSLV C – 44

ஆ. PSLV C – 46

இ. PSLV C – 47

ஈ. Ariane 5 ☑



- ISROஇன் தகவல் தொடர்பு சேவைக்கான GSAT–30 செயற்கைக்கோள், Ariane–5 ஏவுகணைமூலம் பிரெஞ்சு கயானாவிலிருந்து ஜனவரி.17 அன்று விண்ணில் ஏவப்படுகிறது. 2005இல் செலுத்தப்பட்ட INSAT–4A செயற்கைக்கோளின் ஆயுட்காலம் முடிந்துவிட்ட நிலையில், அதற்கு மாற்றாக தற்போது, 3,357 கி.கி எடைகொண்ட அதிநவீன GSAT–30 செயற்கைக்கோளை ISRO வடிவமைத்துள்ளது.
- பதினைந்து ஆண்டுகள் ஆயுட்காலம் உடைய GSAT–30 செயற்கைக்கோள் VSAT நெட்வொர்க், DTH தொலைக்காட்சி சேவை மற்றும் அலைபேசி சேவைக்கு உதவும். 2020ஆம் ஆண்டில், ISRO ஏவும் முதல் செயற்கைக்கோள் GSAT–30 என்பது குறிப்பிடத்தக்கது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.ஒவ்வோர் ஆண்டும், இந்தியா முழுவதும், 'இராணுவ நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ. ஜனவரி 13

ஆ. ஜனவரி 14

**இ. ஜனவரி 15 ☑**

ஈ. ஜனவரி 16

- ❖ ஒவ்வோர் ஆண்டும் ஜன.15ஆம் தேதியன்று, 'இராணுவ நாள்' நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 72ஆவது 'இராணுவ நாள்' அண்மையில் 2020 ஜனவரி 15 அன்று அனுசரிக்கப்பட்டது. 1949 ஜன.15 அன்று, ஜெனரல் KM கரியப்பா, விடுதலைக்குப்பிறகு இந்திய இராணுவத்தின் முதல் தலைமைத் தளபதியாக பொறுப்பேற்றார். அந்நாள் ஒவ்வோர் ஆண்டும் இராணுவ நாளாக நினைவுகூரப்படுகிறது.
- ❖ ஒவ்வோர் ஆண்டும் புது தில்லியில் உள்ள அணிவகுப்பு மைதானத்தில் இந்திய ராணுவம், இராணுவ அணிவகுப்பை நடத்துகிறது. இந்த இராணுவ நாள் அணிவகுப்பில் அனைத்து ஆண்கள் படையை வழிநடத்திய முதல் பெண் என்ற பெருமையை கேப்டன் தானியா ஷெர்கில் பெற்றார்.

**2.இரயில் நிலையங்களுக்கேச் சென்று வருவாயைச் சேகரிப்பதற்காக, இந்திய இரயில்வேயின் தெற்கு – மத்திய இரயில்வே மண்டலத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள வங்கி எது?**

அ. பஞ்சாப் தேசிய வங்கி


ஆ. பரோடா வங்கி

**இ. பாரத ஸ்டேட் வங்கி ☑**

ஈ. இந்தியன் வங்கி

- ❖ தெற்கு – மத்திய ரயில்வே மண்டலத்தின் அனைத்து 585 இரயில் நிலையங்களுக்கும் நேரடியாகச் சென்று வருவாயைச்சேகரிப்பதற்கான ஒப்பந்தத்தில் பாரத ஸ்டேட் வங்கியும் தென்–மத்திய இரயில்வே மண்டலமும் கையெழுத்திட்டுள்ளன. தற்போது, சிறு இரயில் நிலையங்களில் ஈட்டப்படும் வருவாய் அனைத்தும் இரயில்வே காவலர்களின் பாதுகாப்போடு பணப்பெட்டகத்தில் வைத்து அனுப்பப்படுகிறது.
- ❖ இந்தச் செயல்முறை மிகவும் கடினமானதாகும். இந்த ஒப்பந்தம், எவ்வித தாமதமும் இல்லாமல் அரசாங்க வங்கிக்கணக்கில் பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்யும்.

**3.உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் அதன் வளர்ச்சிக்கு உதவுவதற்காக, இந்தியா, அண்மையில் எந்த நாட்டிற்கு கிட்டத்தட்ட 1 இலட்சம் கல்வி உரைநூல்களை வழங்கியுள்ளது?**



**அ. மடகாஸ்கர் ☑**

ஆ. மலாவி

இ. மொசாம்பிக்

ஈ. ஜிம்பாப்வே

❖ மடகாஸ்கருக்கான இந்திய தூதர் அபய் குமார், அண்மையில், உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் அந்நாட்டின் வளர்ச்சிக்கு உதவுவதற்காக, கிட்டத்தட்ட 1 இலட்சம் கல்வி உரைநூல்களை கிழக்காப்பிரிக்க நாடான மடகாஸ்கருக்கு வழங்கினார். மடகாஸ்கரின் உயர்கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி அமைச்சரால் இந்நூல்கள் அதன் தலைநகரமான அந்தனநாரிவோவில் நடைபெற்ற நிகழ்வில் பெற்றுக் கொள்ளப்பட்டன. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலால் வெளியிடப்பட்ட இந்நூல்கள் தயாரிக்க ஆன மொத்த செலவு தோராயமாக ₹76 இலட்சம் ஆகும்.

**4.பன்னாட்டுக் கிரிக்கெட் கவுன்சில் வழங்கிய, 'ஆண்டின் சிறந்த வீரருக்கான' சர் கார்பீல்ட் சோபர்ஸ் கோப்பையை வென்ற கிரிக்கெட் வீரர் யார்?**

அ. விராட் கோலி

**ஆ. பென் ஸ்டோக்ஸ் ☑**

இ. கேன் வில்லியம்சன்

ஈ. ரோகித் சர்மா



❖ பன்னாட்டுக் கிரிக்கெட் கவுன்சிலானது (ICC) அண்மையில், ICC 2019ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கியது. ஆண்டின் சிறந்த வீரருக்கான 'சர் கார்பீல்ட் சோபர்ஸ் கோப்பை' என்ற மிகவுயரிய விருதை இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ் பெற்றார். இந்திய தொடக்க ஆட்டக்காரரான ரோகித் சர்மா, 'ஆண்டின் சிறந்த ஒருநாள் வீரர்' விருதும், ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பாட் கம்மின்சுக்கு, 'ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர்' விருதும் வழங்கப்பட்டது.

❖ விராட் கோலிக்கு, 'ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட்' விருது வழங்கப்பட்டது. மற்றொரு இந்திய கிரிக்கெட் வீரர் தீபக் சாகருக்கு, 'ஆண்டின் சிறந்த T20 பங்களிப்பு' விருது வழங்கப்பட்டது.

**5.இந்தியாவில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்காக $1 பில்லியன் டாலரை முதலீடு செய்யவுள்ளதாக அண்மையில் அறிவித்த நிறுவனம் எது?**

அ. கூகிள்

ஆ. மைக்ரோசாப்ட்

**இ. அமேசான் ☑**

ஈ. பிளிப்கார்ட்

❖ அண்மையில், அமேசானின் தலைவரான ஜெப் பெசோஸ், இந்தியாவில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்காக அமேசான் நிறுவனம் $1 பில்லியன் டாலர் முதலீடு செய்வதாக அறிவித்தார். 2025ஆம் ஆண்டளவில், அமேசான் இந்தியா, $10 பில்லியன் டாலர் மதிப்புள்ள இந்தியத் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யும் என ஜெப் அறிவித்தார்.

❖ அண்மையில் அவர் மேற்கொண்ட அலுவல்பூர்வ வருகையின்போது இந்த அறிவிப்பை வெளியிட்டார். அண்மையில், அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு (CAIT), அமேசான் நிறுவனம் நியாயமற்ற வணிக நடைமுறைகளைப் பின்பற்றுவதாக குற்றஞ்சாட்டியது குறிப்பிடத்தக்கது.

**6.இந்தியாவில் கல்விநிலை குறித்த ஆண்டறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சகம்

ஆ. NITI ஆயோக்

**இ. பிரதம் – தன்னார்வ தொண்டு நிறுவனம்☑**

ஈ. UNICEF

- 'பிரதம்' என அழைக்கப்படும் அரசுசாரா அமைப்பு இந்தியாவில் கல்விநிலை குறித்த ஆண்டறிக்கையை வெளியிட்டு வருகிறது. 2019ஆம் ஆண்டுக்கான அறிக்கையை சமீபத்தில் அவ்வமைப்பு வெளியிட்டது. அரசுநடத்தும் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் பயிலும் சமவயதுடைய சிறார்களைவிட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் 5 வயதுடைய குழந்தைககளின் கற்றல் திறன் சிறப்பாக உள்ளதாக அவ்வறிக்கை கூறுகிறது.
- 4 முதல் 8 வயதுக்குட்பட்ட சிறுமிகளின் சேர்க்கை அளவானது சிறுவர்களை ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளதாகவும், அரசுநடத்தும் பள்ளிகளில் சிறுவர்களைவிட அதிகமாக சிறுமிகளே சேர்க்கப்படுதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, தெளிவான பாலின இடைவெளியைக் காட்டுகிறது.

**7.எந்தப் பன்னாட்டுத் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் பிரிவு, அண்மையில், 'OneSearch' என்ற புதிய தனியுரிமையை மையமாகக்கொண்ட தேடுபொறியை அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ. AT & T

**ஆ. வெரிசோன் ☑**

இ. வோடபோன்

ஈ. சீனா மொபைல்

- பன்னாட்டுத் தொலைத்தொடர்பு நிறுவனமான வெரிசோன் தகவல்தொடர்புகளின் ஒரு பிரிவான 'வெரிசோன் மீடியா' சமீபத்தில் தனியுரிமையை மையமாகக்கொண்ட ஒரு புதிய தேடுபொறியை, 'One Search' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பயனர்களின் தேடல் வரலாறு இந்தத் தேடுபொறியில் சேமிக்கப்படாது என்றும் பயனர்களின் தானாக – அழியக்கூடிய தேடல் தரவு விளம்பரதாரர்களுடன் பகிரப்படாது என்றும் கூறப்படுகிறது. இந்தப்புதிய தேடுபொறி, பக்கச்சார்பற்ற மற்றும் வடிகட்டப்படாத முடிவுகளையும்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**8.அண்மையில் காலமான பிரபல திரைப்படத்தயாரிப்பாளரும் இயக்குநருமான மன்மோகன் மோகபத்ரா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

அ. மேற்கு வங்கம்

**ஆ. ஒடிசா ☑**

இ. கர்நாடகா

ஈ. ஆந்திரபிரதேசம்



- ஒடிசாவைச்சேர்ந்த மூத்த திரைப்படத் தயாரிப்பாளரும், இயக்குநருமான மன்மோகன் மோகபத்ரா அண்மையில் காலமானார். தொடர்ச்சியாக எட்டு ஆண்டுகளாக சிறந்த ஒடியா திரைப்படத்திற்கான தேசிய திரைப்பட விருதுகளை அவர் வென்றுள்ளார். 1976இல் வெளிவந்த, 'சீதா ராதி' அவரது முதல் முழுநீள ஒடியாமொழித்திரைப்படமாகும். வெளிநாட்டில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட முதல் ஒடியா படமும் இதுதான். பல்வேறு ஹிந்தி படங்களையும் அவர் இயக்கியுள்ளார். இவரது மறைவுக்கு, ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் இரங்கல் தெரிவித்துள்ளார்.

**9. நெகிழிக்கழிவு மேலாண்மையில் புதுமையான முறைகளைப் பின்பற்றியதற்காக எந்த மாநிலத்தின் மாவட்ட நிர்வாகம் 'சுவச்சதா தர்பன்' விருதை வென்றுள்ளது?**

அ. மேற்கு வங்கம்

**ஆ. ஒடிசா ☑**

இ. கர்நாடகா

ஈ. ஆந்திரபிரதேசம்

- ஒடிசா மாநிலத்தின் பூரி மாவட்ட நிர்வாகம், அண்மையில், நெகிழிக்கழிவு மேலாண்மையில் புதுமை –யான வழிமுறைகளைப் பின்பற்றியதற்காக 'சுவச்சதா தர்பன்' விருதை வென்றுள்ளது. இவ்விருதை, ஜல் சக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை வழங்கியது. புது தில்லியில், 'ODF Sustainability' ஏற்பாடுசெய்திருந்த ஒரு பயிலரங்கத்தின்போது இவ்விருது ஹிந்தித் திரையுலக நடிகர் அமீர்கானால் வழங்கப்பட்டது. நெகிழிக்கழிவிலிருந்து பூரி முற்றிலும் விடுபட ஒடிசா அரசு கடந்த ஆண்டு ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

**10.சாலைப் பாதுகாப்பு நிறுவனங்களின் கூட்டத்தில், சமீபத்தில் தொடங்கப்பட்ட, 'ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தள'த்தை உருவாக்கிய நிறுவனம் எது?**

**அ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – மெட்ராஸ் ☑**

ஆ. இந்திய அறிவியல் நிறுவனம்

இ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – கான்பூர்

ஈ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – கரக்பூர்

- சாலைப்பாதுகாப்பு நிறுவனங்களின் சந்திப்பின்போது மத்திய அமைச்சர்கள் இராஜ்நாத் சிங் மற்றும் நிதின் கட்கரி ஆகியோர் 'ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவுத்தளம் – Integrated Road Accident Database (IRAD)'ஐ தொடங்கிவைத்தனர்.

- IRAD என்பது சாலை விபத்துகளுக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்வதற்கும் அவற்றைக் குறைப்பதற்கான தீர்வுகளை உருவாக்குவதற்குமான ஒரு மைய விபத்து தரவுத்தள மேலாண்மை அமைப்பு ஆகும். இந்தத் தரவுத்தளத்தை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – மெட்ராஸ் (IIT–M) ₹258 கோடி செலவில் உருவாக்கியுள்ளது. உலக வங்கியால் ஆதரிக்கப்படும் இது, தேசிய தகவல் மையம் (NIC) மூலம் செயல்படுத்தப்படுகிறது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.சுவிஸ் வங்கியான ஜூலியஸ் பேர் நடத்திய சமீபத்திய ஆய்வின்படி, ஆடம்பரப்பொருட்கள் கிடைக்கப் பெறும் உலகின் மிகவும் விலையுயர்ந்த நகரமாக விளங்கும் நகரம் எது?**



அ. மும்பை

**ஆ. ஹாங்காங் ☑**

இ. நியூயார்க்

ஈ. சிங்கப்பூர்

❖ சுவிஸ் வங்கியான ஜூலியஸ் பேர் (Julius Baer), அண்மையில், உலகெங்கிலும் உள்ள 28 நகரங்களை ஆடம்பரப் பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைக்கப் பெறுவதன் அடிப்படையில் அவற்றை விலை உயர்ந்ததாக மதிப்பிடுவதற்காக ஆய்வொன்றை நடத்தியது. இதன்படி, வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடம்பரப்பொருட்களுள் பலவை ஹாங்காங் நகரத்தைச் சேர்ந்ததாக இருந்தது.

❖ எனவே, ஆடம்பரப்பொருட்கள் கிடைக்கப்பெறும் உலகின் மிகவும் விலையுயர்ந்த நகரமாக ஹாங்காங் விளங்குகிறது. இரண்டு, மூன்று மற்றும் ஐந்தாவது இடங்களை முறையே ஷாங்காய், டோக்கியோ மற்றும் சிங்கப்பூர் கைப்பற்றியதால், ஆசியா, மிகவும் விலையுயர்ந்த கண்டமாக கருதப்படுகிறது.

**2.அண்மையில் மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சரால் வழங்கப்பட்ட 'சிறந்த தேசிய நெடுஞ்சாலை விருதுகள்' எந்த ஆண்டில் நிறுவப்பட்டன?**

அ. 2016

ஆ. 2017

**இ. 2018 ☑**

ஈ. 2019

❖ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் கடந்த 2018ஆம் ஆண்டில் 'சிறந்த தேசிய நெடுஞ்சாலை விருதுகள்' நிறுவப்பட்டன. பின்னர் அது ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதாக மாற்றப்பட்டு, சமீபத்தில் அதன் இரண்டாம் பதிப்புக்கான விருதை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி புது தில்லியில் வழங்கினார்.

❖ கட்டுமானம், செயல்பாடு, பராமரிப்பு, சுங்கவரி கட்டம் மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆகியவற்றில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதில் 7 பிரிவுகள் உள்ளன. இறுதிப்பட்டியலிலிருந்து 12 வெற்றியாளர்கள் இதற்கென தேர்வுசெய்யப்பட்டனர்.

**3.எந்த நகரத்தில், 'டிஜிட்டல் வெளியில் இந்தியப் பாரம்பரியம்' என்பது குறித்த நாட்டின் முதல் கண்காட்சி தொடங்கப்பட்டுள்ளது?**

அ. வாரணாசி

ஆ. பூரி

**இ. புது தில்லி ☑**

ஈ. ஜெய்ப்பூர்

- 'டிஜிட்டல் வெளியில் இந்தியப் பாரம்பரியம்' என்பது பற்றிய சிறப்புக்கண்காட்சியையும், புது தில்லியில் இரண்டு நாள் நடந்த முதலாவது சர்வதேச பாரம்பரிய கருத்தரங்கத்தையும் மத்திய கலாசார அமைச்சர் பிரகலாத் சிங் படேல் திறந்துவைத்தார்.
- இந்தக்கண்காட்சியானது தில்லி IIT உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் பார்வைக்காக இது ஒருமாத காலத்திற்கு இது திறந்திருக்கும். அறிவியல் & தொழில்நுட்பத்துறையின் இந்திய டிஜிட்டல் பாரம்பரிய திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இந்திய நினைவுச்சின்னங்களின் டிஜிட்டல் வடிவங்கள் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**4.காமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் (இந்தியப் பிராந்தியம்) ஏழாவது மாநாடு நடைபெறும் நகரம் எது?**

அ. புது தில்லி

ஆ. மும்பை

**இ. லக்னோ ☑**

ஈ. அகமதாபாத்

- காமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் (இந்தியப் பிராந்தியம்) ஏழாவது மாநாடு, அண்மையில், உத்தரபிரதேச மாநிலத்தின் லக்னோவில் தொடங்கி வைக்கப்பட்டது. லக்னோவில் உள்ள சட்டமன்ற அவைக்கட்டடத்தில், மக்களவை அவைத்தலைவர் ஓம் பிர்லா இம்மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.
- பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் & பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்த மாநாட்டின் கருப்பொருள் 'Role of Legislators – சட்டமன்ற உறுப்பினர்களின் பங்கு' என்பதாகும். காமன்வெல்த்தின் நல்லாட்சி நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களது பணியாள–ர்களுக்கும் ஆதரவாக காமன்வெல்த் நாடாளுமன்றச்சங்கம் உருவாக்கப்பட்டது.

**5.இந்தியாவின் முதல் மனிதரை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்கு, எத்தனை இந்திய விண்வெளி வீரர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்?**

அ. இரண்டு

ஆ. மூன்று

**இ. நான்கு ☑**

ஈ. ஐந்து



- இந்தியாவின் முதல் மனிதரை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்கு, இந்திய விமானப்படையைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நான்கு விண்வெளி வீரர்களும் இந்த மாதம் தொடங்கி அடுத்துவரும் 11 மாதங்களுக்கு இரஷ்யாவில் பயிற்சி பெறுவார்கள் எனச் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இரஷ்யாவில் பயிற்சியை நிறைவுசெய்தபின், அவ்விண்வெளி வீரர்களுக்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு வடிவமைத்துள்ள குழு மற்றும் சேவைத் தொகுதியின் செயல்பாடு மற்றும் உருவகப்படுத்துதலில் பயிற்சியளிக்கப்படும்.

❖ மனிதர்களை அனுப்பும் இந்த முதல் திட்டத்திற்கு முன்னர், 2020ஆம் ஆண்டு இறுதிக்குள் மனிதர் போன்ற உருவங்கொண்ட எந்திரத்தை ISRO விண்வெளிக்கு அனுப்பவுள்ளது.

**6. ICCஇன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளின் கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர் யார்?**

அ. மகேந்திர சிங் தோனி

**ஆ. விராட் கோலி ☑**

இ. கேன் வில்லியம்சன்

ஈ. இயோன் மோர்கன்



❖ பன்னாட்டுக்கிரிக்கெட் கவுன்சில் (ICC) சமீபத்தில் இந்த ஆண்டின் அணியை அறிவித்ததுடன் ஆண்டு விருதுகளையும் வழங்கியது. இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி, ICCஇன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளின் கேப்டனாக தேர்வுசெய்யப்பட்டார். விராட்டைத் தவிர, ICC அணியில், மயங்க் அகர்வால் மட்டுமே இடம்பெற்றார். ஒருநாள் அணியில் உள்ள மற்ற இந்தியர்கள் – ரோகித் சர்மா, முகமது ஷாமி மற்றும் குல்தீப் யாதவ்.

❖ ICC வழங்கிய 'ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்' விருதையும் விராட் கோலி வென்றுள்ளார். இரு அணிகளுக்கும் கேப்டனாக இருக்கும் கோலியுடன், இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் மிச்செல் ஸ்டார்க் ஆகியோர் ICCஇன் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளில் இடம்பெற்றுள்ளனர்.

**7.எந்நாட்டுடனான வரலாற்றுச்சிறப்புமிக்க முதற்கட்ட வர்த்தக ஒப்பந்தத்தில், ஐக்கிய அமெரிக்க நாடுகள் கையெழுத்திட்டுள்ளது?**

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. இரஷ்யா

ஈ. சுவிச்சர்லாந்து



❖ ஓராண்டுகாலமாக நடைபெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, ஐக்கிய அமெரிக்க நாடுகள் சீனாவுடனான முதற்கட்ட வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தில், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் சீனாவின் துணைப்பிரதமர் லியு ஹீ ஆகியோர் கையெழுத்திட்டனர். 'வரலாற்றுச் சிறப்புமிக்கது' என டிரம்ப்பால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின் முதற்கட்டத்தில், அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல், அமெரிக்க நிதிச்சேவைகளை அகற்றுதல் மற்றும் நாணய முறைகேடுகளை முடிவுக்குக்கொண்டு வருதல் ஆகியவை அடங்கும்.

❖ இந்த ஒப்பந்தம் ஐக்கிய அமெரிக்க நாடுகள் – சீனா இருதரப்பு உறவுகளை மீண்டும் சமநிலைப்படுத்தும் மற்றும் நாடுகளுக்கிடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மோதல்களைத் தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**8.அண்மையில் மேற்கு இரயில்வேயின் பொது மேலாளராக அலோக் கன்சால் நியமிக்கப்பட்டார். மேற்கு இரயில்வேயின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

அ. காந்தி நகர்

ஆ. அகமதாபாத்

**இ. மும்பை ☑**

ஈ. சூரத்

- இந்திய இரயில்வேயின் மேற்கு இரயில்வே மண்டலம், இந்தியாவின் நிதியியல் தலைநகரமான மும்பையையும் குஜராத்தையும் மத்தியபிரதேசம் மற்றும் இராஜஸ்தானின் சில பகுதிகளையும் இணைக்கிறது. இதன் தலைமையகம் மும்பையின் சர்ச்ச்கேட் நிலையத்தில் அமைந்துள்ளது.
- இந்திய இரயில்வே சர்வீஸ் ஆப் இன்ஜினியர்ஸின் (IRSE) 1983ஆம் ஆண்டுத் தொகுதியைச் சேர்ந்த அதிகாரியான அலோக் கன்சால், அண்மையில் மேற்கு இரயில்வே மண்டலத்தின் பொது மேலாளராக நியமிக்கப்பட்டார். முந்தைய பொது மேலாளர் அனில் குமார் குப்தா, கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின்போது ஓய்வுபெற்றார்.

**9.எந்தத் தொழில்நுட்ப நிறுவனம், சமீபத்தில் தனது 'எட்ஜ் குரோமியம்' உலாவியின் புதிய பதிப்பை, மேக் மற்றும் விண்டோஸ் இயங்குதளங்களுக்காக அறிமுகப்படுத்தியது?**

அ. கூகிள்

**ஆ. மைக்ரோசாப்ட் ☑**

இ. மொஸில்லா

ஈ. ஆப்பிள்




- அண்மையில் மைக்ரோசாப்ட் தனது புதிய 'எட்ஜ் குரோமியம்' உலாவியை மேக் மற்றும் விண்டோஸ் இயங்குதளங்களுக்காக அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. தொடக்கத்தில் நிறுவனப் பயனர்களை மைக்ரோசாப்ட் இலக்காக வைத்திருந்தாலும், பிற விண்டோஸ் & மேக் பயனர்கள் மைக்ரோசாப்டின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலிருந்து கைமுறையாக உலாவியை பதிவிறக்கம் செய்து நிறுவலாம்.
- விண்டோஸ் 10 பயனர்களுக்கு, விண்டோஸ் புதுப்பிப்பு மூலம் இவ்வுலாவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூகிள் குரோமில் (Google Chrome) உள்ளதைப்போன்ற அம்சங்களை 'எட்ஜ் குரோமியம்' கொண்டுள்ளது மற்றும் குரோம் நீட்டிப்புகளையும் (extensions) இது ஆதரிக்கிறது.


**10.அதிபரால் அறிவிக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்களுக்குப்பிறகு, எந்த நாட்டின் முழு அரசாங்கமும் அண்மையில் பதவி விலகியது?**

அ. சீனா

ஆ. பிரான்ஸ்

**இ. இரஷ்யா ☑**

ஈ. ஜெர்மனி



- அதிபர் பதவிக்கும் மீறி தனது அதிகாரங்களை நீட்டிக்கும் சில அரசியலமைப்பு திருத்தங்களை இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அறிவித்ததை அடுத்து, இரஷ்யாவின் முழு அரசாங்கமும் அண்மையில் பதவி விலகியது. இதில் இரஷ்யப் பிரதமர் டிமிட்ரி மெட்வெடேவும் அடங்குவார். புதின் தனது வருடாந்திர தேசிய உரையின்போது இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
- அடுத்த பிரதமராக இரஷ்ய வரிசேவையின் தலைவரான மிகைல் மிஷூஸ்டினையும் இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் முன்மொழிந்துள்ளார். பிரதமர் பதவியிலிருந்து நீங்கும் மெட்வெடேவ், இரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத்தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2030ஆம் ஆண்டுக்குள் அதன் விநியோகச்சங்கிலி முழுவதும் சரிபாதி கரியமிலவாயு உமிழ்வைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளதாக அண்மையில் அறிவித்த தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ. கூகிள்

**ஆ. மைக்ரோசாப்ட் ☑**

இ. இன்போசிஸ்

ஈ. IBM




- அண்மையில், காலநிலை மாற்றத்துக்கு தீர்வுகாண்பதற்காக ஒரு புதிய இலட்சியத்தை மைக்ரோசாப்ட் நிறுவனம் அமைத்துள்ளதாக அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகி சத்யா நாதெல்லா கூறியுள்ளார். மேலும், அந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட கரியமிலவாயு வெளியேற்றத்தை நீக்குவதாகவும் அவர் உறுதிபட அறிவித்தார். 2030ஆம் ஆண்டளவில் அதன் விநியோகச் சங்கிலிகளிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்ட கரியமிலவாயுவில் பாதிக்கும் மேற்பட்டதை நீக்க திட்டமிட்டுள்ளது.

- இத்திட்டத்தில், "காலநிலை புத்தாக்க நிதியத்தை" உருவாக்குவதும் அடங்கும்; அது, கரியமிலவாயுவை அகற்றுவதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு $1 பில்லியன் டாலர் நிதியை முதலீடு செய்யும். 1975ஆம் ஆண்டிலிருந்து (மைக்ரோசாப்ட் நிறுவப்பட்ட ஆண்டு) அந்நிறுவனம் மேற்கொண்ட நேரடி மற்றும் மறைமுக கரியமிலவாயு உமிழ்வை 2050ஆம் ஆண்டுக்குள் முழுவதுமாக அகற்ற அந்நிறுவனம் நோக்கம் கொண்டுள்ளது.

**2.தவறிய அழைப்பின்மூலம் பயனர்களை எச்சரிக்கை செய்யும் வசதிக்காக, அண்மையில், '88843 – 33331' என்ற கட்டணமில்லா எண் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த எண் தொடர்புடைய பயன்பாடு எது?**

அ. FASTag ☑

ஆ. BHIM

இ. UMANG

ஈ. தேசிய ஓய்வூதியத் திட்டம்




- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கூட்டிணைவு நிறுவனமான இந்திய நெடுஞ்சாலை மேலாண்மை நிறுவனமானது, பயனர்கள் தங்களது FASTag இருப்பைச் (balance) சரிபார்த்துக் கொள்வதற்காக அண்மையில் 'தவறிய அழைப்பின்மூலம் எச்சரிக்கைசெய்யும் வசதி – missed call alert' ஒன்றை அறிமுகப்படுத்தியது. இதற்காக, '8884333331' என்ற நாள் முழுவதும் பயன்பாட்டிலிருக்கும் கட்டணமில்லா எண் ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- NHAI பிரீபெய்ட் பணப்பையில், தங்கள் அலைபேசி எண்ணைப் பதிவுசெய்துள்ள FASTag பயனர்கள், அவர்களது FASTag இருப்பைச் சரிபார்ப்பதற்காக, அந்தக் குறிப்பிட்ட எண்ணுக்கு தவறிய அழைப்பை விடுக்கலாம். முன்கூட்டியே கட்டணஞ்செலுத்துவதற்கு, பயனர்கள், FASTag செயலியை பயன்படுத்தப் –படலாம். அதனை NHAI பணப்பையுடனோ அல்லது 13 வங்கிகளின் சேமிப்புக்கணக்குடனோ இணைத்துக்கொள்ளலாம்.

**3.அண்மையில் கொடியசைத்து தொடங்கிவைக்கப்பட்ட இரண்டாவது தேஜஸ் எக்ஸ்பிரஸ், மும்பையை எந்த நகரத்துடன் இணைக்கிறது?**

அ. புனே

ஆ. ஹைதராபாத்

**இ. அகமதாபாத் ☑**

ஈ. நாக்பூர்



❖ இந்திய இரயில்வேயின் IRCTC நிறுவனத்தால் இயக்கப்படும் நாட்டின் 2ஆவது தேஜஸ் அதிவிரைவு இரயில் அகமதாபாத் – மும்பை இடையே தொடங்கிவைக்கப்பட்டது. குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி இந்த இரயிலை கொடியசைத்து தொடக்கிவைத்தார். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், இந்திய இரயில்வேயின் துணை நிறுவனமான IRCTC, தில்லி – இலக்னோ இடையே தேஜஸ் இரயிலை தொடக்கிவைத்தது. இந்தியாவில் தனியார் நிறுவனத்தால் இயக்கப்படும் முதல் இரயில் இதுவாகும்.

❖ ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தவிர்த்து மற்ற ஆறு நாட்களில் இந்த இரயில் இயங்கும். தேஜஸ் எக்ஸ்பிரஸைப் பொறுத்தவரை, IRCTC ஒரு மாறும் விலை நிர்ணய திட்டத்தைப் பின்பற்றுகிறது. மேலும், இது இரயில் தாமதங்களின்போது வாடிக்கையாளர்களுக்கு இழப்பீட்டையும் வழங்குகிறது.

**4. 'உலகப் பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால வாய்ப்புகள்' குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஐக்கிய நாடுகள் அவை ☑**

இ. பன்னாட்டு நாணய நிதியம்

ஈ. ஆசிய வளர்ச்சி வங்கி

UNITED NATIONS

❖ ஐக்கிய நாடுகள் அவையின் 'உலகப்பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள்' குறித்த அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி 5.7% ஆக இருக்கும் என்றும் அடுத்த நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி விகிதம் 6.6% ஆக உயரும் என்றும் ஐ.நா கணித்துள்ளது.

❖ கடந்த 2019ஆம் ஆண்டின் 'உலகப்பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள்' குறித்த அறிக்கையில், நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 7.6% ஆக இருக்கும் என ஐ.நா. கணித்திருந்தது. அது இப்போது 5.7% ஆக குறைக்கப்பட்டுள்ளது. அண்மைய அறிக்கையின்படி, கிழக்காசியா, உலகின் மிகவேகமாக வளர்ந்துவரும் பிராந்தியமாகவும், உலக வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பாளராகவும் தொடர்ந்து இருந்துவருகிறது. இந்த ஆண்டு (2020) உலக வளர்ச்சி 1.8 சதவீதமாகக் குறையும் என்றும் அவ்வறிக்கை கணித்துள்ளது.

**5. "கிருஷி மந்தன்" உச்சிமாநாட்டின் முதல் பதிப்பு நடைபெறுகிற மாநிலம் எது?**




அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திரபிரதேசம்


**இ. குஜராத் ☑**

ஈ. அஸ்ஸாம்

❖ "கிருஷி மந்தன்" உச்சிமாநாட்டின் முதல் பதிப்பு குஜராத்தின் அகமதாபாத்தில் நடைபெறுகிறது. "கிருஷி மந்தன்" என்பது 'உணவு–வேளாண்–வணிகம்–ஊரக வளர்ச்சி' குறித்த ஆசியாவின் மிகப்பெரிய உச்சிமாநாடு ஆகும். அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் உணவு மற்றும் வேளாண் வணிகக்குழுவால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ வணிகவியலாளர்கள், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், கொள்கை–வகுப்பாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் தங்கள் அறிவையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்துகொள்ள இது ஒரு தளமாகும். 2 நாள் நிகழ்வான இதில் மாணவர்கள், உணவு, வேளாண் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த 1,500 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

**6. அண்மையில், யாருக்கு 29ஆவது 'சரஸ்வதி சம்மன்' விருது வழங்கப்பட்டது?**



அ. விக்ரம் சேத்

ஆ. மகாபலேஷ்வர் சைல்

**இ. வாசுதேவ் மோகி ☑**

ஈ. பத்ம சச்தேவ்

❖ மதிப்புமிக்க 29ஆவது 'சரஸ்வதி சம்மன்' விருதுக்கு புகழ்பெற்ற சிந்திமொழி எழுத்தாளரும் கவியுமான வாசுதேவ் மோகி தேர்வுசெய்யப்பட்டுள்ளார். KK பிர்லா அறக்கட்டளையால் வழங்கப்பெறும் இவ்விருது, இலக்கியத்துறையில் புகழ்பெற்ற விருதாக கருதப்படுகிறது. 'செக் புக்' என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக வாசுதேவ் மோகிக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

❖ இச்சிறுகதைத்தொகுப்பு, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்களின் துன்பங்களை விவரிக்கிறது. இது, சிந்தி மொழியில் கடந்த 2012ஆம் ஆண்டில் வெளியானது.

**7. அஸ்ஸாமின் பயணிகள் படகுத்துறையை நவீனமயமாக்குவதற்காக இந்திய அரசும் அஸ்ஸாம் மாநில அரசும் எந்தப் பன்னாட்டு நிதி அமைப்புடனான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன?**



அ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ. ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி

**இ. உலக வங்கி ☑**

ஈ. புதிய வளர்ச்சி வங்கி

❖ அஸ்ஸாமின் பயணிகள் படகுத்துறையை நவீனமயமாக்குவதற்கு உதவும் வகையில், இந்திய அரசு, அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை, புது தில்லியில், $88 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அஸ்ஸாமின் பயணிகள் படகுத்துறை, பிரம்மபுத்ரா உள்ளிட்ட பிரதான ஆறுகளில் பயணிகள் சேவையை மேற்கொண்டு வருகிறது.

❖ முந்நூற்றி அறுபதுக்கும் மேற்பட்ட படகு வழித்தடங்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ளன; அவற்றுள் பெரும்பாலானவை பிரம்மபுத்ரா வழியாக செல்கின்றன. எனவே, இது பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கின் மிக முக்கியமான போக்குவரத்து வழிமுறையாக உள்ளது. பயணிகள் படகுத்துறை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அஸ்ஸாம் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் திட்டம் அம்மாநிலத்திற்கு உதவும்.

**8.பிரெஞ்சு கயானாவிலிருந்து அண்மையில் ஏவப்பட்ட இந்திய செயற்கைக்கோள் எது?**

அ. RISAT – 2B

**ஆ. GSAT – 30 ☑**

இ. GSAT – 7A

ஈ. IRNSS – 1H



❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் உயராற்றலுடைய தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT–30, பிரெஞ்சு கயானாவிலிருந்து 2020 ஜனவரி.17 அன்று வெற்றிகரமாக ஏவப்பட்டது. உயர்தர தொலைத்தொடர்பு, அலைபேசி & ஒலிபரப்பு சேவையை வழங்குவதே இந்தச் செயற்கைக்கோளின் நோக்கமாகும். இந்தச் செயற்கைக்கோள், புவி–ஒத்திசைவு சுற்றுப்பாதையில், 'Ariane–5' ஏவுகணை மூலம் நிலை நிறுத்தப்பட்டது.

**9.இந்திய சுற்றுலாப்பயணிகளுக்கு மின்னணு–நுழைவு இசைவு வசதியை வழங்கவுள்ள நாடு எது?**

அ. கனடா

**ஆ. தென்னாப்பிரிக்கா ☑**

இ. கென்யா

ஈ. அயர்லாந்து




❖ இந்திய சுற்றுலாப்பயணிகளுக்கு தென்னாப்பிரிக்காவால் மின்னணு–நுழைவு இசைவு (e–visa) வசதி வழங்கப்படும் எனத் தென்னாப்பிரிக்க சுற்றுலாத்துறை அமைச்சர் எம்மமோலோகோ குபாய்–நுகுபனே தெரிவித்துள்ளார். இதற்கான வலைத்தளம், இந்தியாவில், சோதனை அடிப்படையில் வரும் வாரத்தில் தொடங்கப்படும். அலுவல்பூர்வ தரவுகளின்படி, கடந்த 2019 அக்டோபர் மாத நிலவரப்படி, 81316'க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு பயணஞ்செய்துள்ளனர். இது, ஆண்டுக்கு ஆண்டு 30% வரை அதிகரிக்கிறது. எதிர்காலத்தில் 50% வரை இது அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**10.அண்மையில் இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட மிகப்பெரிய வான்வழிப்பயிற்சியின் பெயரென்ன?**

அ. ஹிம் விஜய்

ஆ. துருவ் சக்தி



இ. விங்க்ட் ரைடர் ☑

ஈ. யுத் அபியாஸ்

❖ "Winged Raider" என்றழைக்கப்படும் மிகப்பெரிய வான்வழிப்பயிற்சியானது இந்திய இராணுவத்தால் வடகிழக்கு அரங்கில் அண்மையில் நடத்தப்பட்டது. ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறப்புப்படைகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்றன. அப்படைகளைச் சேர்ந்த வீரர்கள் C–130 ஹெர்குலஸ் மற்றும் C–17 குளோப் மாஸ்டர் டிரான்ஸ்போர்ட்டர் விமானங்களிலிருந்து பயிற்சி மேற்கொண்டனர். இந்தப்பயிற்சியின்போது, இந்திய இராணுவத்திற்கும் இந்திய விமானப்படைக்கும் இடையில் தீவிரமான துல்லியமான மற்றும் தடையற்ற ஒருங்கிணைப்புடன் கூடிய நிலையில் புதிய வான்வழி உபகரணங்கள் சோதிக்கப்பட்டன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ திருவள்ளுவர் திருநாள் விருதுகள்:

**விருது மற்றும் விருதாளர்களின் விவரங்கள்**

| விருது | விருதாளர் |
|---|---|
| திருவள்ளுவர் விருது – 2020 | ந.நித்தியானந்த பாரதி |
| பேரறிஞர் அண்ணா விருது – 2019 | முனைவர் கோ.சமரசம் |
| பெருந்தலைவர் காமராசர் விருது–2019 | முனைவர் மா.சு.மதிவாணன் |
| மகாகவி பாரதியார் விருது – 2019 | முனைவர் ப.சிவராஜி |
| பாவேந்தர் பாரதிதாசன் விருது–2019 | த.தேனிசை செல்லப்பா |
| தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது–2019 | முனைவர் சே.சுந்தரராசன் |
| முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது | மருத்துவர் மணிமேகலை கண்ணன் |

❖ சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருதுகள் – 2019:

| விருது | விருதாளர் |
|---|---|
| தமிழ்த்தாய் விருது | சிகாகோ தமிழ்ச் சங்கம் |
| கபிலர் விருது | புலவர் வெற்றியழகன் |
| உ.வே.சா விருது | வே.மகாதேவன் |
| கம்பர் விருது | முனைவர் சரசுவதி இராமநாதன் |
| சொல்லின் செல்வர் விருது | சிந்தனைக் கவிஞர் முனைவர் கவிதாசன் |
| ஜி.யு.போப் விருது | மரிய ஜோசப் சேவியர் |
| உமறுப்புலவர் விருது | லியாகத் அலிகான் |
| இளங்கோவடிகள் விருது | கவிக்கோ ஞானச்செல்வன் (எ) கோ.திருஞானசம்பந்தம் |
| அம்மா இலக்கிய விருது | உமையாள் முத்து |
| சிங்காரவேலர் விருது | அசோகா சுப்பிரமணியன் (எ) சோ.கா.சுப்பிரமணியன் |
| மறைமலையடிகளார் விருது | புலவர் ப.முத்துக்குமாரசுவாமி |
| அயோத்திதாசப் பண்டிதர் விருது | புலவர் வே.பிரபாகரன் |
| முதல்வரின் கணினித் தமிழ் விருது (2018) | முனைவர் த.நாகராசன் |

| சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள் | |
|---|---|
| மாலன் (எ) வே.நாராயணன், சா.முகம்மது யூசுப், க.ஜ.மஸ்தான் அலி, பேராசிரியர் சிவ.முருகேசன், முனைவர் ந.கடிகாசலம், மரபின் மைந்தன் (முத்தையா), வத்சலா, மருத்துவர் முருகுதுரை, கிருசாங்கினி (எ) பிருந்தா நாகராசன், அ.மதிவாணன். | |
| **உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்** | |
| இலக்கிய விருது | பெ.இராசேந்திரன் (மலேசியா) |
| இலக்கண விருது | முத்து கஸ்தூரி பாய் (அருணா செல்வம்- பிரான்ஸ்) |
| மொழியியல் விருது | முனைவர் சுபதினி ரமேஷ் (இலங்கை) |

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் எந்த இந்திய தொழில்முனைவோருக்கு, ஆஸ்திரேலியாவின் மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான 'ஆர்டர் ஆப் ஆஸ்திரேலியா' வழங்கி கௌரவிக்கப்பட்டது?**



அ. ஆனந்த் மஹிந்திரா


**ஆ. கிரண் மஜூம்தார்-ஷா ☑**

இ. அஸிம் பிரேம்ஜி

ஈ. உதய் கோட்டக்

- பிரபல உயிரி–தொழில்நுட்ப நிறுவனமான பயோகானின் நிறுவனரும் தலைவருமான கிரண் மஜூம்தார்–ஷா, அண்மையில் ஆஸ்திரேலியாவின் மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான 'ஆர்டர் ஆப் ஆஸ்திரேலியா' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்தியதற்காக, குறிப்பாக வணிகம் மற்றும் கல்வி அம்சங்களில் குறிப்பிடத்தக்க சேவை புரிந்தமைக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. அன்னை தெரசா, முன்னாள் அரசுத் தலைமை வழக்குரைஞர் சோலி சொராப்ஜி மற்றும் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆகியோருக்குப்பிறகு இந்த மரியாதையைப் பெற்ற நான்காவது இந்திய குடிமகனாக கிரண் மஜூம்தார்–ஷா உள்ளார்.

**2.சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் திட்டமான, 'திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டம்' அண்மையில் எவ்வாறு மறுபெயரிடப்பட்டது?**




**அ. National Tuberculosis Elimination Programme (NTEP) ☑**

ஆ. National Tuberculosis Control Programme (NTCP)

இ. National Tuberculosis Removal Programme (NTRP)

ஈ. National Tuberculosis Abolition Programme (NTAP)

- சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் திட்டமான, 'திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டம்' அண்மையில், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் (NTEP) என மறுபெயரிடப்பட்டது. பெயர் மாற்றம் குறித்து அறிவிப்பை, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்களுக்கும் மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- கடந்த 2018இல், இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, காசநோயை இந்தியாவிலிருந்து அகற்றுவதற்கான இலக்கு ஆண்டாக 2025ஆம் ஆண்டை அறிவித்தார். இது நிலையான வளர்ச்சி இலக்கில் (SDG) அறிவிக்கப்பட்ட ஆண்டைவிட ஐந்து ஆண்டுகள் முன்னதாகும். இந்த இலக்கின் காரணமாக, இந்தத் திட்டம் NTEP என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**3.அண்மையில் காலமான பாபு நட்கர்னி, எந்தத் துறையைச் சார்ந்தவர்?**

அ. அரசியல் ஆ. இலக்கியம்

**இ. விளையாட்டு ☑** ஈ. கலைகள்



- இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரரான பாபு நட்கர்னி (86), சமீபத்தில் மும்பையில் காலமானார். இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 21 மெய்டன் ஓவர்களை தொடர்ச்சியாக வீசி சாதனை புரிந்தவர் பாபு நட்கர்னி.

- நாற்பத்தொரு டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய பின், தேசிய தேர்வுக்குழு உறுப்பினராகவும், மும்பை கிரிக்கெட் சங்கத்தின் இணைச்செயலராகவும் அவர் பணியாற்றினார்.

**4.எந்தப் பிரபலமான சர்வதேச நிறுவனம், 'The Banker' என்ற அதன் அசல் திரைப்படத்தை வெளியிட உள்ளது?**




அ. அமேசான்

**ஆ. ஆப்பிள் ☑**

இ. நெட்பிளிக்ஸ்

ஈ. HBO

- ஆப்பிள் தனது முதல் அசல் படங்களில் ஒன்றான, 'The Banker'ஐ வெளியிட திட்டமிட்டுள்ளது. இது, ஆப்பிள் டிவி பிளஸின் தொடக்ககால திரைப்படங்களுள் ஒன்றாகும். கடந்த ஆண்டு (2019) டிசம்பரில் வெளியிடப்படவிருந்த இந்தத் திரைப்படம் சில குற்றச்சாட்டுகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. தற்போது இது, திரையரங்குகளிலும் ஆப்பிள் டிவி பிளஸ் சந்தாதாரர்களுக்கும் இந்த ஆண்டு (2020) மார்ச் மாதத்தில் வெளியிடப்படவுள்ளது.

- 1960ஆம் ஆண்டுவாக்கில் வங்கித்துறையில் நிலவிவந்த இனப்பாகுபாடுகளை கையாளுவதற்கு மக்களுக்கு உதவிய இரண்டு ஆப்பிரிக்க–அமெரிக்க தொழிலதிபர்களான பெர்னார்ட் காரெட் சீனியர் மற்றும் ஜோ மோரிஸ் ஆகியோரின் மெய்வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டது இத்திரைப்படம்.

**5.அண்மையில் நடைபெற்ற ரோம் தரவரிசை தொடர்–2020 நிகழ்வில், தங்கப்பதக்கம் வென்ற இந்திய மல்யுத்த வீராங்கனை யார்?**



அ. கீதா போகத்

ஆ. பபிதா போகத்

**இ. வினேஷ் போகத் ☑**

ஈ. சாக்ஷி மாலிக்

- அண்மையில் நடைபெற்ற ரோம் தரவரிசை தொடர்–2020 நிகழ்வில், இந்தியாவின் சிறந்த மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகத், 53 கிலோ பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார். தங்கத்திற்கான இறுதிப்போட்டியில், ஈக்வடார் மல்யுத்த வீராங்கனை லூயிசா எலிசபெத் வால்வெர்டேவை 4–0 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்தார். இது, 2020ஆம் ஆண்டில் அவர் பெற்ற முதல் தங்கப்பதக்கமாகும். முன்னதாக, மற்றொரு இந்திய மல்யுத்த வீரர் அன்ஷு மாலிக், 57 கிலோ பிரிவில் வெள்ளி வென்றார்.

**6.எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் நாடு உருவாக்கப்பட்டதிலிருந்து, பிறப்பு விகிதம் மிகவும் குறைவாகிச் சென்ற நாடு உள்ளது?**

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. பிரேசில்



❖ எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் சீன மக்கள் குடியரசு உருவாக்கப்பட்ட 1949ஆம் ஆண்டிலிருந்து, நாட்டின் பிறப்பு விகிதம் மிகவும் குறைந்துள்ளதாக சீனா அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. அந்தத் தரவுகளின்படி, பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 10.94 என உள்ளது. இது, ஆயிரத்திற்கு 12.43 என இருந்த முந்தைய (2017) பிறப்பு விகிதத்தைவிட குறைவாகும்.

❖ சீனாவில் விரைவாக அதிகரித்துவரும் முதியோர் மக்கள்தொகை இருக்கும் காரணத்தால், நகர்ப்புற தம்பதிகள் 2 குழந்தைகளைப் பெற்றெடுக்க அனுமதிக்கப்பட்டனர். மற்றொரு அண்மைய ஆய்வின்படி, எதிர்வரும் 2027ஆம் ஆண்டில், இந்தியா, மக்கள்தொகை எண்ணிக்கையில் சீனாவை முந்தும்.

**7.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 6.5 கி.மீ., நீளமுள்ள Z–மோர் சுரங்கப்பாதை, எந்த மாநிலம் அல்லது / யூனியன் பிரதேசத்தில் கட்டப்படவுள்ளது?**

அ. ஹிமாச்சலப்பிரதேசம்

ஆ. சிக்கிம்

**இ. ஜம்மு – காஷ்மீர் ☑**

ஈ. அஸ்ஸாம்



❖ ஜம்மு–காஷ்மீரில் கட்டப்படவுள்ள Z–மோர் சுரங்கப்பாதையின் கட்டுமானத் திட்டம், APCO அமர்நாத்ஜி சுரங்கப்பாதை நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்துக்கும் அந்நிறுவனத்துக்கும் இடையே சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சர் நிதின் கட்கரி முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு ₹2,379 கோடி செலவாகும். மேலும், ஜம்மு–காஷ்மீரில் உள்ள சுற்றுலாத்தலமான சோனாமர்க்கிற்கு சாலை இணைப்பை இது வழங்கும்.


**8.தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய விமான நிலையங்களில், எந்த நாட்டிலிருந்து திரும்பும் பயணிகள் மட்டும் புதிய வகை கரோனா வைரஸ் (novel Corona virus – nCov) சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்?**

அ. இந்தோனேசியா

**ஆ. சீனா ☑**

இ. ஜப்பான்

ஈ. தாய்லாந்து



- ❖ சீனாவில் புதிய வகை கரோனோ வைரஸ்தொற்று (nCov) ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைய நிலவரப்படி 41 பேர் இந்தத்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களுள் ஒருவர் உயிரிழந்தார். சீனாவுக்குப் பயணமாக சென்ற தாய்லாந்து நாட்டவர் ஒருவரும் ஜப்பான் நாட்டவர் ஒருவரும் இந்தத்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

- ❖ அண்மையில், மத்திய சுகாதார அமைச்சகம் தில்லி, மும்பை மற்றும் கொல்கத்தா வானூர்தி நிலைய அதிகாரிகளுக்கு, சீனாவிலிருந்து வரும் பயணிகளைச் சோதனையிடவும், வைரஸ் தொற்றை வெப்ப மேவிகள் மூலம் சரிபார்க்கவும் அறிவுறுத்தியது. கரோனா வைரஸ்கள், வைரஸ்களின் ஒரு பெரிய குடும்பமாகும்; அவை, மத்திய கிழக்கு மூச்சுக்கூட்டறிகுறி கரோனா வைரஸ் (MERS–CoV) மற்றும் கடுந்தீவிர் மூச்சியக்க கூட்டறிகுறி (SARS) போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றன.

**9.ஹிந்துஸ்தான் ஊர்வாரக் மற்றும் ரசாயன் லிமிடெடின் (HURL) 'APNA UREA – Sona Ugle' பிராண்ட், அண்மையில், எந்த மத்திய அமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்டது?**

அ. இராம்விலாஸ் பஸ்வான்

ஆ. D V சதானந்த கௌடா ☑

இ. ஹர்சிம்ரத் கௌர் பாடல்

ஈ. ஹர்ஷ் வர்தன்



- ❖ மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சரான D V சதானந்த கவுடா, அண்மையில், 'APNA UREA – Sona Ugle' என்ற பிராண்டையும் ஹிந்துஸ்தான் ஊர்வாரக் மற்றும் ரசாயன் லிமிடெடின் (HURL) இலச்சினையையும் அறிமுகப்படுத்தினார். HURL என்பது ஒரு கூட்டு நிறுவனம் ஆகும்; இது, கோல் இந்தியா லிட், NTPC லிட் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட் ஆகிய 3 பொதுத்துறை மகா இரத்னா நிறுவனங்களால் ஊக்குவிக்கப்படுகிறது.

- ❖ கோரக்பூர் (உத்தரபிரதேசம்), பரவுனி (பீகார்) & சிந்திரி (ஜார்க்கண்ட்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று நலிவுற்ற யூரியா ஆலைகளின் மீட்டுருவாக்கப் பணியை HURL மேற்கொண்டுள்ளது. இந்த ஆலைகள் 2021 பிப்ரவரியில் தொடங்கப்படவுள்ளன.

**10.மகாராஷ்டிராவில் அமைந்துள்ள எந்த ஆட்டோமொபைல் நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை வாங்குவதற்கு சீனாவின் கிரேட் வால் மோட்டார்ஸ் (GWM) நிறுவனம் முடிவு செய்துள்ளது?**

அ. ஜெனரல் மோட்டார்ஸ் ☑

ஆ. போர்டு

இ. வோக்ஸ்வாகன்

ஈ. டொயோட்டா

GM

- ❖ சீனாவின் முன்னணி ஆட்டோமொபைல் உற்பத்தி நிறுவனமான கிரேட் வால் மோட்டார்ஸ் (GWM), மகாராஷ்டிர மாநிலத்தின் புனேவுக்கு அருகிலுள்ள தலேகானில் அமைந்துள்ள ஜெனரல் மோட்டார்ஸ் (GM) நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை வாங்குவதற்காக அமெரிக்க உற்பத்தியாளரான ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

- இந்தியாவில் உள்ள GMஇன் விற்பனைப்பிரிவான, 'செவ்ரோலெட் சேல்ஸ் இந்தியா', ஒரு தன்னாட்சி நிறுவனமாக தொடரும் என ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போதுள்ள இந்திய வாடிக்கையாளர்களுக்கு, விற்பனைக்குப் பிந்தைய சேவை மற்றும் உதிரிபாகங்கள் ஆதரவை அது தொடர்ந்து வழங்கும். வரும் 2021ஆம் ஆண்டுக்குள் இந்திய சந்தையில் நுழைவதற்கு கிரேட் வால் மோட்டார்ஸ் (GWM) திட்டமிட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

### 1.ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தில் நடைபெறும் பிரபலமான சர்வதேச டென்னிஸ் போட்டி எது?

அ. U S ஓப்பன்

**ஆ. ஆஸ்திரேலிய ஓப்பன் ☑**

இ. பிரஞ்சு ஓப்பன்

ஈ. விம்பிள்டன்

- ஒவ்வோராண்டும் பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன் மற்றும் US ஓப்பன் போட்டிகளுக்கு முன்னர் நடக்கும் நான்கு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளுள் ஆஸ்திரேலிய ஓப்பன் போட்டி முதல் போட்டியாகும். டென்னிஸ் ஆஸ்திரேலியாவால் ஏற்பாடு செய்யப்படும் இது, பொதுவாக ஒவ்வொரு ஜனவரி மாதத்தின் கடைசி பதினைந்து நாட்களில் நடைபெறுகிறது.

- இந்த நிகழ்வில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள், கலப்பு இரட்டையர், ஜூனியர் சாம்பியன்ஷிப் மற்றும் சக்கர–நாற்காலி போட்டிகள் உட்பட பல பிரிவுகள் உள்ளன. 2020 ஆஸ்திரேலிய ஓப்பன் 108ஆவது பதிப்பாகும். இது ஜனவரி 20 முதல் பிப்ரவரி 2 வரை ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவின் மெல்பர்ன் பூங்காவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நோவக் ஜோகோவிச்சும் நவோமி ஒசாகாவும் முறையே ஆடவர் ஒற்றையர் மற்றும் மகளிர் ஒற்றையர் போட்டிகளில் நடப்பு சாம்பியன்களாக உள்ளனர்.

### 2. 18,000 கி.மீட்டருக்கும் மேல் உலகின் மிகநீண்ட விழிப்புணர்வு மனித சங்கிலியை ஏற்பாடுசெய்த மாநிலம் எது?

அ. உத்தரபிரதேசம்

**ஆ. பீகார் ☑**

இ. ஒடிசா

ஈ. மேற்கு வங்கம்



- பீகார் மாநில அரசு தனது 'ஜல்–ஜீவன்–ஹறியாலி' பரப்புரையின்கீழ், அண்மையில் 18,034 கி.மீ., நீளமுள்ள மனித சங்கிலியை ஏற்பாடு செய்திருந்தது. ஐந்து கோடிக்கும் அதிகமான பொதுமக்கள் இதில் பங்கேற்றனர். இந்நிகழ்வில் பீகார் முதலமைச்சர் நிதீஷ்குமார், துணை முதல்வர் மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களுடன் கலந்துகொண்டார்.

- காலநிலை மாற்றம் மற்றும் மணக்கொடை மற்றும் குழந்தைத் திருமணம் போன்ற சமூக அவலங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த மனித சங்கிலி ஏற்பாடு செய்யப்பட்டது. 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் பீகாரில் நடத்தப்பட்ட மனித சங்கிலிகளுக்குப் பிறகு, உலகின் மிகநீளமான மனித சங்கிலியாக இது கருதப்படுகிறது.

**3. JLL நகர உந்தக்குறியீடு, 2020இன்படி, எந்த இந்திய நகரம், 'உலகின் மிகவும் ஆற்றல் வாய்ந்த நகரம்' எனத் தேர்வுசெய்யப்பட்டுள்ளது?**

அ. மும்பை

ஆ. பெங்களூரு

இ. கொல்கத்தா

**ஈ. ஹைதராபாத் ☑**



- தெலுங்கானாவின் தலைநகரமாகவும், தொழில்நுட்பத் தொழிற்துறைகளின் முக்கிய மையமாகவும் உள்ள ஹைதராபாத், 'JLL City Momentum Index, 2020'இன்படி, 'உலகின் மிக ஆற்றல்வாய்ந்த நகரம்' என அண்மையில் அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவைச்சேர்ந்த உலகளாவிய அசையாச்சொத்து சேவை நிறுவனமான ஜோன்ஸ் லாங் லாசல்லே (JLL), சமீபத்தில், உலகெங்கிலும் உள்ள 129 நகரங்களை மதிப்பீடு செய்து இந்தக்குறியீட்டை வெளியிட்டது.
- தரவரிசையின் இந்த ஏழாவது பதிப்பில், ஹைதராபாத் முதலிடத்தைப் பிடித்தது. அதைத்தொடர்ந்த இடத்தில் மற்றொரு இந்திய தொழில்நுட்ப மையமான பெங்களூரு உள்ளது. தென்னிந்திய நகரமான சென்னை ஐந்தாவது இடத்திலும், தில்லி ஆறாவது இடத்திலும் உள்ளது. 2020இன் குறியீட்டில், தரவரிசையின் முதல் 20 இடங்களில் ஏழு இடங்களைப்பிடித்து, இந்தியா முன்னிலை வகிக்கிறது.

**4.நீர்மூழ்கிக்கப்பலிலிருந்து ஏவக்கூடிய, 'K–4' என்னும் அணுசக்தித்திறனுடைய ஏவுகணையை அண்மையில் சோதித்த நாடு எது?**

அ. சீனா

ஆ. இரஷ்யா

**இ. இந்தியா ☑**

ஈ. இஸ்ரேல்



- அண்மையில், ஆந்திரக் கடற்கரையிலிருந்து 3,500 கிலோ மீட்டர் தாக்கும்திறனுடைய அணுசக்தித் திறன்கொண்ட ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை செய்தது. நீர்மூழ்கிக்கப்பலில் இருந்து ஏவக்கூடிய, 'K–4' என்ற எறி ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது.
- இந்தியக் கடற்படையின் அரிஹந்த் வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்தப்படவிருக்கும் இந்த ஏவுகணை, அதன் இலக்குகளைத்தாக்கும் சிறந்த கட்டமைப்பைக்கொண்டுள்ளது. அரிஹந்த், இந்தியா –வின் முதல் அணுசக்தியால் இயங்கும் 6000 டன் எடையுடைய நீர்மூழ்கிக்கப்பலாகும். இது, 2018 நவம்பரில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

**5.சமீபத்தில் சிலிகா ஏரியில் 146 ஐராவதி ஓங்கில்கள் காணப்பட்டன. சிலிகா ஏரி எங்குள்ளது?**

அ. ஹிமாச்சல பிரதேசம் **ஆ. ஒடிசா ☑**

இ. ஜம்மு & காஷ்மீர் ஈ. உத்தரகண்ட்



- சிலிக்கா ஏரி என்பது ஒடிசா மாநிலத்தில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய உப்புநீர் ஏரியாகும். ஐராவதி ஓங்கில்கள் எனப்படும் அழிவின் விளிம்பிலிருக்கும் உயிரினங்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் ஏரியாகும் இது. சமீபத்தில் டால்பின் கணக்கெடுப்பை சிலிக்கா மேம்பாட்டு ஆணையம் அங்கு மேற்கொண்டது. அப்போது, 146 ஐராவதி ஓங்கில்கள் அங்கு காணப்பட்டன. கடந்த ஆண்டு (2019) கணக்கெடுப்பின்படி, இந்நீர்வாழ் பாலூட்டி இனங்களின் எண்ணிக்கை 151 ஆகும்.

**6.வனச்சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக குழுவொன்றை அமைக்க முடிவுசெய்துள்ள மாநிலம் எது?**

அ. மத்தியபிரதேசம்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கர்நாடகா

ஈ. கேரளா



- மகாராஷ்டிரா மாநில அரசானது மாநிலத்தின் வனப்பகுதிகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக, குழுவொன்றை அமைக்கவுள்ளது. மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் ஆதித்யா தாக்கரே தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

- முன்மொழியப்பட்ட இக்குழுவில் மாநில சுற்றுலா மற்றும் வன மேம்பாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் உள்ளனர். வனப்பாதுகாப்பை ஊக்குவிப்பதோடு, மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதுமே இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம் தற்போதுள்ள சுற்றுலா மையங்களின் உட்கட்டமைப்பும் மேம்படுத்தப்படும்.

**7. POLNET 2.0 தளத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கிவைக்கவுள்ளார். POLNET 2.0 உடன் தொடர்புடையது எது?**

அ. அரசியல் பரப்புரை

ஆ. அரசியல் வலையமைப்பு சேவை

**இ. காவல்துறை வலையமைப்பு சேவை ☑**

ஈ. காவல்துறை புகார் பதிவு



- ஜன.20 அன்று புது தில்லியில் நடந்த, 'பொதுப்பாதுகாப்பு மற்றும் பேரிடர் நிவாரண அமைப்புகளின் தலைவர்கள்' தேசிய மாநாட்டின்போது மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, POLNET 2.0 என்னும் புதியதளத்தை அறிமுகப்படுத்தவுள்ளார். காவலர் கம்பியில்லாத்தொடர்பு ஒருங்கிணைப்பு இயக்குநரகம் நாட்டில் **POLNET** அல்லது **POL**ice **NET**work சேவைகளை நிர்வகித்து செயல்படுத்தி வருகிறது.

- POLNET 2.0 எனப்படும் காவல்படையினருக்கான அதிநவீன பல்லூடக வசதிகளுடன் கூடிய ஒரு புதிய வலுவான தகவல்தொடர்பு தளத்தை அவ்வியக்குநரகம் உருவாக்கியுள்ளது. பேரிடர்கள் அல்லது சட்ட–ஒழுங்கு சிக்கல்களின்போது இது உதவும்.

**8.அண்மையில் மத்திய கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்ட இந்திய மின்சாரத்துறையின் கண்காட்சியின் பெயரென்ன?**

அ. ELECASE

**ஆ. ELECRAMA ☑**

இ. ELECTRON

ஈ. ELECTRIC 2.0




❖ உத்தரபிரதேசத்தின் நொய்டா பெருநகரத்தில், 'ELECRAMA–2020'ஐ மத்திய கனரக தொழிற்சாலை மற்றும் பொது நிறுவனங்களின் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் திறந்துவைத்தார். தொடக்கவிழாவில் மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் R K சிங் கலந்துகொண்டார். இதனை ஈராண்டுகளுக்கு ஒருமுறை இந்திய மின் மற்றும் மின்னணு உற்பத்தியாளர்கள் சங்கம் (IEEMA) ஏற்பாடு செய்கிறது. இது இந்திய மின்துறையின் கண்காட்சியுடன் கூடிய ஒரு மாநாடாகும்.

❖ இந்த நிகழ்வு, மின்துறைசார்ந்த பல்வேறு தயாரிப்புகள் & தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்துகிறது. மேலும், வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையில் ஒரு வர்த்தக தளத்தையும் இந்த நிகழ்வு உருவாக்குகிறது. அறிவு பரிமாற்றத்திற்கான பல்வேறு கருத்தரங்குகளையும் இது நடத்துகிறது.

**9.ஸ்கிரீன் ஆக்டர்ஸ் கில்ட் விருதுகளில், 'Outstanding Performance by a Female Actor in a Motion Picture' விருதை வென்ற நடிகை யார்?**

அ. ரெனீ ஜெல்வெகர் ☑

ஆ. ஜெனிபர் அனிஸ்டன்

இ. ஒலிவியா கோல்மன்

ஈ. எலிசபெத் மோஸ்



❖ வருடாந்திர Screen Actors Guild (SAG) விருதுகளின் 26ஆவது பதிப்பு அண்மையில் வழங்கப்பட்டது. 'Outstanding Performance by a Female Actor in a Motion Picture' என்ற விருது 'ஜூடி' என்ற திரைப் படத்தில் நடித்ததற்காக ரெனீ ஜெல்வெகர் வென்றார். ரெனீ ஜெல்வெகர், அண்மையில், 'ஜூடி' என்ற வாழ்க்கை வரலாற்றில் நடித்ததற்காக கோல்டன் குளோப் விருதைப்பெற்றார்.

❖ 'Outstanding Performance by a Male Actor in a Motion Picture' என்ற விருது 'ஜோக்கர்' என்ற திரைப் படத்தில் நடித்ததற்காக ஜாக்கின் பீனிக்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. தென்கொரிய திரைப்படமான 'Parasite', 'Best Performance by a Cast in a Motion Picture' விருதை வென்ற முதல் அயல்நாட்டு மொழி திரைப்படமாக ஆனது.

**10.மாநிலத்திற்கு மூன்று தலைநகரங்களை உருவாக்கும் திட்டத்திற்கு அண்மையில் ஒப்புதல் அளித்த மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. ஆந்திரபிரதேசம் ☑**

இ. மத்தியபிரதேசம்

ஈ. உத்தரபிரதேசம்

- அமராவதி, விசாகப்பட்டினம் மற்றும் கர்னூல் ஆகிய மூன்று மாநில தலைநகரங்களை உருவாக்கும் திட்டத்திற்கு ஆந்திர பிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆளும் ஜெகன் மோகன் ரெட்டி அரசு, இந்த மசோதாவை மாநில சட்டசபையில் தாக்கல் செய்தது. மாநிலத்தின் பரவலாக்கப்பட்ட மற்றும் சீரான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான, "ஆந்திரபிரதேச பரவலாக்கம் மற்றும் அனைத்துப் பிராந்தியங்களின் உள்ளடக்கிய வளர்ச்சி மசோதா, 2020"க்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது மாநிலத்திற்குள் பல்வேறு மண்டலங்களை உருவாக்குவதற்கும் மண்டலத் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு வாரியங்களை நிறுவுவதற்கும் வழிவகுக்கிறது. அரசாங்கம் தனது சட்டமன்றத்தலைநகரை அமராவதியிலும், தலைமைச்செயலகம் மற்றும் நிர்வாக தலைநகரை விசாகப்பட்டினத்திலும், நீதித் துறை தலைநகரை கர்னூலிலும் அமைக்க முடிவுசெய்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ₹40,000 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் மின்சார வாகனம் தயாரிக்கும் ஆலையை நிறுவுவதற்கும் தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு 'அல்கெராபி' என்ற நிறுவனத்துக்கும், மின்சார வாகனம் தயாரிக்கும் நிறுவனத்தை அமைப்பதற்கு சீன நாட்டின் 'வின்டெக்' என்னும் நிறுவனத்துக்கும் தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தஞ்சாவூர் விமானப்படைத்தளத்தில் சுகோய் 30 MKI போர்விமானப்படையணி தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் படையணிக்கு, 'Tiger Sharks' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை முப்படைத்தளபதி விபின் ராவத் தொடங்கிவைத்தார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.பன்னாட்டு செலவாணி நிதியம் (IMF) மதிப்பிட்டுள்ளபடி, நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 5.2 %

ஆ. 5.8 %

**இ. 4.8 % ☑**

ஈ. 4.0 %




❖ நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.8 சதவீதமாக இருக்கும் என்று பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF) மதிப்பிட்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.1 சதவீதமாக இருக்கும் என IMF கடந்த அக்டோபரில் மதிப்பிட்டிருந்த நிலையில், அதனை தற்போது குறைத்துள்ளது. அதேபோல், 2020–21 நிதியாண்டில் வளர்ச்சி 5.8 சதவீதமாகவும், 2021–22 நிதியாண்டில் வளர்ச்சி 6.5 சதவீதமாகவும் இருக்கும் எனத் தெரிவித்துள்ளது.

❖ நடப்பு நிதியாண்டில் உலகின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2.9 சதவீதமாக இருக்கும் எனவும் அடுத்தடுத்த நிதியாண்டுகளில் முறையே 3.3%, 3.4% ஆக இருக்கும் எனவும் IMF மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் வங்கிசாராத நிதித்துறையில் நிலவும் சிக்கலால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தின் மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளதாக IMF தெரிவித்துள்ளது.

**2.வேளாண் அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, 2018–19ஆம் ஆண்டில் காய்கறி உற்பத்தியில் முதலிடம் வகித்த இந்திய மாநிலம் எது?**

அ. உத்தரபிரதேசம்

ஆ. பீகார்

இ. ஒடிசா

**ஈ. மேற்கு வங்கம் ☑**



❖ அண்மையில், 2018–19ஆம் ஆண்டுக்கான மாநில வாரியான தோட்டக்கலை உற்பத்தித் தரவுகளை வேளாண் அமைச்சகம் வெளியிட்டது. தரவுகளின்படி, 29.55 மில்லியன் டன்கள் (mt) காய்கறிகளை கடந்த ஆண்டில் உற்பத்திசெய்து மேற்கு வங்க மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

❖ 2018–19ஆம் ஆண்டில், நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த காய்கறி உற்பத்தியில், 15.9 சதவீதம், இந்த மாநிலத்திலிருந்தே பெறப்பட்டுள்ளது. 2017–18இல் உத்தரபிரதேச மாநிலம் முதலிடம் பிடித்திருந்தது, இந்த ஆண்டு 27.71 mt காய்கறி உற்பத்தியுடன் அம்மாநிலம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

❖ பழங்கள் உற்பத்தியைப் பொறுத்தவரை, 17.61 mt பழங்கள் உற்பத்தி செய்து ஆந்திரபிரதேச மாநிலம் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. 10.82 mt பழங்கள் உற்பத்தியுடன் மகாராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**3.பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) புதிய நிர்வாக இயக்குநராக அண்மையில் நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டி ☑

ஆ. ரஜ்னிஷ் குமார்

இ. அதானு குமார் தாஸ்

ஈ. சஞ்சீவ் சதா

❖ சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டியை பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) நிர்வாக இயக்குநராக நியமிப்பதற்கான நிதி சேவைகள் துறையின் முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது, நாட்டின் மிகப்பெரிய கடன் வழங்குநரின் துணை நிர்வாக இயக்குநராக பணியாற்றி வரும் சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டி, SBIஇன் நிர்வாக இயக்குநராக 3 ஆண்டுகாலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். SBIஇன் நிர்வாக இயக்குநராக இருந்த அன்சுலா காந்த், கடந்த ஆண்டு, உலக வங்கியின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை நிதி அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார்.

**4.உலகப்பொருளாதார மன்றத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட, 'சமூக இயக்கக்குறியீடு – Social Mobility Index'இல் இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

அ. 56

ஆ. 66

இ. 76 ☑

ஈ. 86

❖ அண்மையில் வெளியிடப்பட்ட உலகப்பொருளாதார மன்றத்தின் சமூக இயக்கக்குறியீட்டில், 82 நாடுகளுள் இந்தியா 76ஆவது இடத்தைப்பிடித்துள்ளது. முதன்முறையாக வெளியிடப்படும் இந்தக் குறியீட்டில், டென்மார்க் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

❖ நலவாழ்வு, கல்வி, தொழில்நுட்பம், வேலை மற்றும் பாதுகாப்பு மற்றும் நிறுவனங்கள் என ஐந்து முக்கிய பரிமாணங்களில் இந்த நாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இந்தக்குறியீட்டின்படி, உலகின் மிகவும் சமூக இயக்கமிகு சமூகங்கள் அனைத்தும் ஐரோப்பிய நாடுகளாக உள்ளன. டென்மார்க், நார்வே, பின்லாந்து, சுவீடன் மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளன.

**5. 'கவனிப்பதற்கான நேரம் – Time to Care' என்ற அறிக்கையை சமீபத்தில் வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி

இ. Oxfam, தன்னார்வ தொண்டு நிறுவனம் ☑

ஈ. பிரதம், தன்னார்வ தொண்டு நிறுவனம்

❖ உலகளாவிய ஏற்றத்தாழ்வுகளை மையமாகக்கொண்ட 'கவனிப்பதற்கான நேரம்' என்ற அறிக்கையை தொண்டுநிறுவனங்கள் & உரிமைகள் குழுவின் கூட்டமைப்பான Oxfam அண்மையில் வெளியிட்டது.

கடந்த பத்தாண்டுகளில் கோடீசுவரர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ள நிலையில், உலக அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஆழமாக வேரூன்றியுள்ளதாக அந்த அறிக்கை கூறியுள்ளது.

❖ மொத்தம் 63 இந்திய பில்லியனர்களின் செல்வநிலை, 2018–19 நிதியாண்டிற்கான மொத்த இந்திய வரவுசெலவுத் திட்டத்தைவிடவும் (₹24,42,200 கோடி) அதிகமாக உள்ளது என்பதையும் இவ்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. உள்ளடக்கிய வளர்ச்சிக்கு பாலின ஏற்றத்தாழ்வுகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கை பரிந்துரை செய்துள்ளது.

**6.இந்திய நிறுவனங்களின் செயலாளர்கள் நிறுவனத்தின் (ICSI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ. ஆஷிஷ் கர்க் ☑**

ஆ. ஆதித்யா கர்க்

இ. நாகேந்திர ராவ்

ஈ. நரேந்திர ராவ்



❖ இந்திய நிறுவனங்களின் செயலாளர்கள் நிறுவனம் (ICSI) சமீபத்தில் 2020ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக ஆஷிஷ் கர்க்கை நியமித்தது. ICSIஇன் மற்றொரு உறுப்பினரான நாகேந்திர D இராவ், ICSI நிறுவனத்தின் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆஷிஷ் கர்க், ICSIஇன் மத்திய கவுன்சிலுக்கு 2015–18ஆம் ஆண்டுகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

❖ தற்போது, 2019–22ஆம் ஆண்டுகாலத்திற்கு அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ICSI என்பது இந்திய நிறுவனச் செயலாளர்களின் பணியை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான ஒரு சட்ட அமைப்பாகும். இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

**7. அண்மைய UNCTAD அறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் அதிக நேரடி அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்த்த நாடு எது?**

அ. இந்தியா

ஆ. சீனா

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. சிங்கப்பூர்




❖ வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐ.நா கூட்டமைப்பு (UNCTAD) அண்மையில் தனது 'உலகளாவிய முதலீட்டு போக்கு கண்காணிப்பு அறிக்கை'யை வெளியிட்டதோடு அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்த்ததன் அடிப்படையில் நாடுகளை அது பட்டியலிட்டது. இவ்வறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் $251 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்து ஐக்கிய அமெரிக்க நாடுகள் முதலிடத்தைப் பெற்றது.

❖ 2019ஆம் ஆண்டில், $140 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்து, சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்த நாடுகளுள் இந்தியாவும் உள்ளது; அது, $49 பில்லியன் டாலர் அளவுக்கு அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்துள்ளது.

இது, முந்தைய ஆண்டின் அந்நிய நேரடி முதலீட்டை விட 16% அதிகம். இந்தியாவின் அந்நிய நேரடி முதலீட்டின் பெரும்பகுதி அதன் சேவைத்துறைக்குச்சென்றதாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

**8.ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பானது அண்மையில் தனது, 'UNWTO உலக சுற்றுலா காற்றழுத்தமானி அறிக்கை'யை வெளியிட்டது. UNWTOஇன் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. பாரிஸ்

**ஆ. மாட்ரிட் ☑**

இ. டோக்கியோ

ஈ. நியூயார்க்

❖ ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு என்பது ஸ்பெயினின் மாட்ரிட்டை தலைமையிடமாகக் கொண்ட, நிலையான சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான ஐ.நா. நிறுவனமாகும். சர்வதேச சுற்றுலா குறித்த விரிவான அறிக்கையை UNWTO அண்மையில், 'UNWTO உலக சுற்றுலா காற்றழுத்தமானி அறிக்கை – World Tourism Barometer Report' என்ற தலைப்பில் வெளியிட்டது.

❖ அந்த அறிக்கையின்படி, கடந்த 2019ஆம் ஆண்டில் உலகெங்கிலும் 1.5 பில்லியன் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 4 சதவீதம் அதிகமாகும். தொடர்ச்சியாக பத்தாவது ஆண்டாக இது அதிகரித்து வருகிறது. 2020ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி 3–4% வரை இருக்கும் எனவும் UNWTO கணித்துள்ளது.

**9.பரோடா வங்கியின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டி

ஆ. ரஜ்னிஷ் குமார்

இ. அதானு குமார் தாஸ்

**ஈ. சஞ்சீவ் சதா ☑**



❖ சஞ்சீவ் சதாவை பொதுத்துறை வங்கியான பரோடா வங்கியின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை நிர்வாகியாகவும் அமைச்சரவை நியமனக்குழு நியமித்தது. இந்நியமனத்திற்கு முன்பு, SBI மூலதனச் சந்தைகளில் துணை நிர்வாக இயக்குநராக சஞ்சீவ் சதா பணியாற்றிவந்தார்.

❖ இதுதவிர இரண்டு முக்கிய நியமனங்களும் செய்யப்பட்டுள்ளன; அதில், கனரா வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாகியாக லிங்கம் வெங்கட் பிரபாகர் மற்றும் பாங்க் ஆப் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக அதானு குமார் தாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டதும் அடங்கும். இந்நியமனத்திற்கு முன்பு, லிங்கம் வெங்கட் பிரபாகர் பஞ்சாப் தேசிய வங்கியின் நிர்வாக இயக்குநராக பணியாற்றிவந்தார். அதானு குமார் தாஸ், பாங்க் ஆப் இந்தியாவின் நிர்வாக இயக்குநராக இருந்தார்.

**10.அண்மையில் காலமான மன் மோகன் சூத், எந்தத் துறையைச் சார்ந்தவர்?**



அ. இசை

ஆ. விளையாட்டு ☑

இ. இலக்கியம்

ஈ. அரசியல்

- 80 வயதான முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும், தேசிய தேர்வுக் குழுவின் உறுப்பினருமான மன் மோகன் சூத் அண்மையில் காலமானார். 06–07–1939 அன்று இலாகூரில் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது) பிறந்த அவர், இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு டெஸ்ட் ஆட்டத்திலும், 39 முதல் தர போட்டிகளிலும் விளையாடியுள்ளார். அவர், தில்லி மற்றும் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் (DDCA) நிர்வாகியாகவும், தேசிய தேர்வுக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ஜனவரி.20–31 வரை 31ஆவது சாலைப் பாதுகாப்பு வாரத்தைக் கடைப்பிடிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

### 1.கிரீன்பீஸ் இந்தியாவின் அண்மைய அறிக்கையின்படி, இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரம் எது?



அ. குருகிராம்

**ஆ. ஜாரியா ☑**

இ. லக்னோ

ஈ. நொய்டா

- கிரீன்ஸ்பீஸ் இந்தியா என்ற சுற்றுச்சூழல் தன்னார்வ தொண்டுநிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி, ஜார்கண்டில் உள்ள ஜாரியா என்னும் ஒரு நகரம், இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரமாக உள்ளது. அதைத்தொடர்ந்து அதே மாநிலத்தைச் சேர்ந்த தன்பாத் என்னும் நகரம் உள்ளது.

- நாட்டின் மிகவும் மாசுபட்ட பத்து நகரங்களுள் ஆறு நகரங்கள், உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ளன என்றும் இவ்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. மிசோரம் மாநிலத்தின் லுங்லே நகரம் மிகக்குறைவான மாசுபட்ட நகரமாக உள்ளது. மேலும், அந்நகரம் உலக நலவாழ்வு அமைப்பின் பரிந்துரைக்கப்பட்ட மட்டத்தில் துகள்மப்பொருள் (PM) அளவைக்கொண்ட ஒரே நகரமாகும்.

- மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவையும், 287 நகரங்களின் துகள்மப்பொருள்கள் தரவின் பகுப்பாய்வையும் பயன்படுத்தி, கிரீன்பீஸ் இந்தியா, இந்தியாவில் உள்ள மிகவும் மாசுபட்ட நகரங்களை வரிசைப்படுத்தியுள்ளது.

### 2.விவசாய நில குத்தகைக்கொள்கையை அமல்படுத்திய நாட்டின் முதல் மாநிலம் எது?

**அ. உத்தரகண்ட் ☑**

ஆ. பீகார்

இ. ஒடிசா

ஈ. மேற்கு வங்கம்

उत्तराखण्ड राज्य

- உத்தரகண்ட் மாநில அரசு அண்மையில் விவசாய நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான கொள்கையை உருவாக்கியுள்ளதாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. இதுபோன்ற ஒருகொள்கையை நடைமுறைப்படுத்திய முதல் இந்திய மாநிலம் என்ற பெருமையை இதன்மூலம் அம்மாநிலம் பெற்றது.

- இந்தக்கொள்கையின்படி, குத்தகைக்கு விடப்பட்ட நிலமானது 30 ஏக்கருக்கும் குறைவாக இருந்தால், எந்தவொரு நிறுவனம், நிறுவனம் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனம் விவசாய நிலங்களை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுக்கலாம். நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் குத்தகைக்கு விடப்பட்ட காலத்தில் அதற்கான வாரத்தைப் பெறுவார்கள். மலைப்பகுதிகளில் விவசாயம் மற்றும் தோட்டக் கலைக்கு குத்தகைக்கு எடுப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் துண்டுதுண்டான நிலங்களை ஒருங்கி –ணைத்தல் ஆகியவை இந்தக்கொள்கையால் தீர்க்கப்படுகின்றன.

**3.இந்திய இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ள உள்நாட்டு பீரங்கி துப்பாக்கிகளின் பெயரென்ன?**

**அ. ஷரங் ☑**

ஆ. ஸ்ரீரங்

இ. சேவக்

ஈ. சேனக்



❖ இந்திய இராணுவத்தின் அண்மைய அறிவிப்பின்படி, உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட 18 'ஷரங்' பீரங்கித் துப்பாக்கிகளின் முதல் தொகுதி 2020 மார்ச் 31ஆம் தேதிக்குள் இராணுவத்தில் சேர்க்கப்பட உள்ளன. உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட இந்தத் துப்பாக்கியின் குழல், 130 மி.மீ முதல் 155 மி.மீ வரை மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, துப்பாக்கியின் தாக்கும் வீச்சு, 12 கிலோமீட்டர் அதிகரித்து 39 கிலோமீட்டராக உள்ளது.

❖ ஜபல்பூரில் உள்ள பீரங்கி அடித்தள வடிவமைப்பு தொழிற்சாலைக்கு, 'ஷரங்' பீரங்கித் துப்பாக்கியை மேம்படுத்துவதற்கான உலகளாவிய ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், படைக்கருவி தொழிற்சாலைகள், இந்திய இராணுவம் மற்றும் DRDO ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.அண்மையில், இந்திய புவியியல் ஆய்வுமையத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்திய பாதுகாப்புப்படை எது?**

அ. இந்திய இராணுவம்

**ஆ. இந்திய கடற்படை ☑**

இ. இந்திய விமானப்படை

ஈ. இந்திய கடலோர காவல்படை

❖ இந்திய கடற்படைக்கும் இந்திய புவியியல் ஆய்வுமையத்திற்கும் (GSI) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது. "வானிலை & பெருங்கடலியல் கடற்படை பயன்பாட்டிற்கான கடற்பரப்பு வண்டல் தரவு, தயாரிப்புகள் மற்றும் நிபுணத்துவத்தைப்பகிர்வது" குறித்ததாகும் இந்த ஒப்பந்தம். GSIஇன் கடல்சார் மற்றும் கடலோர கணக்கெடுப்புப்பிரிவு, நாட்டின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தை வரைபடமாக்கியுள்ளது.

❖ GSIஇன் கடல்சார் ஆய்வுக்கப்பல்களைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்ட தரவுகளின் களஞ்சியம் இப்போது இந்திய கடற்படையால் பயன்படுத்தப்படும். இந்தத்தரவுகள், இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் நடத்தப்படும் கடல்சார் பயிற்சிகளின்போது கடல்சார் மாதிரியாக்கத்திற்கு பயன்படுத்தப்படும்.

**5.ஆண்டுதோறும் எந்த அமைச்சகம் / அமைப்பால் குழந்தைகளுக்கான தேசிய வீரதீரச்செயல்களுக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன?**

அ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

இ. UNICEF

ஈ. இந்திய குழந்தைகள் நல கவுன்சில் ☑

❖ 2019ஆம் ஆண்டிற்கான தேசிய வீரதீரச்செயல்களுக்கான விருதுகளை அண்மையில் புது தில்லியில் உள்ள இந்திய குழந்தைகள் நல கவுன்சில் (ICCW) வழங்கியது. தேசிய வீரதீரச்செயல்களுக்கான விருதுகளுக்கு 10 சிறுமிகள் உட்பட 22 குழந்தைகள் தேர்வுசெய்யப்பட்டனர். அதில் ஒரு விருது மட்டும், மறைவுக்குப்பின் வழங்கப்பட்டது.

❖ பேருந்து விபத்துக்குப்பின்னர், 40'க்கும் மேற்பட்ட உயிர்களைக் காப்பாற்றியதற்காக 15 வயது கேரள சிறுவன் ஆதித்யாவுக்கு 'பாரத் விருது' என்று அழைக்கப்படும் மிகவுயர்ந்த விருது வழங்கப்பட்டது. 1952இல் இந்திய குழந்தைகள் நல கவுன்சில் (Indian Council for Child Welfare) உருவாக்கப்பட்டது. இது குழந்தைகளின் துணிச்சலான மற்றும் தன்னிச்சையான தன்னலமற்ற சேவை அல்லது ஒரு சமூக குற்றத்திற்கு எதிரான அவர்களின் வீரதீரச்செயல்களை அங்கீகரிக்கும் நோக்கோடு இந்த விருதை நிறுவியது.

**6.ஓய்வுபெற்ற IAS அதிகாரியான யுத்வீர் சிங் மாலிக், அண்மையில், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட எந்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்?**

அ. IL&FS

ஆ. DHFL

**இ. Unitech ☑**

ஈ. Altico Capital

❖ ஓய்வுபெற்ற IAS அதிகாரியான யுத்வீர் சிங் மாலிக், அண்மையில், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நிலவர உடைமை நிறுவனமான யுனிடெக்கின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் ஜன.21, 2020 அன்று பதவியேற்றார். சில நாட்களுக்கு முன்பு, யுனிடெக்கின் மொத்த நிர்வாகக் கட்டுப்பாட்டையும் கையகப்படுத்தி, புதிய இயக்குநர்களை நியமிக்குமாறு உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியது. இந்நிறுவனம் மனை வாங்குவோரின் பணத்தை தனது சொந்தப்பயன்பாட்டு –க்கு பயன்படுத்துவதாகவும், மனை வழங்கலில் மோசடியை மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

**7.எந்தத் தனியார்துறை வங்கி, அண்மையில் தனது ATM'களிலிருந்து 'அட்டைப்பயன்பாடு இல்லாமல் பணம்பெறும்' வசதியை அறிமுகப்படுத்தியது?**

அ. HDFC வங்கி

ஆ. ஆக்சிஸ் வங்கி

**இ. ICICI வங்கி ☑**

ஈ. கோடக் மஹிந்திரா வங்கி

❖ இந்தியாவின் முன்னணி தனியார்துறை வங்கி அண்மையில் தனது ATM'களிலிருந்து 'அட்டைப் பயன்பாடு இல்லாமல் பணம்பெறும் – Cardless Cash Withdrawal' வசதியை அறிமுகப்படுத்தியது. கிட்டத்தட்ட 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அனைத்து ICICI வங்கி ATM'களிலும் இந்த வசதி கிடைக்கப் பெறும். இச்சேவையைப்பெறுவதற்கு, 'iMobile' என்னும் ICICI வங்கியின் செயலியில் வாடிக்கையாளர் உள்நுழைந்து, தற்காலிக 'PIN' எண்ணை உருவாக்க வேண்டும்.

❖ எந்தவொரு அட்டைடையும் எடுத்துச்செல்ல வேண்டிய அவசியமின்றி, பெறப்பட்ட ஒருமுறை மட்டுமே பயன்படக்கூடிய கடவுச்சொல் (OTP) மற்றும் 'PIN' எண்ணை உள்ளிட்டு வாடிக்கையாளர் பணத்தை எடுக்கவியலும். இதற்கான தினசரி பணப்பரிவர்த்தனை வரம்பு மற்றும் மொத்த வரம்பு ₹20,000 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.


**8.ஆலோசனைநிறுவனமான PwC, தலைமைச்செயல் அதிகாரிகளிடம் (CEO) மேற்கொண்ட அண்மைய கருத்துக்கணிப்பின்படி, எந்த நாடு அதிக வளர்ச்சி வாய்ப்புகளைக் கொண்டுள்ளது?**

அ. சீனா

ஆ. இந்தியா

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. ஜெர்மனி



❖ முன்னணி சர்வதேச ஆலோசனை நிறுவனமான PwC, சமீபத்தில், உலகெங்கிலும் உள்ள தலைமைச் செயல் அதிகாரிகளிடம் (CEO) அது மேற்கொண்ட வருடாந்திர கருத்துக்கணிப்பிப்பின் முடிவுகளை வெளியிட்டது. உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் குறித்து, 83 நாடுகளைச் சேர்ந்த 1,580'க்கும் மேற்பட்ட தலைமைச் செயல் அதிகாரிகளிடம் இந்நிறுவனம் கருத்துக்கணிப்புசெய்தது.

❖ கருத்துக்கணிப்பின்படி, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அதிக வளர்ச்சி வாய்ப்பு உள்ளதாக தலைமைச் செயல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீனா, இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியா நான்காவது இடத்தைப்பிடித்துள்ளது. அடுத்த 12 மாதங்களில் பன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சி குறையும் என்று உலகளாவிய தலைமைச் செயல் அதிகாரிகளில் 53% பேர் நம்புகிறார்கள் என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

**9.அண்மையில் உருவாக்கப்பட்ட, 'தேசிய துளிர்நிறுவன ஆலோசனைக்குழு'வுக்கு தலைமையேற்ற மத்திய அமைச்சர் யார்?**

அ. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சர்

ஆ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர்

**இ. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் ☑**

ஈ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சர்

सत्यमेव जयते
Department of Commerce
Ministry of Commerce and Industry

❖ தேசிய துளிர்நிறுவன ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது. இந்தக்குழு, இந்தியாவில், துளிர்நிறுவனங்களுக்கு வலுவான சூழலை உருவாக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசுக்கு ஆலோசனைகள் வழங்கும்.

❖ இதற்கு மத்திய வர்த்தக அமைச்சர் தலைமைதாங்குவார்; அதே நேரத்தில், மத்திய அரசால் பரிந்துரைக் –கப்படும் ஈராண்டு பதவிக்காலம் உடைய அலுவல்பூர்வமற்ற உறுப்பினர்களும் இதில் இருப்பார்கள். இணைச்செயலாளர் பதவிநிலைக்குக் குறையாத சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் & அமைப்புகளின் வேட்பாளர்கள் பதவி வழி உறுப்பினர்களாக இதில் இருப்பார்கள்.

**10.அண்மையில் எந்த ஆப்பிரிக்க நாட்டில், இந்தியாவின் முதல் மாநாட்டு மையம் திறக்கப்பட்டது?**



அ. லிபியா

ஆ. கானா

**இ. நைஜர் ☑**

ஈ. அல்ஜீரியா

❖ இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அண்மையில், ஆப்பிரிக்காவில் இந்தியாவின் முதல் மாநாட்டு மையத்தை திறந்துவைத்தார். இந்திய ஒன்றியத்தின் உதவியுடன் மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜரில், மகாத்மா காந்தி சர்வதேச மாநாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளது. இதனை நைஜர் அதிபர் மஹமடௌ இசௌபௌ கூட்டாக திறந்துவைத்தார்.

❖ மேற்கு ஆப்பிரிக்க நாட்டிற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஒருவர் பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும். கடந்த ஆண்டு நைஜரில் நடைபெற்ற ஆப்பிரிக்க ஒன்றிய உச்சிமாநாட்டை நடத்துவதற்கு ஆதரவாக, இந்தியா, நைஜருக்கு $15 மில்லியன் டாலர் மானியம் வழங்கியுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.ஹசன் டயப், எந்த நாட்டின் பிரதமர்?**

அ. இஸ்ரேல்

ஆ. ஜோர்டான்

**இ. லெபனான் ☑**

ஈ. சிரியா



- பல்வேறு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு இடையில் பிரதமர் ஹசன் டயப் தலைமையின்கீழ், லெபனான், ஒரு புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளது. முன்னாள் பிரதமர் சாத் அல் ஹரிரி, கடந்த 2019 அக்டோபர் மாதம் நடைபெற்ற ஊழல் மற்றும் தவறான நிர்வாகத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் அழுத்தத்தின்கீழ் தனது பதவியிலிருந்து விலகியபின்னர், அந்த நாடு ஒரு சிறந்த அரசாங்கமின்றி இருந்துவந்தது.

- லெபனானின் அதிபர் மைக்கேல் ஔன், புதிய பிரதமராக ஹசன் டயப்பை பரிந்துரைத்தார். ஹசன் டயப், பெய்ரூட்டின் அமெரிக்க பல்கலையில் பேராசிரியராக உள்ளார். அவர் இருபது உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவையின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**2.அந்நிய நேரடி முதலீட்டின் வரம்பை 100% ஆக உயர்த்துவதற்கு அண்மையில் தொலைத்தொடர்பு துறையிடமிருந்து ஒப்புதல் பெற்ற இந்திய தொலைத்தொடர்பு சேவை வழங்குநர் எது?**

அ. ஜியோ

**ஆ. பாரதி ஏர்டெல் ☑**

இ. வோடபோன் ஐடியா

ஈ. பி எஸ் என் எல்

- முந்தைய வரம்பான 49 சதவீதத்திலிருந்து செலுத்தப்பட்ட மூலதனத்தின் 100% வரை அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை (FDI) அதிகரிப்பதற்கான தொலைத்தொடர்பு துறையின் ஒப்புதலை அண்மையில் பாரதி ஏர்டெல் நிறுவனம் பெற்றது. அயல்நாட்டு முதலீட்டாளர்கள் பாரதி ஏர்டெல்லில் 74 சதவீதம் வரை முதலீடு செய்வதற்கான ரிசர்வ் வங்கியின் அனுமதியை அந்நிறுவனம் ஏற்கனவே பெற்றுள்ளது.

- வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து அதிக நிதியைப்பெறுவதற்கு பாரதி ஏர்டெல் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு இந்த ஒப்புதல் உதவும். பாரதி ஏர்டெல்லில் 35% பங்குகளை வைத்திருக்கும் சிங்கப்பூர் டெலிகம்யூனிகேஷன்ஸ் லிட் அல்லது சிங்டெல், பாரதி ஏர்டெல்லில் தனது பங்குகளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3.இந்தியாவின் சட்டம் & நீதி அமைச்சகத்தால் சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பின்படி, 'பரஸ்பர பிரதேசம் – Reciprocating Territory' என அறிவிக்கப்பட்ட நாடு எது?**

**அ. ஐக்கிய அரபு அமீரகம் ☑** ஆ. ஓமன்

இ. சவுதி அரேபியா ஈ. ஏமன்

- சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், அண்மையில் ஓர் அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டது; இது, ஐக்கிய அரபு அமீரகத்தை 1908ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறை தொகுப்புச்சட்டம், பிரிவு 44Aஇன் கீழ், 'பரஸ்பர பிரதேசம்' என்று அறிவித்தது. இந்த அறிவிப்பில், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள நீதிமன்றங்களின் பட்டியலையும் அதேபிரிவின்கீழ், 'உயர்நீதிமன்றங்கள்' என அறிவித்தது.

- 'பரஸ்பர பிரதேசத்தில்' உள்ள அறிவிக்கப்பட்ட சில நீதிமன்றங்கள் அனுப்பிய ஆணைகள் இந்தியாவில் நிறைவேற்றப்படுவதைப்போல இந்தியாவால் அனுப்பப்படும் ஆணைகள் அங்கும் நிறைவேற்றப்படும். ஐக்கிய அரபு அமீரகத்தைத் (UAE) தவிர ஐக்கியப்பேரரசு (UK), சிங்கப்பூர், வங்கதேசம், மலேசியா மற்றும் நியூசிலாந்து ஆகியவையும் இதில் அடங்கும். இம்முடிவு, இருநாடுகளுக்கும் இடையிலான தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் கால அளவை குறைக்க உதவும் என நம்பப்படுகிறது.

**4. Carbon Disclosure Project (CDP) India'இன் ஆண்டறிக்கையில், இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

**அ. ரு (ஐந்து) ☑**

ஆ. சு (ஆறு)

இ. எ (ஏழு)

ஈ. அ (எட்டு)

**5**

- Carbon Disclosure Project (CDP) India என்ற இலாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்பானது, 2018ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை "Corporates #StepUp Climate Action" என்ற தலைப்பில் வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, கடந்த 2018 டிசம்பருக்குள் பாரிஸ் ஒப்பந்தத்துக்கு இணங்க 25 நிறுவனங்கள் அறிவியல்–அடிப்படையிலான இலக்குகளுக்கு உறுதியளித்துள்ளன.

- பெருநிறுவன காலநிலை நடவடிக்கைகளில் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குப்பிறகு இந்தியா ஐந்தாவது இடத்தைப்பெற்றுள்ளது. இந்த அறிக்கை, நிறுவனங்களின் கரியமிலவாயு ($CO_2$) உமிழ்வு குறைப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்துள்ளது. மேலும், 2018–2019ஆம் ஆண்டுக்கு இடையில் கணக்கெடுக்கப்பட்ட 59 நிறுவனங்களுள் 58 இந்திய நிறுவனங்கள், கால நிலை தொடர்பான சிக்கல்கள் குறித்து மேற்பார்வைக்குழுவை வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

**5.அண்மையில், இந்தியாவின் எந்த நடிகைக்கு, உலகப் பொருளாதார மன்றத்தின் 'கிரிஸ்டல் விருது' வழங்கப்பட்டது?**

அ. பிரியங்கா சோப்ரா

**ஆ. தீபிகா படுகோனே ☑**

இ. கரீனா கபூர்

ஈ. அனுஷ்கா சர்மா



- பிரபல நடிகை தீபிகா படுகோனே, சுவிச்சர்லாந்தின் தாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டுக்கூட்டத்தின்போது கிரிஸ்டல் விருதைப்பெற்றார். மனநலத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரி–க்கும் விதமாக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ உலகப் பொருளாதார மன்றத்தின் உலகக்கலை மன்றத்தின் தலைவரும், இணை நிறுவனருமான ஹில்டே ஸ்வாப், இந்த விருதை வழங்கினார். தீபிகா படுகோனே, 'Live Love Laugh' என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றை நடத்திவருகிறார். அது, இந்தியாவில் உள்ள பள்ளிகளில் விழிப்புணர்வு சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்துவதில் ஈடுபட்டு வருகிறது. இலவச மனநலச்சிகிச்சை மற்றும் மருத்துவக்கல்வி திட்டங்களுக்கும் அந்த அறக்கட்டளை நிதியளித்து வருகிறது.

**6.அண்மையில், 'முதலமைச்சர் கிருஷக் துர்கத்னா கல்யாண் யோஜனா' என்னும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**



அ. குஜராத்

**ஆ. உத்தரபிரதேசம் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. ஆந்திரபிரதேசம்

❖ உத்தரபிரதேச மாநில அரசானது சமீபத்தில், 'முதலமைச்சர் கிருஷக் துர்கத்னா கல்யாண் யோஜனா' என்னும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத்திட்டத்தின்கீழ் விவசாயிகளின் குடும்பத்திற்கு அவர்களின் இறப்பு அல்லது வேலைசெய்யும்போது உடல் ஊனம் ஏற்பட்டால் ₹5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். 18–70 வயதுக்குட்பட்ட விவசாயிகள் இந்தத்திட்டத்தின்கீழ் வருவர்.

❖ இந்த நிதியுதவித்திட்டம் பிற நில உரிமையாளர்களின் வயல்களில் வேலை செய்பவர்களையும், அறுவடைக்குப்பிறகு பயிர்களைப்பெறுவோர்களையும் உள்ளடக்கும். உ.பி மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, 'முதலமைச்சர் பரியதன் சம்வர்தன் யோஜனா' என்றவொரு திட்டத்தைச் செயல்படுத்தவும் அம்மாநிலம் முடிவுசெய்துள்ளது.

**7.சமீபத்தில், இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) வெளியிட்ட எந்திரப்பெண்ணின் பெயரென்ன?**



அ. ககன் மித்ரா

**ஆ. வயோம் மித்ரா ☑**

இ. வாயு மித்ரா

ஈ. ஹியூமன் மித்ரா

❖ சமீபத்தில் பெங்களூருவில் நடந்த, "மனிதர்களின் விண்வெளிப்பயணம் மற்றும் ஆய்வு – தற்போதைய சவால்கள் மற்றும் எதிர்காலப்போக்குகள்" என்ற மாநாட்டின் தொடக்க அமர்வில் 'வயோம் மித்ரா – Vyom Mitra' எனப்படும் எந்திரப்பெண்ணை இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) வெளியிட்டது.

❖ பெண்பால் அம்சங்களைக்கொண்ட இந்த எந்திரப்பெண், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் விண்வெளித்திட்டத்திற்கு முன்னதாக விண்வெளிக்கு செலுத்தப்படும். சோதனை பயணத்தின்போது, விண்வெளியில் மனிதர்கள் ஆற்றக்கூடிய மனித செயல்பாடுகளை இந்த எந்திரப் பெண் உருவகப்படுத்தும். 2020 டிசம்பர் மற்றும் 2021 ஜூலையில் என இருமுறை இந்த எந்திரப் பெண்ணை விண்ணுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

**8.புதிதாக உருவாக்கப்பட்ட யூனியன் பிரதேசமான தாத்ரா&நாகர் ஹவேலி மற்றும் டாமன்&டையூவின் தலைநகரம் எது?**

அ. டாமன் ☑

ஆ. நாகர் ஹவேலி

இ. தாத்ரா

ஈ. சில்வாசா




❖ பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, அண்மையில், புதிதாக அமைக்கப்பட்ட தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஆகியவற்றின் தலைநகரமாக டாமன் நகரம் இருக்கும் என அறிவித்தது. டாமன் என்பது இந்தியாவின் மேலைக்கடற்கரையில் அமைந்துள்ள முந்தைய யூனியன் பிரதேசங்களான டாமன் & டையூவில் உள்ள ஒரு நகரமாகும்.

❖ இந்தியாவின் இருவேறு தனித்தனி யூனியன் பிரதேசங்களாக இருந்த டாமன் & டையூ மற்றும் தாத்ரா & நாகர் ஹவேலி ஆகியவை ஒரே யூனியன் பிரதேசமாக தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ என கடந்த 2019 டிச.3 அன்று இணைக்கப்பட்டன. முந்தைய யூனியன் பிரதேசங்களான தாத்ரா & நாகர் ஹவேலியின் முந்தைய தலைநகரமாக சில்வாசா இருந்தது.

**9.இந்தியாவின் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட் (IOCL) அண்மையில் எந்த நாட்டின் பெட்ரோலிய ஆணையத்திற்கு உதவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**



அ. கானா ☑

ஆ. அர்ஜென்டினா

இ. பிரேசில்

ஈ. பெரு

❖ இந்தியாவின் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட் (IOCL) மற்றும் கானாவின் தேசிய பெட்ரோலிய ஆணையம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று அண்மையில் கையெழுத்தானது. கானாவின் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு (LPG) வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கானாவின் தேசிய LPG ஊக்குவிப்பு கொள்கையை செயல்படுத்துவதற்காக இந்தியன் ஆயில் உதவியும் அதன் தொழினுட்ப நிபுணத்துவத்தையும் ஆப்பிரிக்க நாட்டின் பெட்ரோலிய அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்ளும்.

❖ இந்த அறிவிப்பை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. புதிய LPG மதிப்பு சங்கிலிக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்துறைகளில், கானா நாட்டுக்கு இந்தியன் ஆயில் லிட்., உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**10.மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் எஃகு அமைச்சர், எந்த இந்திய பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்காக, 'SERVICE' என்ற தன்னார்வத் திட்டத்தை சமீபத்தில் தொடங்கிவைத்தார்?**

அ. இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL)

**ஆ. இந்திய உருக்கு ஆணையம் (SAIL) ☑**

இ. தேசிய அனல்மின் நிறுவனம் (NTPC)

ஈ. பாரத மிகுமின் நிறுவனம் (BHEL)

- இந்திய பொதுத்துறை நிறுவனமான இந்திய உருக்கு ஆணையத்தின் (SAIL) பணியாளர்களுக்காக, 'SERVICE' என்ற தன்னார்வ திட்டத்தை, அண்மையில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் எஃகு அமைச்சர் அறிமுகப்படுத்தினார். SAIL Employees Rendering Volunteerism & Initiatives for Community Engagement (**SERVICE**) என அழைக்கப்படும் இந்தத் திட்டம் ஜனவரி 24ஆம் தேதியன்று வரும் SAIL நிறுவனத்தின் தொடக்கநாளிலிருந்து செயல்பாட்டுக்கு வரும்.

- இத்திட்டத்தின்கீழ், SAIL ஊழியர்கள் தாமாக முன்வந்து சமூக நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்கப் –படுகிறார்கள், கல்வி, நலவாழ்வு மற்றும் பெண்கள் மேம்பாடு ஆகியவற்றில் இது மிகுந்த கவனம் செலுத்துகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்குள் எங்குவேண்டுமானாலும் நியாய விலை உணவுப்பொருட்களை வாங்க அனுமதியளித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இவ்வசதி, முதற்கட்டமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்


**1.சர்வதேச கல்வி நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ. ஜனவரி 21

**ஆ. ஜனவரி 24 ☑**

இ. ஜனவரி 23

ஈ. ஜனவரி 26




❖ ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.24ஆம் தேதியை சர்வதேச கல்வி நாளாக UNESCO அனுசரிக்கிறது. வளர்ச்சி மற்றும் அமைதியில் கல்வியின் பங்கை இது கொண்டாடுகிறது. "Learning for People, Planet, Prosperity & Peace" என்பது நடப்பாண்டில் வரும் சர்வதேச கல்வி நாளுக்கான கருப்பொருளாகும்.

❖ கடந்த 2018 டிசம்பர் அன்று, ஐ.நா., பொது அவை ஜனவரி.24ஆம் தேதியை, 'சர்வதேச கல்விநாள்' என அறிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. கல்வி மற்றும் கற்றலை மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க வளமாகக் கருதும் இந்நாள், கல்வி ஓர் அடிப்படை உரிமை என்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

**2.அண்மையில், பின்வரும் எந்த அமைப்புடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் கையெழுத்திட்டது?**

அ. உலக வங்கி

**ஆ. பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ☑**

இ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ. BRICS வங்கி

❖ பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை (BMGF) உடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. தீனதயால் அந்தியோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதாரத்திட்டத்தின்கீழ் (DAY–NRLM) இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளது.

❖ நலிவடைந்த கிராமப்புற நிறுவனங்களை அடிமட்டத்திலிருந்து வலுப்படுத்துவதே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமாகும். DAY–NRLM மற்றும் BMGF ஆகியவை கிராமப்புற நிறுவனங்கள்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன்மூலம் வறியநிலை மக்கள் மற்றும் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்துகின்றன.

❖ கடந்த 2011 ஜூனில், மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் DAY–NRLM தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில், எட்டு முதல் பத்தாண்டு காலப்பகுதியில் சுய–உதவிக்குழுக்கள் மற்றும் அதுபோன்ற பிற நிறுவனங்கள்மூலம் நாட்டில் உள்ள 7 கோடி கிராமப்புற மக்களை உள்ளடக்கும் திட்டமும் உள்ளது.

**3.நடப்பாண்டுக்கான (2020) சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கர் விருதுபெற்றவர் யார்?**

அ. விஜய் குமார்

ஆ. சைலேந்திர பாபு



**இ. குமார் முன்னன் சிங் ☑**

ஈ. நவீன் குமார்

❖ 'தனிநபர்' பிரிவின்கீழ், நடப்பாண்டுக்கான (2020) சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கருக்கு குமார் முன்னன் சிங் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். 'நிறுவனம்' பிரிவின்கீழ், உத்தரகண்ட் மாநிலத்தின் பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையம் இந்த விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

❖ 2005ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் நிறுவன உறுப்பினரா –வார் குமார் முன்னன் சிங். புதிதாக தேசிய பேரிடர் மீட்புப்படையை (NDRF) நிறுவியதற்காகவும் அவர் பாராட்டப்படுகிறார். பேரிடர் மேலாண்மைத்துறையில் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் மேற்கொண்ட பாராட்டத்தக்க பணிகளை அங்கீகரிப்பதற்காக இவ்விருது இந்தியஅரசால் வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஜன.23 அன்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் இந்த விருது அறிவிக்கப்படுகிறது.


**4.பள்ளிகளில் அரசியலமைப்பின் முகவுரையை வாசிக்கும் நடைமுறையை கட்டாயமாக்கியுள்ள மாநில அரசு எது?**

அ. உத்தரபிரதேசம்

**ஆ. மத்தியபிரதேசம் ☑**

இ. குஜராத்

ஈ. மகாராஷ்டிரா




❖ மத்திய பிரதேச மாநில கல்வித்துறை வெளியிட்டுள்ள உத்தரவின்படி, பள்ளிகளில் அரசியலமைப்பின் முகவுரையை வாசிக்கும் நடைமுறையை அம்மாநில அரசு கட்டாயமாக்கியுள்ளது. இவ்வுத்தரவின்படி, அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், சனிக்கிழமைதோறும், மாணவர்களுடன் சேர்ந்து இறைவணக்கத்திற்குப்பிறகு தலைமையாசிரியர் அல்லது ஆசிரியரால் அரசியலமைப்பு முகவுரை வாசிக்கப்படும்.

❖ பள்ளியில் இதுபோன்ற நடைமுறைகள் செயல்படுத்தப்படுவதன்மூலம் மாணாக்கரிடையே நமது அரசியலமைப்பின் மீதான ஆர்வம் தூண்டப்படும். 2020 ஜன.26 முதல் அனைத்து தொடக்க மற்றும் இடைநிலைப்பள்ளிகளிலும் அரசியலமைப்பின் முகவுரையைப்படிக்க மகாராஷ்டிரா மாநிலம் அரசும் ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் தீர்மானம், கடந்த 2013ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனால் இதுவரை செயல்படுத்தப்படவில்லை.

**5.ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு பன்னாட்டுச் சுற்றுலாத்தல விருது–2019இல், "வளர்ந்து வரும் பன்னாட்டுச் சுற்றுலாத்தலம்" என்ற சிறப்பு கௌரவத்தைப் பெற்ற மாநில சுற்றுலாத்துறை எது?**

அ. உத்தரகண்ட்

ஆ. மணிப்பூர்

இ. அஸ்ஸாம்

**ஈ. கேரளா ☑**

- திருச்சூர் மாவட்டத்தில் கேரள மாநில சுற்றுலத்துறையால் செயல்படுத்தப்பட்ட தடையற்ற சுற்றுலா திட்டத்திற்கு, ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பு பன்னாட்டுச் சுற்றுலாத்தல விருது–2019இல், "வளர்ந்து வரும் பன்னாட்டுச் சுற்றுலாத்தலம்" என்ற சிறப்பு கௌரவம் கிடைத்துள்ளது.

- கேரள மாநிலத்தில் உள்ள 120 சுற்றுலாத்தலங்களை மாற்றுதிறனாளிகளும் அணுகும் வகையில் மாற்றியமைப்பதற்காக, தடையற்ற சுற்றுலா திட்டத்தை, கடந்த 2019 மார்ச் மாதத்தில் கேரள சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியது. இதுபோன்று எண்பது திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன; அவற்றுள் 8 திட்டங்கள் திருச்சூர் மாவட்டத்தில் உள்ளன. ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பின் வழிகாட்டுதல்களின் படி, சுற்றுலாத்தலங்களை மாற்றுதிறனாளிகளும் அணுகும் வகையில் மாற்றியமைத்த முதல் மாநிலம் கேரளாவாகும்,

**6.புத்தாக்கம், சமூக சேவை, விளையாட்டு, கலை & கலாசாரம் மற்றும் துணிச்சல் ஆகிய துறைகளில், இந்திய குடியரசுத்தலைவர் அண்மையில் குழந்தைகளுக்கு வழங்கிய விருதின் பெயர் என்ன?**

அ. ஜனனி புரஸ்கார்

ஆ. சக்தி புரஸ்கார்

**இ. பால சக்தி புரஸ்கார் ☑**

ஈ. பால புரஸ்கார்



- புத்தாக்கம், சமூக சேவை, கல்விசார் நடவடிக்கைகள், விளையாட்டு, கலை மற்றும் கலாசாரம் மற்றும் துணிச்சல் ஆகிய துறைகளில் சாதித்த குழந்தைகளுக்கு பால சக்தி புரஸ்கார் விருது வழங்கப்படுகிறது. இந்திய குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், அண்மையில், 5 முதல் 18 வயதுக்குட்பட்ட 49 குழந்தைகளுக்கு இவ்விருதுகளை வழங்கினார்.

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் நிறுவப்பட்ட பிரதம மந்திரி ராஷ்டிரிய பால புரஸ்கார் விருது, 2 பிரிவுகளின்கீழ் வழங்கப்படுகிறது. 'பாலசக்தி புரஸ்கார்' சிறப்பான குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. 'பாலகல்யாண் புரஸ்கார்' குழந்தைகள் நலனுக்காக பங்களித்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

**7.ரிசர்வ் வங்கியின் சமீபத்திய வழிகாட்டுதல்களுக்குப்பிறகு, அரசு மற்றும் பெருநிறுவன பத்திரங்களைப் பொறுத்தவரை அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கான தற்போதைய முதலீட்டு வரம்பு என்ன?**

அ. 20%

ஆ. 25%

**இ. 30% ☑**

ஈ. 35%




- அரசு மற்றும் பெருநிறுவன பத்திரங்களில் அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு வரம்பை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) உயர்த்தியுள்ளது. இதனால் நாட்டில் அயல்நாட்டு முதலீடுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. முந்தைய விதிகளின்படி, ஒரு வெளிநாட்டு முதலீட்டாளரின் குறுகியகால முதலீடுகள் 20 சதவீதத்தைத் தாண்டக்கூடாது. இந்த விதி பெருநிறுவன பத்திரங்களுக்கும் பொருந்தும்.

❖ இந்நிலையில் தற்போது அது 20 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக மாற்றப்பட்டுள்ளது. இதேபோல் கடன் முதலீடும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கான கடன் – பரிமாற்ற நிதி வர்த்தகத்துக்கும் அனுமதியளிக்கிறது.

**8.தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளத்தை உருவாக்கவுள்ள அமைப்பு எது?**

அ. புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. நிதி ஆணையம்

ஈ. தேசிய மேம்பாட்டுக் கவுன்சில்

❖ இந்தியாவின் மதியுரையகமான NITI ஆயோக், தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வு தளத்தை (National Data & Analytics Platform) உருவாக்கவுள்ளது. அண்மையில், NITI ஆயோக் துணைத்தலைவர், இதற்கான விழைவு ஆவணத்தை வெளியிட்டார். இந்தத் தளத்தின்மூலம் அனைத்து அரசாங்க தரவுகளையும் பயனர்–நட்பு முறையில் அணுகவியலும். இந்தத் தளத்தில் பல்வேறு அரசாங்க வலைத்தளங்களின் அண்மைய தரவுகள் இடம்பெற்றிருக்கும்.

❖ இது, தரவுப் பகுப்பாய்வு & பல்வேறு வகையான காட்சிப்படுத்துதலுக்கான கருவிகளையும் வழங்கும். NDAPஇன் முதல் பதிப்பு, எதிர்வரும் 2021ஆம் ஆண்டில் வெளியிடப்படும். தளத்தின் மேம்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக அத்துறைசார்ந்த நிபுணர்களுடன்கூடிய தொழில்நுட்ப ஆலோசனைக்குழு ஒன்றும் (Technical Advisory Group – TAG) அமைக்கப்படவுள்ளது.

**9.நோய்ப்பரவலைத் தடுப்பதற்காக, தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசியை, இந்தியா, எந்த நாட்டிற்கு வழங்கியுள்ளது?**

அ. இலங்கை

**ஆ. மாலத்தீவு ☑**

இ. வங்கதேசம்

ஈ. நேபாளம்




❖ தீவு நாடான மாலத்தீவில் தட்டம்மை நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அந்நாட்டுக்கு முப்பது ஆயிரம் தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசிகளை இந்தியா வழங்கியது. தட்டம்மை நோயை மாலத்தீவு முற்றாக ஒழித்திருந்தாலும், இந்நோய் பாதிப்பைக்கண்டறிந்த பின்னர் மாலத்தீவு அரசாங்கம் இந்நோய் பரவுவததாக சந்தேகித்தது.

❖ கோரிக்கையின் மூன்று நாட்களுக்குள் ஒப்படைக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கு நாடு இந்தியாவுக்கு அவசர கோரிக்கை விடுத்தது. தடுப்பூசி பெறுவதற்காக, இந்தியாவிடம் அந்நாடு அவசர கோரிக்கை விடுத்தது. கோரிக்கை கிடைக்கப்பெற்ற 3 நாட்களுக்குள் அந்நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. தடுப்பூசிகளுக்காக டென்மார்க் மற்றும் UNICEF ஆகியவற்றிடமும் மாலத்தீவு அணுகியிருந்தது. கடந்த ஒருவாரத்தில் மாடும் மாலத்தீவைச்சேர்ந்த 4 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**10.பெரும் யூதப்படுகொலையை நினைவுகூருவதற்கும் யூதப்பகையுணர்வை எதிர்ப்பதற்குமாக உலக இனப்படுகொலை மன்றம் (World Holocaust Forum), அண்மையில் எந்த நகரத்தில் கூட்டப்பட்டது?**

அ. மாஸ்கோ

**ஆ. ஜெருசலம் ☑**

இ. பாரிஸ்

ஈ. பெர்லின்

❖ சமீபத்தில், இஸ்ரேலின் தலைநகரான ஜெருசலமில், உலக இனப்படுகொலை மன்றம் கூட்டப்பட்டது. ஆஷ்விட்ஸ் வதை முகாமிலிருந்து விடுதலையடைந்த 75ஆவது ஆண்டு நிறைவையும் இந்த மன்றம் குறித்தது. இந்த மன்றத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட உலகளாவிய தலைவர்கள் கலந்துகொண்டனர். இதில், இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், அமெரிக்க துணைத்தலைவர் மைக் பென்ஸ், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் தலைவர்கள் மற்றும் வேல்ஸ் இளவரசர் ஆகியோர் அடங்குவர்.

❖ உலக இனப்படுகொலை மன்றத்தின் அறக்கட்டளையால் இந்த மன்றம் ஏற்பாடு செய்யப்பட்டது. இது, இனப்படுகொலையின் நினைவைக் காப்பதற்கும், அனைத்து மதங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் இடையில் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## பத்ம விருதுகள் - 2020

- தமிழ்நாட்டைச் சேர்ந்த TVS மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான வேணு சீனிவாசனின் சிறந்த தொழில் மற்றும் வர்த்தகச் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் விதமாக, நடுவணரசு அவருக்கு உயரிய விருதான, 'பத்மபூஷண்' விருது அறிவித்துள்ளது.
- சிறந்த சமூகசேவையை அளித்துவரும் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதனுக்கும், 'பத்மபூஷண்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- கலைத்துறையில் சிறந்துவிளங்கும் கர்நாடக இசைப்பாடகர்களான லலிதா மற்றும் சரோஜா சிதம்பரம்; மதுரை, சென்னை ஆகிய பெருநகரங்களின் வரலாற்று, சமூக & கலாசார அடையாளங்–களின் ஓவியங்களை சிறப்புற தீட்டும் மனோகர் தேவதாஸ், சமூக சேவகர் S. இராமகிருஷ்ணன், நாதஸ்வர இசையால் அனைவரின் உள்ளங்களை கவர்ந்துவரும் காலீ ஷாபி மெகபூப் மற்றும் ஷேக் மெகபூப் சுபானி ஆகியோருக்கு 'பத்மஸ்ரீ விருது'கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- அதுபோல், அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் சிறப்பாக பணியாற்றிவரும் சென்னை IIT பேராசிரியர் பிரதீப் தலப்பில்லுக்கும், 'பத்மஸ்ரீ விருது' அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.இந்தியாவுக்கும் எந்த நாட்டுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக கங்கா – வோல்கா உரையாடலின் முதல் பதிப்பு, அண்மையில், புது தில்லியில் நடைபெற்றது?**



அ. சீனா

**ஆ. இரஷ்யா ☑**

இ. நேபாளம்

ஈ. வங்கதேசம்

❖ கங்கா–வோல்கா உரையாடலின் தொடக்கப்பதிப்பு அண்மையில் புது தில்லியில் நடைபெற்றது. இது குறித்த எண்ணம், கடந்த 2018 அக்டோபரில் நடைபெற்ற, இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான இந்தியா – இரஷ்யா உச்சிமாநாட்டின்போது உருவானது. இந்த உரையாடலை, Dr. சியாமா பிரசாத் முகர்ஜி ஆய்வு அறக்கட்டளையுடன் இணைந்து இந்தியாவின் மத்திய வெளியுறவு அமைச்சகம் ஏற்பாடுசெய்திருந்தது.

❖ இந்நிகழ்வில் இந்தியா மற்றும் இரஷ்யாவைச் சேர்ந்த பல அறிஞர்கள் பங்கேற்று, இந்தியா – இரஷ்யா இருதரப்பு ஒத்துழைப்பின் பின்னணியில், கலாசாரம் மற்றும் நாகரிகத்தில் முக்கிய கவனஞ்செலுத்தி கலந்துரையாடினர்.

**2. STEMஇல் பெண்கள் குறித்த பன்னாட்டு உச்சிமாநாடு – "Visualizing the Future: New Skylines – எதிர்காலத்தை காட்சிப்படுத்துதல்: புதிய எல்லைகள்", அண்மையில் எந்த நகரத்தில் நடைபெற்றது?**

ISW-2020
International Summit on Women in STEM

அ. மும்பை

**ஆ. புது தில்லி ☑**

இ. ஹைதராபாத்

ஈ. கொல்கத்தா

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உள்ள உயிரி–தொழில்நுட்பத்துறை, STEMஇல் (அறிவியல் (S), தொழில்நுட்பம் (T), பொறியியல் (E) மற்றும் கணிதம் (M)) பெண்கள் குறித்த பன்னாட்டு உச்சிமாநாட்டை, "Visualizing the Future: New Skylines" புது தில்லியில் உள்ள இந்தியா வாழ்விட மையத்தில் ஏற்பாடுசெய்தது.

❖ STEM துறையில் பெண்கள் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காகவும், இந்தத்துறையில் அவர்களின் தொழிற்முறை வாழ்வை வளர்த்தெடுப்பதற்காகவும் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறு நாடுகளைச்சேர்ந்த புகழ்பெற்ற பெண் அறிவியலாளர்கள், STEM துறையில் தங்கள் தொழிற்முறை வாழ்வைத் தொடர்ந்தவர்கள், பங்கேற்பாளர்களிடையே உரையாற்றி அவர்களின் அறிவியல் தொழிற்முறை வாழ்வைத் தொடர ஊக்குவித்தனர்.

**3.நாடு முழுவதும் கொண்டாடப்பட்ட தேசிய வாக்காளர் நாளின் கருப்பொருள் என்ன?**

அ. Electoral Literacy for Stronger Democracy ☑

ஆ. Voting Rights for All

இ. Ethical Voting

ஈ. Sab Se Pehle Voting




- தேசிய வாக்காளர் நாள், ஜன.25 அன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது, இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில் 2011 ஜனவரி 25 அன்று முதன்முதலில் கொண்டாடப்பட்டது. 1950 ஜன.25 அன்று இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது. இந்த ஆண்டின் (2020) வாக்காளர் நாள், பத்தாம் ஆண்டு கொண்டாட்டத்தையும் இந்திய தேர்தல் ஆணையத்தின் 70ஆவது ஆண்டையும் குறிக்கிறது.
- "வலுவான ஜனநாயகத்திற்கு தேர்தல் குறித்த அறிவு" என்பது நடப்பாண்டில் வரும் தேசிய வாக்காளர் நாளுக்கான கருப்பொருளாகும். புது தில்லியில் நடந்த கொண்டாட்டத்தின் முதன்மை விருந்தினராக இந்தியக்குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் கலந்துகொண்டார்.

**4.எம்மாநிலத்தின் வேளாண் வணிகம் மற்றும் ஊரக உருமாற்றத் திட்டத்திற்காக உலக வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

அ. குஜராத்

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. மத்தியபிரதேசம்

ஈ. ஹரியானா

- இந்திய அரசு, மகாராஷ்டிர மாநில அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை மகாராஷ்டிர மாநிலத்தின் வேளாண் வணிகம் மற்றும் ஊரக உருமாற்றத் திட்டத்திற்காக $210 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சந்தை அணுகலை அதிகரிக்கவும், மதிப்புச்சங்கிலிகளில் பங்கேற்கவும் இந்நிதி உதவும்.
- விவசாயத்தில் காலநிலை நெகிழ்திறன்மிக்க உற்பத்தி தொழில்நுட்பங்களை பின்பற்ற விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்தத் திட்டம், மகாராஷ்டிரா மாநிலத்தின் முப்பத்தாறு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். கிட்டத்தட்ட பத்து இலட்சம் விவசாய குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.எந்த இந்திய தனியார்துறை வங்கி, அண்மையில் தனது, 'முன்னோடி வங்கியியல் – Pioneer Banking' என்றழைக்கப்படும் செல்வ மேலாண்மை தளத்தை அறிமுகப்படுத்தியது?**

அ. ICICI வங்கி

ஆ. HDFC வங்கி

இ. ஆக்சிஸ் வங்கி

ஈ. இன்டஸ்இன்ட் வங்கி ☑

- முன்னணி தனியார்துறை வங்கியான இன்டஸ்இன்ட் வங்கி தனது உயர்–நிகர மதிப்புள்ள வாடிக் –கையாளர்களின் வங்கி தேவைகளுக்கு சேவைபுரிவதற்காக, 'முன்னோடி வங்கி – Pioneer Bank' என்ற செல்வ மேலாண்மை தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட செல்வ மேலாண்மைக்கான இந்தப் புதிய சேவை, வங்கியால் தனது வாடிக்கையாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் தனிப்பட்ட மற்றும் வணிக வங்கியியல் தயாரிப்புகளின் பிற தொகுப்புகளுடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இப்புதியசேவை, முக்கியமாக அதிக நிகர–மதிப்புள்ள தனிநபர் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டுள்ளது. மேலும், வாடிக்கையாளரின் இல்லங்களுக்கேச்சென்று நாளொன்றுக்கு ₹4 இலட்சம் வரையிலான இலவச வங்கியியல் சேவை அளிப்பதும் இதிலடங்கும். மேலும், அர்ப்பணிப்புடன் கூடிய செல்வ மேலாளர்கள் மற்றும் முதலீட்டு வல்லுநர்களின் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளும் இதில் வழங்கப்படுகிறது.

**6. WEFஇன் 'Lighthouse Network'இல் சேர்க்கப்பட்டதற்காக, சமீபத்தில் நடந்த WEF ஆண்டுக்கூட்டத்தில், விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்திய எஃகு ஆலை எது?**

அ. சேலம் எஃகு ஆலை

**ஆ. டாடா எஃகு ஆலை, கலிங்கநகர் ☑**

இ. விஜயநகர் எஃகு ஆலை

ஈ. விசாகப்பட்டினம் எஃகு ஆலை

TATA STEEL

- WEFஇன் 'Lighthouse Network'இல் சேர்க்கப்பட்டதற்காக, சமீபத்தில் நடந்த WEF ஆண்டுக்கூட்டத்தில் டாடா எஃகு ஆலை, கலிங்கநகர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கடந்த 2019 ஜூலையில், உலக பொருளாதார மன்றத்தின் பெருமைமிகு, 'Lighthouse Network'இல் சேர்க்கப்பட்ட முதல் மற்றும் ஒரே இந்திய உற்பத்தி ஆலையாக டாடா எஃகு ஆலை, கலிங்கநகர் ஆனது.

- உலகெங்கிலும் உள்ள பிற பத்து ஆலைகளும் இந்த வலையமைப்பில் சேர்க்கப்பட்டன. நெதர்லாந்தில் அமைந்துள்ள டாடா எஃகின் IJmuiden ஆலை, ஏற்கனவே இவ்வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

**7. சமீபத்தில், டிஜிட்டல் நாணய நிர்வாகத்திற்கான உலகளாவிய கூட்டமைப்பை அறிவித்த அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. உலகப் பொருளாதார மன்றம் ☑**

இ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ. உலக வர்த்தக அமைப்பு

WORLD ECONOMIC FORUM
COMMITTED TO IMPROVING THE STATE OF THE WORLD

- டிஜிட்டல் நாணயங்களை நிர்வகிப்பதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதில் கவனஞ்செலுத்திய முதல் உலகளாவிய கூட்டமைப்பாக உலகப்பொருளாதார மன்றம் ஆனது. சுவிச்சர்லாந்தில் உள்ள தாவோஸில் நடைபெற்ற WEFஇன் ஐம்பதாவது ஆண்டுக்கூட்டத்தின் கடைசி நாளில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த முயற்சி நிதி நிறுவனங்கள், அரசாங்க பிரதிநிதிகள் மற்றும் இந்தத் துறையில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான ஓர் உலகளாவிய தளத்தை உருவாக்கும்.

❖ உள்ளடக்கிய கொள்கைகள் மூலம் நிதியமைப்புக்கான அணுகலை அதிகரிக்கும் நோக்கத்துடன் இக்கூட்டமைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. கிரிப்டோகரன்சிகள் மற்றும் நிலையான நாணயங்கள் உள்ளிட்ட டிஜிட்டல் நாணயங்களின் நிர்வாகத்திலும் கவனம் செலுத்தப்படும்.

**8.குடியரசு நாள் கொண்டாட்டங்களில் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வதற்காக இந்தியா வந்த ஜெய்ர் மெசியாஸ் போல்சனாரோ, எந்த நாட்டின் அதிபராவார்?**




அ. அர்ஜென்டினா

**ஆ. பிரேசில் ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ஜெர்மனி

❖ பிரேசில் குடியரசுத்தலைவர் ஜெய்ர் மெசியாஸ் போல்சனாரோ, அண்மையில் தனது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னணி தொழிலதிபர்களுடன் இந்தியாவுக்கு வருகைதந்து இந்திய குடியரசு நாள் கொண்டாட்டங்களில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

❖ எண்ணெய் மற்றும் எரிவாயு, சுரங்கம் மற்றும் இணைய பாதுகாப்பு போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் பிரேசில் இடையே பதினைந்து ஒப்பந்தங்கள் கையெழுத்தடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ சமூகப்பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்கள், குற்றவியல் விஷயங்களில் பரஸ்பர சட்ட–உதவி, உயிரி – ஆற்றலில் ஒத்துழைப்பு உள்ளிட்ட ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2018 அக்டோபர் மாதத்தில், பிரேசிலின் அதிபரானார் போல்சனாரோ. இது, இந்தியாவுக்கு அவர் மேற்கொள்ளும் முதல் பயணமாகும்.

**9.சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா, அண்மையில் எந்தத் தெற்காசிய நாட்டில், 'Under the World' என்ற கருப்பொருளுடன் தொடங்கியது?**

அ. இலங்கை

**ஆ. வங்கதேசம் ☑**

இ. நேபாளம்

ஈ. இந்தியா

❖ சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா, அண்மையில் வங்கதேசத்தின் தலைநகரமான டாக்காவில், 'Under the World' என்ற கருப்பொருளின்கீழ் தொடங்கியது. வங்கதேசத்தின் மிகப்பெரிய திரைப்பட விழாக்களுள் ஒன்றெனக் கருதப்படும் இது, கடந்த 2008ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் மற்றும் பதின்ம பருவத்தினருக்காக பிரத்தியேகமாகக் கொண்டாடப்படும் ஒரே சர்வதேச விழாவாகும்.

❖ இந்த விழாவை வங்கதேசத்தின் குழந்தைகள் திரைப்பட சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. 39 நாடுகளைச் சேர்ந்த 173 படங்கள் இதில் திரையிடப்படவுள்ளன. 7 நாள் நீடிக்கும் இந்தத்திருவிழா, ஜனவரி 31ஆம் தேதி நிறைவடையவுள்ளது.

❖ 'வங்கதேசத்தின் தந்தை' என்றழைக்கப்படும் ஷேக் முஜிபுர் ரகுமானின் நூறாவது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், 'கோகா ஜொகோன் சோட்டோ சிலீன்' திரைப்படம் திரையிடப்பட்டது.

**10.ஆசுகஞ்ச்–அகவுரா சாலையை 4 வழிச்சாலையாக மேம்படுத்துவதற்காக, எந்த நாட்டோடு இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது?**

அ. மியான்மர்

**ஆ. வங்கதேசம் ☑**

இ. இலங்கை

ஈ. நேபாளம்




❖ ஆசுகஞ்ச் ஆற்றுத்துறைமுகத்திற்கும் வங்கதேசத்தின் அகவுராவுக்கும் இடையிலான 50.58 கி.மீ நீளச் சாலையை 4 வழிச்சாலையாக மேம்படுத்துவதற்காக, இந்தியா, சமீபத்தில், வங்கதேசத்துடன் ஒப்பந்தம் செய்தது. இது, கடந்த 2016ஆம் ஆண்டில், இந்தியா, வங்கதேசத்துக்கு வழங்கிய $2 பில்லியன் டாலர் கடன்தொகையின் ஒருபகுதியில் நிறைவேற்றப்படுகிறது.

❖ 50.58 கிலோமீட்டரில் 39 கி.மீ நீளச் சாலையை வங்கதேசத்தின் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையும் (RHD) ஆப்கான்ஸ் உட்கட்டமைப்பு என்ற இந்திய நிறுவனமும் இணைந்து மேம்படுத்தும் . சாலையின் மீதமுள்ள பகுதியை மேம்படுத்தும் பணியை, RHD மற்றும் இந்தியா – வங்கதேசத்தின் கூட்டுநிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டம் இருநாடுகளுக்கும் இடையிலான சாலை இணைப்பை மேம்படுத்துவதோடு தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இடையிலான பிராந்திய இணைப்பையும் எளிதாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## தமிழ்நாடு அரசின் குடியரசு நாள் சிறப்பு விருதுகள் - 2020

❖ கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்தியதில் மெச்சத்தக்க வகையில் பணியாற்றிய காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் பதக்கங்கள் வழங்கப்பட்டன. இவற்றை, திருப்பூர் மது விலக்கு காவல் ஆய்வாளர் சந்திரமோகன், திருச்சி மத்திய புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் இராஜசேகரன், பண்ருட்டி காவல் ஆய்வாளர் பூங்கோதை, விழுப்புரம் மத்திய புலனாய்வு காவல் உதவி ஆய்வாளர் அழகிரி, கும்பகோணம் மேற்குக் காவல் நிலைய தலைமைக்காவலர் பார்த்திபநாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

❖ சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சர் விருது – கோயம்புத்தூர் நகர காவல் நிலையம். இரண்டாவது பரிசு திண்டுக்கல் காவல் நிலையம், மூன்றாவது பரிசு தருமபுரி காவல் நிலையம்.

❖ அதிக உற்பத்தித்திறன்பெறும் விவசாயிகளுக்கான வேளாண்மை துறை சிறப்பு விருது – ஈரோடு மாவட்டம் சென்னிமலை குன்னாங்காட்டுவலசையைச் சேர்ந்த யுவக்குமாருக்கு வழங்கப்பட்டது.

- இதேபோன்று ஆழ்துளை கிணற்றில் விழுந்த குழந்தையை சாமர்த்தியமாக மீட்ட நாகை தீயணைப்பு வண்டி ஓட்டுநர் ராஜாவுக்கு வீரதீர செயலுக்கான 'அண்ணா பதக்கம்' வழங்கப்பட்டது. பொதுமக்கள் பிரிவில் ஏகேஷ், பிரிஸ்டன் பிராங்களின், வினித் சார்லிபன், ஈஸ்டர் பிரேம்குமார், தனலட்சுமி, வினோதினி, இந்திராகாந்தி மற்றும் பழனியப்பனுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்கப்பட்டது.

- கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது – திருச்சியைச் சேர்ந்த ஷாஜ் முகமதுவுக்கு வழங்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்தப்படும் அமைதி பேச்சுவார்த்தைகளில் பொதுமக்களிடையே மத நல்லுணர்வை ஏற்படுத்தியமைக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

---

- தமிழ்நாடு அரசு துறைகள் சார்பாக அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெற்றது. இதில் 16 அரசுத் துறைகள் பங்கேற்றன. அந்தந்தத்துறையின் திட்டங்களை விளக்கும் வகையில் ஊர்திகள் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. சிறப்பாக வடிவமைப்பு செய்யப்பட்டிருந்த காவல்துறையின் ஊர்திக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. அதில், குற்றங்களுக்கு முக்கிய துப்புகளை வழங்கும் CCTV பேரளவில் தயாரிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், பெருமைமிகு, 'பத்ம விபூஷன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட புகழ்பெற்ற இந்திய விளையாட்டு வீரர் / வீராங்கனை யார்?**

அ. சச்சின் டெண்டுல்கர்

ஆ. தன்ராஜ் பிள்ளை

**இ. M C மேரி கோம் ☑**

ஈ. அபினவ் பிந்த்ரா



- ஆறு முறை உலக சாம்பியனும் ஒலிம்பிய குத்துச்சண்டை வீராங்கனையுமான MC மேரி கோமுக்கு நடப்பாண்டு (2020) குடியரசு நாளன்று மதிப்புமிக்க, 'பத்ம விபூஷன்' விருது வழங்கப்பட்டது. 'இந்திய மாமணி'க்குப் பிறகு இந்தியாவின் 2ஆவது மிகவுயர்ந்த குடிமக்கள் விருதான இந்த, 'பத்ம விபூஷன்' விருது, நடப்பாண்டில் மொத்தம் ஏழு பிரபலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- முன்னாள் மத்திய அமைச்சர்கள் அருண் ஜெட்லி, சுஸ்மா சுவராஜ் மற்றும் ஜார்ஜ் பெர்னாண்டஸ் (மறைவுக்குப்பின்), உத்தரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பாடகர் சன்னுலால் மிஸ்ரா மற்றும் முன்னாள் மொரீஷியஸ் பிரதமர் அனிரூத் குக்நாத் ஆகியோர் இவ்விருதினை பெற்ற பிற நபர்களாவர்.

**2. 2020 குடியரசு நாளன்று, 'பத்ம பூஷன்' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை?**

அ. கச (14)

ஆ. கரு (15)

**இ. கசு (16) ☑**

ஈ. கஎ (17)

16

- 'பத்ம பூஷண்' விருதுக்கு 16 பிரபலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தம் 141 'பத்ம' விருது பெற்றவர்களுள், ஏழு 'பத்ம விபூஷன்', 16 'பத்ம பூஷன்' மற்றும் 118 'பத்மஸ்ரீ' விருது பெற்றவர்கள் இருந்தனர். 'பத்ம பூஷன்' விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபலங்களுள் பூப்பந்து வீராங்கனை P V சிந்து, கோவாவின் முன்னாள் முதலமைச்சர் மனோகர் பாரிக்கர் (மறைவுக்குப்பின்), இந்தியாவின் நவீன சட்டக்கல்வியின் தந்தை N R மாதவ மேனன் மற்றும் தொழிலதிபர்கள் ஆனந்த் மஹிந்திரா மற்றும் வேணு சீனிவாசன் ஆகியோர் அடங்குவர்.

**3. நடப்பாண்டின் (2020) 'தேசிய சுற்றுலா மாநாடு' நடைபெற்ற இந்திய நகரம் எது?**

அ. வாரணாசி

**ஆ. கோனார்க் ☑**

இ. சிம்லா

ஈ. லே



- 'தேசிய சுற்றுலா மாநாடு', அண்மையில், ஒடிசாவின் கோனார்க் நகரத்தில் நடத்தப்பட்டது. இந்த 2 நாள் மாநாட்டை, ஒடிசா மாநில அரசும் இந்திய வர்த்தகம் & தொழிற்துறை கூட்டமைப்பும் (FICCI) இணைந்து நடத்தியுள்ளன. மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் இந்த மாநாட்டில் பங்கேற்று, ஓராண்டில், நாட்டில் உள்ள 15 சுற்றுலாத்தலங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் பயணச் செலவுகளுக்கு சுற்றுலா அமைச்சகம் நிதியளிக்கும் என அறிவித்தார்.

- இத்தகைய சுற்றுலாப்பயணிகள் தங்கள் சொந்த மாநிலங்களுக்கு வெளியே பயணஞ்செய்து அந்தப் பயண புகைப்படங்களை அமைச்சகத்தின் இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சுற்றுலாத் தலங் –களை பிரபலப்படுத்தும் நோக்கில், ஒடிசா மற்றும் குஜராத்துக்கு இடையே ஒரு நோக்க ஆவணமும் (MoI) அப்போது கையெழுத்தானது.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மார்க் ருட்டே, எந்த நாட்டின் பிரதமராவார்?**

அ. ஜெர்மனி

**ஆ. நெதர்லாந்து ☑**

இ. பிரான்ஸ்

ஈ. இத்தாலி



- இரண்டாம் உலகப்போரின்போது யூதர்களைத் துன்புறுத்தியதற்காக நாட்டின் முதல் மன்னிப்பைக் கோரியதை அடுத்து, நெதர்லாந்தின் பிரதமர் மார்க் ருட்டே அண்மைச் செய்திகளில் காணப்பட்டார்.

- ஆஷ்விட்ஸில் உள்ள நாஜி வதை முகாம் விடுதலையின் 75ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு, ஆம்ஸ்டர்டாமில் நடந்த வருடாந்திர இனப்படுகொலை நினைவேந்தலில், இவ்விஷயத்தில், இதுவரை எந்தவொரு அரசாங்கமும் முன்வைக்காத வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் மன்னிப்பை அவர் கோரினார். நெதர்லாந்தில் வாழ்ந்த 1.4 மில்லியன் யூதர்களுள் 1.1 மில்லியனுக்கும் அதிகமான யூதர்கள் ஆஷ்விட்ஸ் வதை முகாமில், இரண்டாம் உலகப்போரின்போது கொல்லப்பட்டனர்.

**5.இந்தியாவின் ஆற்றலைக்கொண்டாடும், 'பாரத் பார்வ் – 2020' வருடாந்திர நிகழ்வை நடத்தும் நகரம் எது?**

அ. மும்பை

**ஆ. புது தில்லி ☑**

இ. அகமதாபாத்

ஈ. ஜெய்ப்பூர்



- 'பாரத் பார்வ் – 2020' வருடாந்திர நிகழ்வானது 2020 ஜனவரி 26 முதல் 31 வரை புது தில்லியில் கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வதற்கு இந்தியர்களை ஊக்குவிப்பதும், 'உங்கள் நாட்டைக் காணுங்கள்' மனப்பான்மையுடன் அவர்களை ஊக்குவிப்பதும் இவ்விழாவின் நோக்கமாகும். நடப்பாண்டு (2020) விழாவின் கருப்பொருள், 'ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்' & 'மகாத்மா காந்தியின் 150 ஆண்டுகளைக் கொண்டாடுவது' என அமைக்கப்பட்டுள்ளது.

❖ புது தில்லியில் செங்கோட்டைக்கு முன்னுள்ள கியான் பாதை மற்றும் செங்கோட்டை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த 6 நாள் நிகழ்வில், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆயுதப்படைகளின் கலாசார நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறும்.

**6.தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து இராஜ் நிறுவனம் (NIRDPR), சமீபத்தில், எந்த உலகளாவிய அமைப்புடன் இணைந்து, 'தகவல்தொடர்பு வள அலகு – Communication Resource Unit' என்றவொன்றை நிறுவியது?**

அ. உலக வங்கி

ஆ. UNICEF ☑

இ. UNESCO

ஈ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

❖ மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழுள்ள தன்னாட்சி அமைப்பான தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து இராஜ் நிறுவனம் (NIRDPR), அண்மையில், UNICEF (ஐ.நா., சிறுவர் நிதியம்) உடன் இணைந்து 'தகவல்தொடர்பு வள அலகு' ஒன்றை நிறுவியது. போஷான் அபியான், தேசிய சுகாதார இயக்கம் மற்றும் தூய்மை இந்திய இயக்கம் உள்ளிட்ட முன்னணி தேசிய திட்டங்களுக்கு தகவல் தொடர்பு ஆதரவை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையாக இந்த அலகு செயல்படும்.

❖ தகவல்தொடர்பு வள அலகு தற்போது ஆந்திரபிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. இது, பல்வேறு அரசாங்க துறைகளுக்கு திறன்மேம்பாடு மற்றும் ஆலோசனை உள்ளிட்ட தகவல்தொடர்பு ஆதரவை அளித்துவருகிறது.

**7.நூற்றுக்கும் மேற்பட்ட இனங்கள்கொண்ட, இந்தியாவின் முதலாவதும் மிகப்பெரியதுமான நடையுலா மேற்கொண்டு காணக்கூடிய, 'பறவைக்கூடம்', அண்மையில் எந்த நகரத்தில் திறக்கப்பட்டுள்ளது?**

அ. மும்பை ☑

ஆ. கௌகாத்தி

இ. பெங்களூரு

ஈ. திருவனந்தபுரம்



❖ மகாராஷ்டிர மாநிலத்தின் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே, நாட்டின் முதலாவதும் மிகப்பெரியதுமான நடையுலா மேற்கொண்டு காணக்கூடிய, 'பறவைக்கூட'த்தை மும்பையில் உள்ள வீரமாதா ஜீஜாபாய் போசாலே பூங்கா மற்றும் மிருகக்காட்சிச்சாலையில் (பொதுவாக பைகுல்லா மிருகக்காட்சிச்சாலை) திறந்துவைத்தார். 18,200 ச.அடிக்கும் அதிகமான பரப்பளவில் இந்தப் பறவைக்கூடம் அமைந்துள்ளது.

❖ இது, நூற்றுக்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான அயல்நாட்டு மற்றும் உள்நாட்டுப் பறவைகளின் இயற்கை சூழல் நிறைந்த இருப்பிடமாக இருக்கும். இந்தப் பறவைக்கூடம் வழியாக ஒரு சிறிய பாலம் செல்கிறது; அது, பொதுமக்கள் நடந்து செல்லவும் பறவைகளை பார்க்கவும் பயன்படும்.

**8.ஒரு நபரின் உயிரைக்காப்பாற்றுவதில் மனித இயல்புக்கான சிறப்பான செயலுக்காக ஒரு நபருக்கு வழங்கப்படும் தேசிய விருதின் பெயர் என்ன?**



**அ. ஜீவன் ரக்ஷா பதக்கம் ☑**

ஆ. ரக்ஷா புரஸ்கார்

இ. ஜீவன் சக்தி பதக்கம்

ஈ. பாரத் ஜீவன் பதக்கம்

- 2019ஆம் ஆண்டுக்கான ஜீவன் ரக்ஷா பதக்க வரிசையில் வழங்கப்படும் விருதுகளை 54 பேருக்கு வழங்குவதற்கு குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார். இதில் ஏழு பேருக்கு சர்வோட்டம் ஜீவன் ரக்ஷா பதக்கம், 8 பேருக்கு உத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம், 39 பேருக்கு ஜீவன் ரக்ஷா பதக்கம் ஆகியவை வழங்குவதும் அடங்கும். இதில் 5 விருதுகள், விருதாளர்களின் மறைவுக்குப்பின் வழங்கப்படும் விருதுகளாக உள்ளன.
- அசோக சக்ரா வரிசையில் வீரதீரச்செயல்களுக்காக வழங்கப்படும் ஜீவன் ரக்ஷா பதக்கங்கள், கடந்த 1961ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. விபத்துகள், மின்விபத்து, இயற்கைப்பேரிடர்கள் அல்லது மீட்புப்பணி போன்ற சம்பவங்களில் ஒருவரின் உயிரைக்காப்பாற்றுவதில் சிறப்பாக செயல்படுவோருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

**9.ஏழைகளுக்கு மானிய விலையில் உணவுவழங்குவதை நோக்கமாகக்கொண்ட, 'சிவ போஜன்' திட்டம் அண்மையில் எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டது?**



அ. உத்தரபிரதேசம்

ஆ. பீகார்

**இ. மகாராஷ்டிரா ☑**

ஈ. கர்நாடகா

- மகாராஷ்டிரா மாநில அரசு, ஏழைகளுக்கு ₹10'க்கு உணவு வழங்குவதை நோக்கமாகக்கொண்ட, 'சிவ போஜன்' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 71ஆவது குடியரசு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்கீழ், அனைத்து மாவட்டங்களிலும் இதற்கென நியமிக்கப்பட்ட மையங்களில், பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.
- ஏறக்குறைய 50, 'சிவ போஜன்' விற்பனை நிலையங்கள் சோதனை அடிப்படையில் அமைக்கப்பட்டு உள்ளன. கூடிய விரைவில் மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் இவை விரிவுபடுத்தப்படும்.

**10.அண்மையில் காலமான ஷெர் சிங் குக்கல் (Sher Singh Kukkal), எந்தத் துறைசார்ந்தவராக இருந்தார்?**



அ. அரசியல்

ஆ. விளையாட்டு

**இ. கலை ☑**

ஈ. வணிகம்

- 86 வயதான மூத்த கலைஞரும் சிற்பியுமான ஷெர் சிங் குக்கல், அண்மையில், புது தில்லியில் வயது மூப்பின் காரணமாக காலமானார். படம் வரைதல், ஓவியந்தீட்டல், சிற்பம், அச்சிடுதல் மற்றும் புகைப்படம் எடுத்தல் உள்ளிட்ட நுண்கலைகளின் பல கிளைகளில் சிறந்த அனுபவமுள்ள ஷெர் சிங் குக்கல், ஒரு குறிப்பிடத்தக்க கலைஞராக இருந்தார். சைனிக் பள்ளியிலும் அவர் கலைகளைக் கற்பித்துள்ளார்.
- 2008–09ஆம் ஆண்டில், மத்திய கலாசார அமைச்சகத்தால் ராஜீவ் காந்தி அறக்கட்டளை விருது மற்றும் காட்சிக்கலை புகைப்படமெடுத்தலில் சீனியர் பெல்லோஷிப் உள்ளிட்ட பல தேசிய மற்றும் சர்வதேச விருதுகளையும் அவர் வென்றுள்ளார்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.இந்திய அரசும் அஸ்ஸாம் மாநில அரசும், அண்மையில், எந்தப் பழங்குடி குழுவுடனான முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன?**

அ. போடோ ☑

ஆ. குக்கி

இ. ஆதி

ஈ. நிஷி




❖ இந்திய அரசாங்கமும் அஸ்ஸாம் மாநில அரசும், அண்மையில், போடோலாந்தின் தேசிய ஜனநாயக முன்னணியுடனான (NDFB) முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. போடோ பழங்குடியினர் குழு, அஸ்ஸாமிலிருந்து போடோலாந்தைப் பிரித்து தனிமாநிலமாக அறிவிக்கக்கோரி வந்தது. கிளர்ச்சியை வழிநடத்திய அனைத்து போடோ மாணவர் சங்கமும் (ABSU) ஒருங்கிணைந்த போடோ மக்கள் அமைப்பு என்ற மற்றொரு குழுவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

❖ போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணியின் 1500'க்கும் மேற்பட்ட போராளிகள் ஆயுதங்களுடன் சரணடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்காக ₹1500 கோடி ரூபாயை அரசு வழங்கியுள்ளது.

**2.அண்மையில், மேலவையை கலைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றிய மாநிலம் எது?**

அ. தெலுங்கானா

ஆ. மகாராஷ்டிரா

இ. ஆந்திரபிரதேசம் ☑

ஈ. கர்நாடகா

❖ அண்மையில் மேலவையை கலைப்பதற்கான தீர்மானத்தை ஆந்திர மாநிலத்தின் சட்டப்பேரவை நிறைவேற்றியது. இந்த முடிவை ஆளும் YSR காங்கிரஸ் கட்சியின் 133 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரித்தனர். ஆந்திர மாநில சட்டப்பேரவையின் மேலவையில், எதிர்க்கட்சியான தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பால், YSR காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய சில முக்கிய மசோதாக்களை மேலவையில் நிறைவேற்ற முடியாமல் போனது. இதையடுத்து, மேலவையை ஒட்டுமொத்தமாக கலைத்துவிட ஆளும் YSR காங்கிரஸ் அரசு முடிவு செய்துள்ளது.

❖ சந்திரபாபு நாயுடு தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான தெலுங்கு தேசம் கட்சிக்கு, மேலவையில் 58 இடங்களுள் 27 இடங்கள் உள்ளன. இது அண்மையில், ஆந்திரத்தின் தலைநகர் பரவலாக்கம் தொடர்பான 2 மசோதாக்களை கீழவையில் நிறைவேற்றியபின்னர், அதுகுறித்து மேலும் விவாதிக்க குழுவொன்றை அனுப்பியது.

**3.ஏர் இந்தியாவிலிருந்து அரசாங்கத்தின் எத்தனை சதவீத முதலீடுகள் திரும்பப்பெறப்படவுள்ளன?**

அ. 50%

ஆ. 60%

இ. 75%

ஈ. 100% ☑



❖ ₹60,000 கோடிக்கும் அதிகமாக பெருங்கடனில் சிக்கித்தவிக்கும் ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் 100% பங்குகளையும் விற்க மத்திய அரசு முடிவு செய்து அறிவிப்பு செய்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் 2ஆவது முறையாக ஏர் இந்தியாவை விற்பனை செய்ய அறிவிப்பு வெளியிடுகிறது மத்திய அரசு. கடந்த 2018ஆம் ஆண்டில் ஏர் இந்தியா நிறுவனத்தின் 76% பங்குகளை விற்பனை செய்து நிர்வாகத்தைத் தனியாருக்கு மாற்ற மத்திய அரசு அறிவிப்புசெய்தது.

❖ ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஆகியவற்றின் 100% பங்குகளையும், AI–SATS கூட்டு நிறுவனத்தில் உள்ள 50% பங்குகளையும் விற்பனை செய்யப்படவுள்ளது. ஆர்வமுள்ள நிறுவனங்கள், தகுதிவாய்ந்த தனிமனிதர்கள் வரும் மார்ச் 17ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்றும் தகுதியான நிறுவனங்கள் பட்டியல் மார்ச் 31ஆம் தேதி வெளியிடப்படும் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள நிறுவனங்களின் நிகர மதிப்பு முந்தைய வரம்பான ₹5000 கோடியிலிருந்து ₹3500 கோடியாக குறைக்கப்படுகிறது.


**4.மூன்றாவது உலக உருளைக்கிழங்கு மாநாடு – 2020ஐ நடத்தவுள்ள இந்திய நகரம் எது?**

அ. மும்பை

ஆ. அகமதாபாத்

**இ. காந்திநகர் ☑**

ஈ. சூரத்



❖ குஜராத் மாநிலம் காந்திநகரில் மூன்றாவது உலக உருளைக்கிழங்கு மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சிமூலம் தொடங்கிவைத்தார். முந்தைய இரண்டு உலக உருளைக்கிழங்கு மாநாடுகள், கடந்த 1999 மற்றும் 2008ஆம் ஆண்டில் நடைபெற்றது.

❖ புது தில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கவுன்சில் மற்றும் இந்தக்கவுன்சிலுக்கு உட்பட்ட சிம்லாவில் உள்ள மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி மையம் மற்றும் பெரு நாட்டின் லிமாவில் உள்ள சர்வதேச உருளைக்கிழங்கு மையம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்திய உருளைக்கிழங்கு சங்கத்தால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாடு, உருளைக்கிழங்கு ஆராய்ச்சியின் சாதனைகளை வெளிக்கொணரும் மற்றும் இந்தப் பத்தாண்டுக்கான வரைபடத்தையும் உருவாக்கும்.

**5.நீரில்மூழ்கி மறைந்திருந்து தாக்கும் INS கவராட்டி என்னும் போர்க்கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கவுள்ள இந்திய கப்பல் கட்டுநர் யார்?**

அ. மசகன் கப்பல் கூடம்

ஆ. கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனம்

இ. ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனம்

ஈ. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் ☑

❖ கொல்கத்தாவில் உள்ள பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனமான கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள், நீரில்மூழ்கி மறைந்திருந்து தாக்கும் INS கவராட்டி என்னும் போர்க்கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கவுள்ளதாக அண்மைய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'Project P28'இன்கீழ் இந்திய கடற்படைக்காக கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்களால் கட்டப்பட்ட நான்கு நீரில்மூழ்கி மறைந்திருந்து தாக்கும் போர்க்கப்பல்களில் கவராட்டி கடைசியாக உள்ளது.

❖ இலட்சத்தீவில் உள்ள தீவுகளின் பெயரிடப்பட்ட 'கமோர்டா', 'கடமத்' மற்றும் 'கில்தான்' ஆகிய மூன்றும் இதற்கு முன்னர் 2014–2017 வரையிலான காலகட்டத்தில் வழங்கப்பட்டது. இந்தப் புதிய INS கவராட்டி போர்க்கப்பல், 90% உள்நாட்டுக் கூறுகள்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து சோதனைகளும் நிறைவடைந்துள்ள நிலையில், மாத இறுதிக்குள் இந்தக்கப்பல் வழங்கப்படவுள்ளது.

**6.அண்மையில், ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் உருவம் பொறிக்கப்பட்ட உலகின் மிகச்சிறிய தங்கநாணயத்தை வெளியிடட்ட நாடு எது?**

அ. அமெரிக்கா

ஆ. சுவிச்சர்லாந்து ☑




இ. ஜெர்மனி

ஈ. பிரான்ஸ்

❖ அண்மையில் உலகின் மிகச்சிறிய தங்கநாணயத்தை சுவிச்சர்லாந்து அச்சிட்டுள்ளது. இதில், பிரபல அறிவியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் படம் பொறிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகச்சிறிய இந்த நாணயம் 2.96 மி.மீ விட்டத்துடனும் 0.063 கிராம் எடையுடனும் உள்ளதாக சுவிஸ் நாணயச்சாலை கூறியுள்ளது. இந்நாணயத்தின் மதிப்பு, 1/4 சுவிஸ் பிராங்குகள் அல்லது தோராயமாக ₹18.50 ஆகும்.

❖ ஐன்ஸ்டீன் தனது பதினேழாம் வயதில் சுவிச்சர்லாந்துக்கு வருகைதந்து அங்கு தனது கல்வியை நிறைவுசெய்தார். 1902ஆம் ஆண்டில் சுவிச்சர்லாந்து நாட்டின் குடிமகனாகவும் அவர் ஆனார். சுவிஸ் டென்னிஸ் நட்சத்திரமான ரோஜர் பெடரரின் படம் பொறித்த மற்றொரு நாணயமும் அச்சிடப்பட்டுள்ளது.

**7.பதவி விலகியதையடுத்து அண்மைச்செய்திகளில் காணப்பட்ட மர்ஜான் சாரக், எந்த நாட்டின் பிரதமராக இருந்தார்?**

அ. சுலோவேனியா ☑



ஆ. சுலோவாக்கியா

இ. செர்பியா

ஈ. குரோஷியா

❖ சுலோவேனியாவின் பிரதமர் மர்ஜன் சாரக் பதவி விலகியுள்ளார். கடந்த 2018ஆம் ஆண்டில் பிற கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்து பிரதமராக மர்ஜான் சாரக் பதவியேற்றார். எனினும், கடந்த நவம்பரில் எதிர்க்கட்சியான இடதுசாரி கூட்டணிக்கு வழங்கிய ஆதரவை திரும்பப்பெற்றது.

❖ இதனால் நாடாளுமன்றத்தில் மசோதாக்களைக் கொண்டுவருவதில் சிக்கல் அதிகரித்தது. அவரின் சிறுபான்மை அரசாங்கத்தில் நிதியமைச்சராக இருந்தவர் ஆண்ட்ரேஜ் பெர்டன்செல்ஜும், கூட்டணி கட்சிகளின் பூசலை அடுத்து அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக அண்மையில் அறிவித்தார்.

**8.இந்திய வங்கிகள் சங்கத்தின் (IBA) தலைமை நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. ரஜ்னிஷ் குமார்

ஆ. V G கண்ணன்

**இ. சுனில் மேத்தா ☑**

ஈ. ராகேஷ் சர்மா



❖ இந்திய வங்கியின் சங்கத்தின் அண்மைய அறிவிப்பின்படி, பஞ்சாப் தேசிய வங்கியின் முன்னாள் மேலாண்மை இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான சுனில் மேத்தா, IBAஇன் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்றுள்ளார். சுனில் மேத்தா, அண்மையில், பஞ்சாப் தேசிய வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

❖ இவர் இதற்கு முன்னர் இந்திய வங்கிகள் சங்கத்தின் தலைவர் பதவியை வகித்துள்ளார். அவருக்கு பதிலாக பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) தலைவர் ரஜ்னிஷ் குமார், 2019 அக்டோபரில் மாற்றப்பட்டார். தற்போது, கடந்த 2019 டிசம்பர் 31 அன்று பதவியேற்ற V G கண்ணனுக்கு பதிலாக சுனில் மேத்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

**9.எந்த இந்திய நாடகக் கலைஞருக்கு மதிப்புமிக்க பிரெஞ்சு கௌரவமான, 'Knight of the Order of Arts மற்றும் Letters' வழங்கப்படவுள்ளது?**

அ. நசீருதீன் ஷா

**ஆ. சஞ்சனா கபூர் ☑**

இ. கிரிஷ் கர்னாட்

ஈ. லில்லெட் துபே



❖ மூத்த நாடகக்கலைஞரும் ஹிந்தி நடிகர் சஷி கபூரின் மகளுமான சஞ்சனா கபூருக்கு, மதிப்புமிக்க பிரெஞ்சு கௌரவமான, 'Knight of the Order of Arts மற்றும் Letters' வழங்கப்படவுள்ளது. நாடகக் கலைகளுக்கு அவராற்றிய சிறந்த பங்களிப்புக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. தற்போது அலுவல்பூர்வ வருகையாக இந்தியாவுக்கு வருகைபுரிந்துள்ள பிரான்சின் கலாசார அமைச்சர் பிராங்க் ரைஸ்டர், இதற்கென திட்டமிடப்பட்ட விழாவில், சஞ்சனா கபூருக்கு, இந்த மதிப்புமிக்க விருதை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**10.பிட்ஸ்பர்க் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இரண்டாமிடம் பிடித்த இந்திய ஸ்குவாஷ் வீரர் யார்?**

அ. ஜோஷ்னா சின்னப்பா

ஆ. தீபிகா பல்லிக்கல்

**இ. சௌரவ் கோசல் ☑**

ஈ. சுனைனா குருவில்லா



- பிட்ஸ்பர்க் ஓப்பன் ஸ்குவாஷ் இறுதிப்போட்டியில், எகிப்திய வீரர் ஃபாரெஸ் டெசௌகியிடம் தோற்று, இந்திய ஸ்குவாஷ் வீரர் சௌரவ் கோசல் இரண்டாமிடம் பெற்றார். 1 மணி 13 நிமிடங்கள் நீடித்த அரை இறுதி ஆட்டத்தில் எகிப்தின் உமர் மொசாட்டை வீழ்த்தி, இறுதிப்போட்டிக்கு முன்னேறிய பின்னர், சௌரவ் கோசல் 7–11, 4–11, 9–11 என்ற கணக்கில் எகிப்திய வீரரிடம் தோற்றார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த விலங்கை நமீபியாவிலிருந்து இந்திய வாழ்விடத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு அண்மையில் இந்திய உச்சநீதிமன்றம் அனுமதித்தது?**



அ. ஆப்பிரிக்க யானை

ஆ. ஆப்பிரிக்க சிங்கம்

**இ. ஆப்பிரிக்க சிறுத்தை ☑**

ஈ. ஆப்பிரிக்க காண்டாமிருகம்

❖ ஆப்பிரிக்க சிறுத்தைகளை இந்தியாவுக்குக்கொண்டுவருவதற்கு உச்சநீதிமன்றம் அனுமதியளித்தது. இந்தியாவில் சிறுத்தைகள் கிட்டதட்ட அழியும் நிலையிலிருப்பதால், ஆப்பிரிக்க நாடான நமீபியாவில் இருந்து சிறுத்தைகளை இந்தியாவுக்குக்கொண்டுவர அனுமதி வழங்குமாறு தேசிய சிறுத்தைகள் பாதுகாப்பு அமைப்பு உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது. இம்மனுவை விசாரித்த இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி SA போப்டே தலைமையிலான அமர்வு இதற்கு அனுமதி வழங்கியது.

❖ இந்தத் திட்டம் தொடர்பாக தேசிய சிறுத்தைகள் பாதுகாப்பு அமைப்புக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதற்காக மூன்று பேர்கொண்ட நிபுணர்கள் குழுவையும் உச்சநீதிமன்றம் அமைத்துள்ளது. இந்தக்குழுவில், இந்திய வனவிலங்குகள் அமைப்பின் முன்னாள் இயக்குநர், இந்திய வனவிலங்குகள் அமைப்பின் தலைமை இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் DIG ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**2.இந்தியாவில் உள்ள எத்தனை ஈரநிலங்கள், சமீபத்தில், 'ராம்சார் தளம்' பட்டியலில் சேர்க்கப்பட்டன?**




அ. 8

**ஆ. 10 ☑**

இ. 12

ஈ. 14

❖ மேலும் பத்து இந்திய ஈரநிலங்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக ராம்சாரால் அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் சமீபத்தில் அறிவித்தார். இதன்மூலம், ராம்சார் தள குறியீடுகொண்ட ஈரநிலங்களின் எண்ணிக்கை தற்போது மொத்தம் 37 ஆக உயர்ந்துள்ளது. 37 ராம்சார் தளங்களால் உள்ளடக்கப்பட்ட மொத்த பரப்பளவானது ஒரு மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

❖ இப்புதிய அறிவிப்பில், நந்தூர் மாதமேஷ்வரின்மூலம் தனது முதல் ராம்சார் தள குறியீட்டை மகாராஷ்டிர மாநிலம் பெறுகிறது. பஞ்சாப் மேலும் 3 தளங்களைச்சேர்த்து, மொத்தம் 6 தளங்களைக்கொண்டுள்ளது, உத்தரபிரதேசம் 6 புதிய தளங்களைச் சேர்த்து, மொத்தம் 7 ராம்சார் தளங்களைக்கொண்டுள்ளது. ராம்சார் மாநாட்டில், உறுப்புநாடுகள் தங்கள் ஈரநிலங்களின் சூழல் முக்கியத்துவத்தை பாதுகாக்கும் நோக்கோடு கையெழுத்திட்டன.

**3. 2020 குடியரசு நாள் அணிவகுப்புக்கான சிறந்த அலங்கார ஊர்தி விருதை வென்ற மாநிலம் எது?**

அ. ஒடிசா

ஆ. உத்தரப்பிரதேசம்

இ. குஜராத்

**ஈ. அஸ்ஸாம் ☑**




❖ "தனித்துவமான கைவினைத்திறன் மற்றும் கலாசாரத்தின் நிலம்" என்ற கருப்பொருளைக்கொண்ட அஸ்ஸாம் மாநிலத்தின் அலங்கார ஊர்தி, '2020ஆம் ஆண்டு குடியரசு நாள் அணிவகுப்புக்கான சிறந்த அலங்கார ஊர்திக்கான விருதை' வென்றது. ஒடிசா மற்றும் உத்தரபிரதேச மாநிலத்தின் அலங்கார ஊர்திகள் கூட்டாக இரண்டாவது இடத்திற்கு தேர்வுசெய்யப்பட்டன.

❖ பகவான் லிங்கராஜாவின் புகழ்பெற்ற ருகுண ரத யாத்திரையை ஒடிசா மாநிலம் காட்சிப்படுத்தியது. கலாசார மற்றும் மதஞ்சார் சுற்றுலாவை 'சர்வ தர்ம சம பாவ்' என்ற கருப்பொருளுடன் உத்தரபிரதேசம் மாநிலம் காட்சிப்படுத்தியது. தேசிய பேரிடர் நிவாரணப் படையின் அலங்கார ஊர்தி மற்றும் 'ஜல் ஜீவன் திட்ட'த்தை சித்தரித்த ஜல் சக்தி திட்டம் சிறப்புப்பரிசைப் பெற்றது.

**4.அண்மையில் அமெரிக்காவுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா

ஆ. ஜெய் சங்கர்

**இ. தரஞ்சித் சிங் சந்து ☑**

ஈ. விஜய் கோகலே



❖ மூத்த தூதர் தரஞ்சித் சிங் சந்து, அண்மையில், அமெரிக்காவுக்கான அடுத்த இந்திய தூதராக நியமிக்கப்பட்டார். அவர் அமெரிக்காவுக்கான முந்தைய இந்திய தூதராக இருந்த ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுக்கு பதிலாக நியமிக்கப்படுகிறார். 1988ஆம் ஆண்டைய இந்திய வெளியுறவு சேவை (IFS) அதிகாரியான தரஞ்சித், தற்போது, இலங்கையில் இந்திய உயராணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ முன்னதாக, வாஷிங்டன் DCஇல் உள்ள இந்திய தூதரகத்தில், துணைத்தலைவராக 2013 முதல் 2017 வரை 4 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். 2009 & 2011'க்கு இடையில் வெளியுறவு அமைச்சகத்தில் இணைச்செயலாளராகவும் (ஐ.நா அவை) பணியாற்றியுள்ளார்.

**5.அண்மையில் தொடங்கப்பட்ட புவன் பஞ்சாயத்து வலைத்தளத்தின் புதிய பதிப்பு 3.0, எந்த அமைப்பின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது?**

**அ. இந்திய விண்வெளி ஆய்வுமையம் ☑**

ஆ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு

இ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்

ஈ. பாரத் மின்னணு லிட்

❖ இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) உருவாக்கிய செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் உதவியுடன் செயல்படும் புவன் பஞ்சாயத்து வலைத்தளத்தின் 3.0 பதிப்பை மத்திய வெளியுறவு அமைச்சர் ஜிதேந்திர சிங் அண்மையில் வெளியிட்டார்.

❖ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் கிராமப் பஞ்சாயத்துகளை வளர்த்தெடுப்பதற்கான செயல்முறைக்கு உதவுவதற்கு புவி–இடஞ்சார்ந்த (geo–spatial) சேவைகளை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த உயர்–தெளிவுத்திறன்கொண்ட செயற்கைக்கோள் தரவு சிறந்த காட்சிப்படுத்துதலை வழங்கும் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல் & கண்காணிப்புக்கும் இது உதவும்.

**6.எந்த ஹிந்திச்சொல்லை, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் பதிப்பகம், '2019ஆம் ஆண்டுக்கான ஆக்ஸ்போர்டு ஹிந்திச்சொல்' எனத் தேர்வுசெய்துள்ளது?**

அ. சம்ரிதி

**ஆ. சம்விதான் ☑**

இ. சம்பிரதி

ஈ. சம்மான்




❖ கடந்த ஆண்டின் (2019), ஆக்ஸ்போர்டு ஹிந்திச்சொல்லாக, 'சம்விதான்' தேர்வுசெய்யப்பட்டுள்ளது என, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் அறிவித்துள்ளது. ஹிந்தியில், 'சம்விதான்' என்றால், அரசியல் சாசனம் என்று பொருள். இச்சொல், 2019இல் அதிகமானோரை ஈர்த்துள்ளது. அரசியல் சாசனம் என்பது, மக்களாட்சி, மதச்சார்பின்மை, நீதி, விடுதலை, சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியது. 'அடிப்படை கொள்கைகளின் முதுகெலும்பு' எனவும், 'சம்விதான்' சொல்லுக்குப் பொருள்கூறலாம்.

**7.சீனியர் தேசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்ற இந்திய வீரர் யார்?**

அ. சௌரவ் கோத்தாரி

**ஆ. பங்கஜ் அத்வானி ☑**

இ. துவாஜ் ஹரியா

ஈ. கீத் சேத்தி



❖ உலகத்தரம் வாய்ந்த இந்திய வீரரும், 23 முறை உலக சாம்பியனுமான பங்கஜ் அத்வானி, சமீபத்தில், சீனியர் தேசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பில் பட்டத்தை வென்றதன்மூலம் தனது 33ஆவது தேசிய பட்டத்தை வென்றார். புனேவில் நடைபெற்ற போட்டியில், பங்கஜ் தனது சகநாட்டு வீரரான சௌரவ் கோத்தாரியை 5–2 என்ற கோல் கணக்கில் இறுதிப்போட்டியில் வீழ்த்தினார். முன்னதாக நடைபெற்ற அரையிறுதியில், குஜராத்தின் துவாஜ் ஹரியாவை 5–0 என்ற கோல் கணக்கில் பங்கஜ் வீழ்த்தினார்.

❖ இது பங்கஜ் அத்வானியின் 33ஆவது தேசிய பட்டம் மட்டுமல்ல, இது அவரது 10ஆவது சீனியர் பட்டமும் கூட. பிப்.3 முதல் அதே இடத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள தேசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பிலும் பங்கஜ் அத்வானி பங்கேற்பார்.

**8.அண்மையில் எந்த நகரத்தில், மாற்றுத்திறனாளிகள் மேம்பாடு அடைவதற்கான கூட்டு பிராந்திய மையத்தை மத்திய சமூக நீதி அமைச்சர் திறந்துவைத்தார்?**

அ. ஹைதராபாத்

**ஆ. போர்ட் பிளேர் ☑**

இ. சென்னை

ஈ. கொச்சி




❖ மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் தாவர் சந்த் கெலாட், அண்மையில், அந்தமான் மற்றும் நிக்கோபாரில் அமைக்கப்பட்ட போர்ட் பிளேர் நகரத்தில் கூட்டு பிராந்திய மையத்தை திறந்து வைத்தார். அங்குள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் மேம்பாடு, மறுவாழ்வு & வளர்ச்சி ஆகியவற்றை வழங்குவதை இம்மையம் கொண்டுள்ளது.

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளங்களை உருவாக்குவதற்காக சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் இந்த மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில், போபால், பாட்னா, கௌகாத்தி மற்றும் அகமதாபாத் உள்ளிட்ட பல நகரங்களில் இம்மையம் உள்ளது.

**9.எந்த மாநிலத்தில், 'சர்தார் வல்லபாய் படேல் அதிகாரமளித்தல் மற்றும் வாழ்வாதார மையம்' எனப் பெயரிடப்பட்டுள்ள பழங்குடியினருக்கு பயிற்சியளிப்பதற்கான திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்பட உள்ளது?**

அ. உத்தரபிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. சத்தீஸ்கர்



❖ குஜராத் மாநிலத்தின் கெவாடியாவில் உள்ள ஒற்றுமை சிலைக்கு அருகே, 'சர்தார் வல்லபாய் படேல் அதிகாரமளித்தல் மற்றும் வாழ்வாதார மையத்தை' அமைப்பதற்கான அடிக்கல்லை மத்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் நாட்டினார். பல்வேறு திறன் மேம்பாட்டுத்திட்டங்கள்மூலம் இளைஞர்கள், விவசாயிகள், சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சியளிப்பதே இந்த மையத்தின் நோக்கமாகும்.

❖ GMR வரலட்சுமி அறக்கட்டளை, சர்தார் சரோவர் நர்மதா நிகம் லிட் உடன் இணைந்து இம்மையத்தை நிறுவுவதற்காக ₹15 கோடிக்கும் அதிகமாக முதலீடு செய்துள்ளது.

**10.அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா ☑**

ஆ. ஜெய் சங்கர்

இ. தரஞ்சித் சிங் சந்து

ஈ. விஜய் கோகலே



- அமெரிக்காவுக்கான இந்தியாவின் முன்னாள் தூதரான ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்க்லா, அண்மையில், இந்தியாவின் அடுத்த வெளியுறவுச் செயலாளராக பொறுப்பேற்றுள்ளார். விஜய் கோகலேவுக்குப்பிறகு இந்தப்பதவிக்கு வந்துள்ள அவர், நிலையான ஈராண்டு காலத்திற்கு இந்தப்பதவியை வகிப்பார். ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, 1984ஆம் ஆண்டைய இந்திய வெளியுறவு சேவை (IFS) அதிகாரி ஆவார்.

- கடந்த 2019 செப்டம்பரில் அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்ற, "ஹவுடி மோடி" நிகழ்ச்சியை ஷ்ரிங்லா வெற்றிகரமாக தொகுத்து வழங்கினார். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியா – வங்கதேசம் நில எல்லை ஒப்பந்தம், 2015இல் அவர் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தபோது வங்கதேசத்துக்கான இந்திய உயராணையராகவும் அவர் பணியாற்றினார்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. NITI ஆயோக் வெளியிட்ட டிசம்பர் மாதத்திற்கான முன்னேற விரும்பும் மாவட்டங்களின் பட்டியலில் முதலிடம் பிடித்த மாவட்டம் எது?**

அ. கிருஷ்ணகிரி (தமிழ்நாடு)

ஆ. ஹைலாகண்டி (அஸ்ஸாம்)

இ. பெலங்கிர் (ஒடிசா)

**ஈ. சந்தௌலி (உத்தரபிரதேசம்) ☑**

❖ இந்திய அரசாங்கத்திற்கான மதியுரையகமான NITI ஆயோக், கடந்த 2019 டிசம்பரில் ஆறு வளர்ச்சிப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியதன் அடிப்படையில் முன்னேற விரும்பும் (aspirational) மாவட்டங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது. இந்தத் தரவரிசையின்படி, உத்தரபிரதேசத்தின் சந்தௌலி மாவட்டம் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து ஒடிசாவின் பெலாங்கிர் மாவட்டம் இரண்டாமிடத்திலும் உள்ளது. ஆந்திரபிரதேசத்தின் YSR மாவட்டம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

❖ கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் ஆறு வளர்ச்சிப்பகுதிகள்: நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, விவசாயம் மற்றும் நீர்வளம், நிதியியல் உள்ளடக்கம், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் உட்கட்டமைப்பு.

**2.அண்மையில், அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு திருத்த மசோதா–2020இன்படி, சட்டரீதியான கருக்கலைப்புக்கான உச்சபட்ச வரம்பு என்ன?**



அ. 20 வாரங்கள்

ஆ. 28 வாரங்கள்

**இ. 24 வாரங்கள் ☑**

ஈ. 32 வாரங்கள்

❖ கருவுற்ற பெண்களின் கருவைக்கலைப்பதற்கு 20 வாரமாக இருக்கும் உச்சவரம்பை 24 வாரமாக உயர்த்தும் மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு திருத்த மசோதா 2020'க்கு (Medical Termination of Pregnancy (Amendment) Bill) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது, 1971ஆம் ஆண்டின் மருத்துவரீதியிலான கருக்கலைப்பு சட்டத்தை திருத்தியமைக்கும். இம்மசோதா, வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3.இந்திய கடலோரக் காவல்படை, அண்மையில் தனது, 'C–448' அதிவேக படகுகளை எந்த நகரத்தில் பணிக்கமர்த்தியது?**



அ. கொச்சி

ஆ. விசாகப்பட்டினம்

**இ. மங்களூரு ☑**

ஈ. சென்னை

❖ இந்திய கடலோரக்காவல்படை அண்மையில் தனது, 'C–448' அதிவேக படகுகளை கர்நாடகாவின் மங்களூருவில் பணிக்கமர்த்தியது. C–448 என்பது ஓர் இடைமறிப்புக் கப்பலாகும். இது, மங்களூரு கடற்கரையில், ரோந்து & மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும். உலகத்தரம்மிக்க வழிசெலுத்தல் மற்றும் தகவல்தொடர்பு சாதன அமைப்புகளையும் இக்கப்பல் கொண்டுள்ளது. தேடல் நடவடிக்கைகள் மற்றும் கடல்சார் கண்காணிப்புக்கும் இது உதவுகிறது.

**4.அண்மையில் கொல்கத்தாவில் காலமான துஷார் காஞ்சிலால், எதனைச் சார்ந்தவர்?**




அ. விளையாட்டு வீரர்

**ஆ. சமூக சேவகர் ☑**

இ. அரசியல்வாதி

ஈ. இசைக்கலைஞர்

❖ 85 வயதான மூத்த சமூக சேவையாளரும் கல்வியாளருமான துஷார் காஞ்சிலால், அண்மையில் கொல்கத்தாவில் காலமானார். 1986ஆம் ஆண்டில், இந்தியாவின் நான்காவது மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான, 'பத்மஸ்ரீ' விருதைப்பெற்றவர். 'மாஸ்டர்மொஷாய்' என்று அன்பாக அழைக்கப்பட்ட இவர் கொல்கத்தாவின் ரங்கபெலியா சிற்றூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியராக பணியாற்றினார். சுந்தரவன சதுப்புநிலக்காடுகளை அழிக்கும் சிக்கலை அடிப்படையாகக்கொண்ட 'சுந்தரவனங்களைக் கொன்றது யார்?' என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார்.

**5. 2020 – உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?**




அ. Towards 2030 Goals: Making the Decade Count ☑

ஆ. Sustainable Energy across the world

இ. Attaining SDG before 2030

ஈ. Energy and Resources for all

❖ உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாடு (WSDS) என்பது எரிசக்தி மற்றும் வள நிறுவனத்தால் (TERI) ஏற்பாடு செய்யப்படும் ஒரு வருடாந்திர முதன்மை நிகழ்வாகும். இந்த ஆண்டுக்கான (2020) உச்சி மாநாடு, புது தில்லியில் உள்ள இந்திய வாழ்விட மையத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 'Towards 2030 Goals: Making the Decade Count' என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இந்த மூன்று நாள் நிகழ்வு, ஜன.29 அன்று தொடங்கப்பட்டது.

❖ பன்னாட்டுத் தலைவர்களுக்கு காலநிலை பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக, கடந்த 2001ஆம் ஆண்டு முதல் பதினெட்டு ஆண்டுகளாக இவ்வுச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு (2020), ஐ.நா அவையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை பூர்த்தி செய்வதற்கான பன்னாட்டு முயற்சிகளை மையமாகக்கொண்டு இந்நிகழ்வு நடைபெறுகிறது.

**6.சூரஜ்குந்த் சர்வதேச கைவினைத் திருவிழா என்பது எந்த மாநிலத்தால் ஏற்பாடு செய்யப்படுகிற முதன்மையான ஆண்டு நிகழ்வாகும்?**

அ. உத்தரபிரதேசம்

**ஆ. ஹரியானா ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. சத்தீஸ்கர்




❖ 34ஆவது சூரஜ்குந்த் சர்வதேச கைவினைத் திருவிழாவானது வரும் பிப்.1–16 வரை ஹரியானாவின் சூரஜ்குந்தில் நடைபெறவுள்ளது. இது ஹரியானா மாநில அரசால் ஏற்பாடுசெய்யப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும். ஹிமாச்சலபிரதேச மாநிலம், இந்த ஆண்டுக்கான (2020) திருவிழாவின் சிறப்பு கவனம் பெறும் மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக பல்வேறு கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது, மாநிலத்தின் சுற்றுலாத்திறனை வெளிப்படுத்தவும், அதிகமான மக்களை மாநிலத்தை நோக்கி ஈர்க்கவும் உதவும்.

**7. Transparency Internationalஇன் அண்மைய ஆய்வின்படி, வரவுசெலவுத்திட்டம் (budget) உருவாக்கும் நடைமுறைகளில் எந்த மாநிலம் முதலிடத்தில் உள்ளது?**

অসম চৰকাৰ

அ. ஒடிசா

ஆ. ஆந்திரபிரதேசம்

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. மேற்கு வங்கம்

सत्यमेव जयते

GOVERNMENT OF ASSAM

❖ சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனமான டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நடத்திய அண்மைய ஆய்வின்படி, வரவுசெலவுத்திட்டத்தை உருவாக்கும்போது பின்பற்றப்பட்ட சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் அஸ்ஸாம் மாநிலம் முதலிடத்திலுள்ளது. மாநிலங்களை தரவரிசைப்படுத்துவதற்கான நான்கு அளவுருக்களை இந்த ஆய்வு பரிசீலித்தது. அவை: வெளிப்படைத்தன்மை, வரவுசெலவுத்திட்ட செயல்முறை, வரவுசெலவுத்திட்டத்துக்கு பிந்தைய நிதி மேலாண்மை மற்றும் வரவுசெலவுத்திட்டத்தை மிகவும் வெளிப்படையான மற்றும் குடிமக்களுக்கு உகந்ததாக மாற்றுவதற்கான முயற்சிகள்.

❖ கோவா, மகாராஷ்டிரா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் இந்தப்பட்டியலில் பின்தங்கியுள்ளன என்றும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

**8.தாய்லாந்தில் ஐ.நா. வசிப்பிட ஒருங்கிணைப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட இந்தியர் யார்?**

**அ. கீதா சபர்வால் ☑**

ஆ. ஜெய் சங்கர்

இ. தரஞ்சித் சிங் சந்து

ஈ. விஜய் கோகலே



- இந்தியாவின் கீதா சபர்வால் அண்மையில், தாய்லாந்தின் ஒப்புதலோடு தாய்லாந்தில் ஐ.நா., வசிப்பிட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார். கீதா சபர்வால், இலங்கையில், ஐக்கிய நாடுகள் அவையை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைதி மற்றும் மேம்பாட்டு ஆலோசகராக பணியாற்றிவந்தார். ஐ.நா வசிப்பிட ஒருங்கிணைப்பாளர்கள் ஐ.நா வளர்ச்சி அமைப்பின் பிரதிநிதிகளும் ஐ.நா. நாட்டின் அணிகளின் தலைவர்களுமாவர். 2030ஆம் ஆண்டுக்குள்ளான நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதில் அவர்கள் உறுப்புநாடுகளுக்கு உறுதுணையாக நிற்கின்றனர்.

**9.அமேசான் இந்தியா, சமீபத்தில், கிழக்கு இரயில்வேயுடன் கூட்டிணைந்து எந்த இரயில் நிலையத்தில் pick–up kiosk – பொருட்களை எடுத்துச் செல்வதற்கான சிறுகடையை அமைத்தது?**

அ. சேலம் சந்திப்பு

ஆ. பிதன் நகர்

**இ. சியால்தா ☑**

ஈ. மதுரை சந்திப்பு




- மின்னணு–வணிக நிறுவனமான அமேசான் இந்தியா, அண்மையில் கிழக்கு இரயில்வேயுடன் கூட்டு சேர்ந்து, கொல்கத்தாவில் அமைந்துள்ள சியால்தா இரயில் நிலையத்தில் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான சிறுகடையை அமைத்தது.

- அமேசான் நிறுவனத்தின் வலைத்தளம் அல்லது செயலியில் பொருட்களை வாங்கும்போது, பொருட்கள் பெற்றுச்செல்வதற்கான இடமாக வாடிக்கையாளர்கள் ரயில் நிலையத்தை தேர்ந்தெடுப்பதன்மூலம், அவர்கள் தங்களின் பொருட்களை ரயில் நிலையத்திற்கு வந்து வசதியாக எடுத்துச் செல்லலாம். கடந்த 2019ஆம் ஆண்டில், இந்திய இரயில்வேயுடன் கூட்டிணைந்து மும்பையில் உள்ள நான்கு இரயில் நிலையங்களில் அமேசான் நிறுவனம் pick–up kiosk'களை அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

**10.எந்தப் பன்னாட்டு திறன்பேசி நிறுவனம், அண்மையில், IITT ஹைதராபாத்துடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. சயாமி (Xiaomi)

**ஆ. ஒப்போ (Oppo) ☑**

இ. ஹுவாவே (Huawei)

ஈ. விவோ (Vivo)

- வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் ஒத்துழைப்பு நல்குவதற்காக ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பன்னாட்டு திறன்பேசி நிறுவனமான ஒப்போ கையெழுத்திட்டுள்ளது. IITஇன் ஆராய்ச்சி & மேம்பாட்டுத் துறைக்கும், ஒப்போ இந்தியாவின் தலைவருக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, பட செயலாக்கம், 5G நெட்வொர்க்குகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்களில் ஈராண்டுகளுக்கு கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 35ஆவது இந்திய சர்வதேச தோல் கண்காட்சி பிப்.01–03 வரை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ளது. இந்திய தோல் ஏற்றுமதி தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் விதமாகவும், இந்தியாவை முதலீடு மற்றும் உற்பத்திக்கு உகந்த இடமாக மாற்றுவதோடு, வடிவமைப்பு மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான மையமாகவும் மாற்றும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கண்காட்சி சென்னையில் நடத்தப்படுகிறது.